Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஜன.03–09,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 290

## விமான வேட்டை



## கல்யாணத்தில் புலிகள்



## உண்மைச் சம்பவம் கடற்பரப்பில் சோகம்

1999

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தேவையானது செயலே

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

புத்தாண்டு வாழ்த்துக்கள்
கூறுவது சம்பிரதாயம்!

வசீகரிக்குமளவுக்கு
இந்தப் புத்தாண்டும்
சமாதானத்தை
சாதிக்கப் போவதில்லை!

பேச்சுக்கான விருப்பங்கள்
வெறும் உதட்டளவில்தான்!
போருக்கான ஏற்பாடுகளே
பேருக்கமாக நடக்கின்றன!

காலவரையறையுடன்
புலிகளுடன் பேசலாம்
என்கிறார் ஜனாதிபதி!

ஐக்கிய தேசியக் கட்சி
தீர்வில் உடன்படாவிட்டால்
புலிகளுடன் பேசுவதற்கு
கையில் ஏதுமில்லை
என்கிறார் நீதியமைச்சர்!

கையில் திட்டம்
இல்லாதபோது
காலவரையறைவிதித்து
எதைப் பேசுவது?

அரசுக்குள்ளிருந்தே
முரண்பாடான
குரல்களை கேட்கிறோம்!

தமிழ்க்கட்சிகளும்
தமிழ் மக்களும்
பொறுமையோடு இருந்தால்
தீர்வு கிட்டும் என்று
நீதியமைச்சர் கூறியுள்ளார்!

தமிழ் மக்களைவிட
பொறுமைசாலிகள்
யாருள்ளனர்?

சுதந்திரம் பற்றி
பேச்செழுந்தபோதே,
பிரிட்டிஷ்காரர்களிடம்
எமக்குரியதை
வெட்டொன்று
துண்டு ரெண்டாக
கேட்காமல் விட்டதில்
தொடங்கிய பொறுமை
இன்றுவரை நீள்கிறது!

50 ஆண்டுகளாக
மகா பொறுமை காக்கும்
தளராத மனத்தினர்
தமிழ்பேசும் மக்கள்!

எத்தனை கலவரங்கள்
எத்தனை துயர்கள்
எத்தனை இழப்புக்கள்!

பொறுமை பற்றி
எடுத்துக் கூறுமளவுக்கு
அனுபவமும் தகுதியும்
உள்ளவர்களிடமே
பொறுமை பற்றி
கூறுவானேன்?

இதற்கு மேலும்
பொறுமை பற்றி
தமிழ் பேசும் தரப்புக்கு
கூற முற்படுவது
கிண்டல் போலவே
எண்ணத் தோன்றும்!

எப்படியோ இந்த ஆண்டும்
போர் ஆண்டாகவே
கழியப் போகிறது!

பேச்சுக்குரிய
ஒரே வழியான
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தத்தை
அரசு ஏற்க மறுக்கிறது!

எத்தனையோ நாடுகள்
தாமாக முன்வந்து
விருப்பம் தெரிவித்தும்
அரசின் போக்கில்
திருப்பம் ஏற்படவில்லை!

அப்படி மறுப்பதற்கு
காரணம் என்னவென்றும்
அரசு இதுவரை
தெளிவாக கூறவில்லை!

சமபலமான
இருசக்திகள் பேசினால்
தமக்குள்ளேயே
தீர்வுகாண்பது அரிது!

பேசுவதும், பின்னர்
முறிவதுமாகவே இருக்கும்.

விடாக் கண்டன்
கொடாக் கண்டன்
நிலையே காணப்படும்!

ஜனாதிபதி கூறும்
மூன்றாம் நபர்
அனுசரணை என்பது
தரகர் வேலை போன்றது!

50 வருடமாக
தீராத பெருநோயை
தரகர் மூலம்
தீர்க்க முடியாது!

பாவம் அந்த
தரகர்
இரு தரப்புக்குமிடையே
பந்தாடப்படுவார்!

பேச்சில் அவர்
கலந்து கொள்ள முடியாது!
ஆதலால் பேச்சில்
முரண்டு பிடிப்பது
யார் என்பதும்
வெளியுலகுக்கு
தெரியவே வராது!

இங்கு தேவை
தரகரல்ல!
தக்க தீர்ப்பாளரே
தேவை!
அதுதான் மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம்!

அதற்கு அரசை
இணங்கவைக்க
சமாதான விரும்பிகள்
இந்த ஆண்டிலாவது
முன்வரவேண்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## தியானத்தின் மகிமை



இறைவனால் இவ்வுலகில் படைக்கப் பெற்றவை யெல்லாமே ஓரறிவில் இருந்து ஆறறிவு வரை பெற்றவையே. மலைகள், மரங்கள், மந்தைகள், மனிதர்கள் எல்லாமே இவற்றிற்குட்பட்டவைதான்.

ஐந்தறிவு பெற்ற மந்தைகளில் இருந்து, பரிணாமம் பெற்றவனே மனிதன். அதனாற்தான் மனிதன் 'சிரிக்கத் தெரிந்த விலங்கு' என்றும் 'சிந்திக்கத் தெரிந்த விலங்கு' என்றும் அழைக்கப்படுகிறான்.

நம் சிந்தனை தெளிவானால், நன்மை செய்ய இயலுகின்றது. நல்ல சிந்தனை உருவாக மனம் தூய்மையடைதல் வேண்டும். மனம் தூய்மையடையச் சிறந்த வழி தியானம்.

இத் தியானத்தை வலியுறுத்தும் மதம் இந்துமதம். இந்து மதத்திற் கூறப்பட்டுள்ளவாறு தியானத்தை நாம் தினமும் செய்து வந்தால், நாம் நிச்சயம் இம்மையிலும், மறுமையிலும் மேன்மையுறலாம்.

தொகுப்பு:- ஸ்ரீப்ரியா சிவபாலன், காரைதீவு.

## சிறப்புறு ரமழான்

இறை வழிபாட்டுக்கும் அல்லாஹ்வின் கட்டளைக்கும் மனப்பூர்வமாய்த் தலை சாய்த்து அடி பணிவதற்கும் ஒரு மனிதனுக்கு தகுந்த பயிற்சி தேவைப்படுகிறது.

இந்தப் பயிற்சியைப் பெறுவதற்கு நோன்பு நோற்பதும் ஒரு வழியாகும். நம் நடைமுறை வாழ்வில் பயிற்சிதரும் பாங்கு நோம்புக்கே உரியதாகும்.

மனிதன் ஒழுக்கம், நற்குணம், அறநிலை அடைய வேண்டும் என்பதே நோன்பின் நோக்கமாகும். இதனைத் தான் பின்வரும் இறைமறை வசனம் வலியுறுத்துகின்றது:

"கெட்ட கருமங்களை அகற்றி இறை அச்சமுள்ள பரிசுத்தவான்களாய்த் திகழ நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது."

அல்குர்ஆன் (2: 183)

தீயவை களைந்து நன்மை புரிந்து சீரிய வழியில் மனிதனைச் செயற்படத் தூண்டுவது குர்ஆன் உபதேசத்தின் நோக்கமாகும்.

ஆகவே புனித மிகு ரமழானில் நோன்பு நோற்று சிறப்புறுவோம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.287



### பரிசுக்குரிய கவிதை

## வழி செய்வீர்!!

பட்டிகளாய் அடைபட்டு
பட்டினியால் வதைபட்டு
காத்திருந்து கண்டதென்ன?

நேற்றுவரை போர் ஆண்டு!
சேர்ந்திருந்த சொந்தங்களும்
சென்றதெங்கே செம்மணியோ?

வாழ்வுக்காய் வழிதேடி
விழிநோகப் பார்த்தென்ன?
விடிகின்ற பொழுதிலேனும்
வழி ஒன்று செய்வீரோ?

து. சர்மிளாதேவி- கலஹா.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**இதுதான் தீர்வா?**

ஏரோது காலமா?
இடி அமீன் காலமா?-இல்லை
இருபதாம் நூற்றாண்டில்,
ஈழத்தின் கோலமா?

திருமதி. ராஜேஸ்வரி கிருஷ்ணன்- பூவரசன்குளம், வவுனியா.

**யுத்த வடுக்கள்**

சூடானும் சோமாலியாவும்
இனிமேல் இவர்களிடம்
தோற்கக் கூடும்!

வே. தருமலிங்கம்- வீரபுரம்.

**முகாம்!**

முகாமுக்குள்
உணவை
எதிர்பார்த்தா...?
உறவை
எதிர்பார்த்தா?

கயல் வண்ணன்- வவுனியா.

**விளம்பரம்**

அனுதாபத்துக்கு
உரியவர்களாக
அழைக்கப்பட்டு,
அனுபவத்திற்கு
உதாரணமாக
அடைக்கப்பட்டோம்...!

செ. ஞானராசா- சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

**நாளை**

தென்றலாய் தவழும்
இம் மலர்களை
புயலாக மாற்றவா
இம் முட்கம்பி வேலிகள்?

'மட்டு நகர் நர்மி'- மட்டக்களப்பு.

**தேவைதானா?**

வேலிகள் இங்கே பயிரைமேய- சின்ன
பயிர்கள் எமக்கு ஏனிந்தத் தடை வேலி!

'நேரியகுளம் சந்திரன்'- வவுனியா.

**அக்கிரமம்!**

வீட்டில் சிரிக்க வேண்டியவர்கள்
கூட்டில் சிரிக்கின்றார்கள்!

அ. சத்தியாகோ- கண்டி.

**அவலம்**

இன நெருக்கடியால்
அகதி...
இட நெருக்கடியால்
அவதி!

வை. சித்திகிருஷ்ணா, பாண்டிருப்பு-01.

**அனாதை...**

முட்கம்பிகளை
முற்றுகையிட்டு
முகவரிகள்...
தேடுவோம்...!

எஸ்.பி. பாலமுருகன்- பதுளை.

**மன உறுதி**

பேரினவாதிகள் இகழ்ந்தாலும்
மித வாதிகள் மறந்தாலும்
காத்திருப்போம் உறுதியோடு
காலம் பதில் சொல்லும் வரை!

எஸ்.எம். நவரட்ணம்- அக்கரப்பத்தனை.

**இரு நாடு?**

"ஒரு மொழி இரு நாடு"
சொல்லி வைத்தார் கொல்வின் ஆர்.டி...!
ஒரு முள் வேலி இரு நாடு.
சொல்லி வைப்போம் சிரியுங்க(டா)டி.

கவிஞர் 'திக்கவயல்'- மன்னார்.

# கவிதைப் போட்டி இல.290



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 09.01.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.290
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## ரெலோ நிலைப்பாடு

ரெலோ இயக்கம் தற்போது எடுத்துவரும் அரசியல் நிலைப்பாடுகள் பாராட்டத்தக்கவை. கடந்தகாலத்தில் ரெலோ புலிகளைத் திட்டித் தீர்த்தது. புலிகள் ரெலோவை தாக்கினார்கள். ரெலோ அரசோடு நின்று புலிகளைத் தாக்கியது. புலிகளும் பிரேமதாசா அரசுடன் பேச்சு நடத்தும்போது ஏனைய இயக்கங்களை தாக்கினர். இவையெல்லாம் கடந்த காலமாக மறந்துவிட்டு, இன உரிமைக்காக ஒன்றுபட வேண்டியதே இன்றுள்ள பணியாகும். அந்த ரீதியில் ரெலோ மேற்கொள்ளும் இன்றைய நிலைப்பாடுகள் ஏனைய தமிழ்க் கட்சிகளிடமிருந்து மாறுபட்டுள்ளதோடு பாராட்டத்தக்கதாக உள்ளன. ஆனால், தற்போதும் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு பகுதிகளில் படையினருடன் இணைந்து ரெலோ செயற்படுவதை நிறுத்தினால்தான் அந்த நிலைப்பாடு இதய சுத்தியுடனானதாக இருக்கும். படையினருடன் விரோதம் கொள்ளத் தேவையில்லை. அவர்களது பங்காளிகளாக இல்லாமல் ஒதுங்கிக் கொள்ளலாமே! ரெலோ யோசிக்குமா?

த. விஜயகுமார், வவுனியா.

## ஓடி ஒளிந்தனர்

அமெரிக்காவின் கொலை பாதகச் செயலை இலங்கை அரசு ஏதோ சிறு விவகாரம் போல கண்டித்தது. முஸ்லிம்களைக் காக்க வந்த இரட்சகர்கள்கூட ஒரு எதிர்ப்பு ஊர்வலம் நடத்தக்கூட இயலாதவர்களாக ஓடி ஒளிந்துவிட்டனர். தேர்தலில் வாக்குக் கேட்கத்தான் முஸ்லிம் காவலர் வேஷமா? முஸ்லிம் உலகுக்கே அமெரிக்கா சவால் விடுத்திருக்கிறது. அகில உலக முஸ்லிம்களும் ஒன்றுபட்டு எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டும்; கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிட முடியாவிட்டாலும், அதன் முன்னாலாவது ஆர்ப்பாட்டமாயினும் நடத்தியிருக்கலாம்.

எம். சாஜகான், கல்முனை.



## பூத்தூவிய வானூர்திகள்

முரசே!

வான் புலிகள் பூத்தூவியதை நேரில் கண்டவர்கள் நாம். மாவீரர் தினமன்று அக்காட்சியை நம் கண்கள் கண்டன. புலிகளிடம் வானூர்திகள் உண்டு என்பதை நூறுவீதம் உறுதிப்படுத்துவதாக முதலில் தெரிவித்தது முரசுதான். 'இப்படி அடித்துக் கூறுகிறீர்களே, பொய்யாக இருந்தால் என்ன செய்வது?' என்று நான்கூட நினைத்தேன். கண்களால் கண்டபோது உடனே முரசின் ஞாபகம்தான் வந்தது. நான் கொழும்பில் இருந்தவரை முரசு உடன் கரம் கிடைக்கும். தற்போது தாமதமாகவே கிடைக்கிறது. இக் குறையை நிவர்த்தி செய்யவும்.

. சி. ரவிக்குமார், முல்லைத்தீவு.

## பாராளுமன்ற முழக்கங்கள்

பாராளுமன்றத்தைப் பயன்படுத்துவது என்றால், அங்கு சென்று ஆளில்லாத சபையில் தொண்டை தண்ணிவற்ற கத்துவது என்றே தமிழ்க் கட்சிகள் நினைக்கின்றன. தொண்டாவின் நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் சபைக்கு வந்தபோது சபையில் இருந்த ஆளும் தரப்பினர் ஆக 16 பேர் மட்டுமே. சில சமயம் கலந்துகொண்டோர் போதாது என்று சபையே ஒத்திவைக்கப்படுவதாகவும் அறிகிறோம். இந்தச் சபையில் போய்ப் பேச்சு போட்டி வைப்பதை விடுத்து, இந்த சபை உறுப்பினர்கள் என்பதால் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இன உரிமைக்கு பங்காற்றினாலேயே போதுமானது.

இ. குருபரன், வவுனியா.

செம்மணியை
தோண்டத்தான்
போகிறார்களாம்?
எப்போது,
புதைகுழியின் வயிறுகளை
சுத்தமாக்கிய பின்னரா?
அதற்கென்ன,
அப்போதுகூட
சந்தேகம் தெரியாது.
நாம் கூறியே
தோண்டினர் பாரீர்
என்றதானே
தமிழ்க் கட்சிகள்
போட்டி போட்டு
உரிமை கோரும்!
இல்லாவிட்டால்
இத்தனை காலம்
பொறுத்திருப்பார்களா?

இ.விஜயலட்சுமி- யாழ்ப்பாணம்.

முரசே!

'இடி அமீன்' மிரட்டல் எம்மையே கலக்குகிறது. உகண்டா மக்கள் எப்படித்தான் தாங்கினரோ? விறுவிறுப்பாக தரும் ரசிகனின் பாணியே தனிதான்.

சா. கீதா, அவிசாவளை.

## யார் சார்பாக?

'மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்' ஏற்படாமல் முட்டுக்கட்டை போடு வோரை தமிழ் மக்கள் மன்னிக்க மாட்டார்கள். வெளிநாடுகளே மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று கூறும்போது, இங்கு சிலர் அது சாத்தியமா? என்று ஆராய்ச்சி செய்வது யார் சார்பாக?

மு. கனகரத்னம், கொழும்பு-12

சம்பந்தர்
மூன்றாம் நபர்
அனுசரணை என்கிறார்.
சங்கரி
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் என்கிறார்.
இதில் யார் கூறுவது
கூட்டணியின்
கருத்து?

மா. சிலோஜன்- மட்டக்களப்பு.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல்:- 074-513266

### இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* இரா. மோசஸ், கொழும்பு.
* என்.எஸ்.முஸம்மில், புதிய காத்தான்குடி-06.
* எம். ஜவாத், புத்தளம்.
* திருமதி சங்கர், செங்கலடி.
* நஸ்மியா நியாஸ், உடத்தலவின்ன.
* ம. பாபு, நீர்கொழும்பு.
* திவாகரன், அமெரிக்கா.
* அ. அன்னலெட்சுமி, சேனையூர்.
* பா. ராஜன், ஜெர்மன்.
* எஸ். லோகநாதன், சுவிற்ஸர்லாந்து.
* அ. ஜெகதீஸ்வரன், புசல்லாவ.
* பா. ஷர்மிளா, பண்டாரவளை.
* பி. மூர்த்தி, கினிகத்தேனை.
* இரா. விமலேஸ்வரன், டிக்கோயா.
* கே. ரத்தினவேல், கனடா.
* பூ. ராஜசிங்கன், நோர்வே.
* எம். கார்த்திக், ஃபிரான்ஸ்.
* செல்வி தமயந்தி, அவுஸ்திரேலியா.
* பிரமிளா அழகசுந்தரம், பசறை.
* வி. தங்கராசன், பதுளை.
* தி. செந்தில்நாதன், தலவாக்கலை.
* எஸ். அரசகுமார், கல்முனை-02.
* எம். மருவியா, காலி.
* ஆர். தேவேந்திரம், இலண்டன்.
* பி. பொன்னுத்துரை, உக்குவலை.
* ஆர். அசோக்குமார், டிக்கோயா.
* எம். நஜீமா, சவுதி அரேபியா.
* செ. சீலன், குவைத்.
* நிரோ, வத்தளை.
* ஜோசப், கண்டி.
* சி. பெருமாள், வவுனியா.
* சு. தவலிங்கம், யாழ்ப்பாணம்.
* எம். செவ்வந்தி, மல்லாவி.
* சி. அகிலேஸ்வர சர்மா, தருமபுரம்.
* கே. சிவப்பிரகாசம், மட்டக்குளி.



படிப்பகம்

www.padippakam.com

# நெடுந்தீவு ஈ.பி.டி.பி. முகாம்!

# செய்தி ஊடகங்கள் நடத்திய 'தாக்குதல்!'

யாழ் குடாநாட்டின் தீவுப்பகுதிகளில் ஒன்றான நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. முகாம் புலிகளால் தாக்கப்பட்டதாகவும், நாற்பதுக்கு மேற்பட்டோர் பலியானதாகவும் செய்திகள் வெளியாகின. நூறுபேர் பலியானதாகவும் 27.12.98 அன்று தனியார் வானொலிகளில் முக்கிய செய்தியாவும் கூறப்பட்டது. மறுநாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வெளியாகியது.

உண்மையில் நடந்தது என்ன?

நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் எவருமே இரவு நேரங்களில் தங்குவதில்லை. அலுவலகம் மூடியே இருக்கும்.

27.12.98 அன்று அதிகாலையில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலர் புலிகளைக் கண்டுள்ளனர். தம்மைத் தாக்குவதற்கே வருகிறார்கள் என்று நினைத்து அவர்கள் கண்ணில் படாமல் சென்றுள்ளனர்.

பின்னர் நெடுந்தீவில் உள்ள தமது தொலைத் தொடர்பு சாதனம் மூலம் ஊர்காவற்துறையில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு தகவல் அனுப்பியுள்ளனர். 'புலிகள் வந்துள்ளனர். உதவி தேவை' என்று கூறிவிட்டு தொலைத் தொடர்பு கருவியின் இயக்கத்தை நிறுத்திவிட்டனர்.

தொடர்ந்து தொலைத் தொடர்பு கருவி இயங்கினால், தாம் இருக்கும் இடத்தை அலைவரிசை மூலம் புலிகள் கண்டு கொள்வர் என்றே நிறுத்தினர்.

### தொடர்பு நிறுத்தம்

தொலைத் தொடர்பு நிறுத்தப்பட்டதால் அதன் பின்னர் ஊர்காவற்துறை ஈ.பி.டி.பி.க்கும், நெடுந்தீவு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுக்கும் இடையே தொடர்புகள் ஏதுமில்லாமல் போனது. அங்கு என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை.

அதனால் படையினருக்குத் தகவலை தெரிவித்துவிட்டு, கடற்பாதையூடாக படகுகளில் நெடுந்தீவு செல்வதற்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஓடுப்பட்டுத் திரிந்தனர்.

இந்த அமளி ஏனைய இயக்கங்களுக்கும் தெரிந்ததால், என்ன பிரச்சனை என்று விசாரித்தனர். நெடுந்தீவில் புலிகள் புகுந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது என்று ஈ.பி.டி.பி.யினர் கூறியிருக்கின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஊடாக கொழும்புக்கு அத் தகவல் கிடைத்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அத்தகவலை ஈ.பி.டி.பி. தலைவர் தேவானந்தாவுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். யாழ் ரெலிகொம் தொலைபேசிகள் அன்றைய தினம் காலையில் இயங்கவில்லை. அதனால் தேவானந்தாவுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து தகவல் வரவில்லை.

### செய்திகள் பரவின

தனியார் தொலைபேசி ஒன்றின் ஊடாக சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கு அவரது கட்சியினர் தகவல் கூறியிருந்தனர். தேவானந்தாவுக்கு தகவலை கூறிய சுரேஸ் பின்னர் செய்தி ஊடகங்களுக்கும் அத்தகவலை கூறியிருக்கிறார். நெடுந்தீவில் தமது உறுப்பினர்கள் நூறுபேர் வரை இருப்பதாக தேவானந்தா தன்னிடம் கூறிய செய்தியையும் சுரேஸ் பத்திரிகைகளுக்கு கூறியுள்ளார்.

அப்படியே செய்திகள் பரவ, யார் செய்தியை முந்தித் தருவது என்ற போட்டியில், செய்தியை சரியாக உறுதிப்படுத்தாமலேயே இரண்டு தனியார் வானொலிகள் கூறி முடித்தன. அதிலும் ஒரு வானொலிச் செய்தியறிக்கையில் என்னென்ன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் கற்பனையில் கூறிமுடித்துவிட்டனர்.

27.12.98 அன்று மாலைதான் உதவிக்கு சென்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நெடுந்தீவை அடைந்தனர். பலர் பலியாகி இருக்கலாம் என்று நினைத்தபடி சென்றவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அங்கு மோதல் எதுவும் நடக்கவில்லை. ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் எவருக்கும் சிறு கீறல்கூட இல்லை.

### உள்ளே புலிகள்

நெடுந்தீவுக்குள் தற்போதும் புலிகள் இருக்கின்றனர். முன்னர் கடற்படையினர் நெடுந்தீவில் நிலைகொண்டிருந்த போதும் நெடுந்தீவு பனங்காடுகளில் புலிகள் தங்கியிருந்தனர். அங்கு தேடுதல் நடத்துவது கடினமானதாகும்.

நெடுந்தீவிலிருந்து கடற்படையினர் சென்ற பின்னர் கடந்த இரண்டு மாதங்களாக ஈ.பி.டி.பி.யினர் தங்கியுள்ளனர். இந்த இரண்டு மாதங்களிலும் ஈ.பி.டி.பி. புலிகள் மோதல் எதுவும் நடக்கவில்லை.

ஈ.பி.டி.பி. கூட்டம் ஒன்று நடத்தியதாகவும், அதில் புலிகள் தாக்கியதில் இரு ஈ.பி.டி.பி.யினர் பலியானதாகவும் வெளியான செய்தியும் தவறானது.

### தாக்குதல் நடக்கலாம்

சில வருடங்களுக்கு முன்னர் நெடுந்தீவில் புலிகள் ஈ.பி.டி.பி.யினரைத் தாக்கினர். ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் பலியானார்.

நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள்மீது புலிகள் தாக்குதல் நடத்தும் சாத்தியங்கள் உள்ளன. ஆனால் இதுவரை அவ்வாறான தாக்குதல் எதுவும் நடக்கவில்லை.

தமக்கு எதிரான சக்திகளே தாக்குதல் நடந்ததாகக் கதை கட்டிவிட்டதாக ஈ.பி.டி.பி. குற்றம் சாட்டியுள்ளது. ஆயினும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலரும் முன்னுக்குப்பின் முரணான கதைகளை சக இயக்கத்தினருக்கும், நிருபர்களுக்கும் கூறியுமுள்ளனர்.

எனினும் முற்றிலுமே கற்பனையான செய்திகள் வெளியானது ஆச்சரியமே. குறிப்பிட்ட சில நிருபர்களே ஒன்றுக்கு மேற்பட்ட செய்தி நிறுவனங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் செய்தி தருபவர்களாக உள்ளனர். அதனால் ஒரு நிருபர் செய்யும் தவறு பல்வேறு செய்தி நிறுவனங்களை குழப்பிவிடுகிறது. தவறான செய்தி ஒன்று பல நிறுவனங்கள் ஊடாக ஒரே சமயத்தில் வெளியாகும் நிலையும் ஏற்படுகிறது.

நடக்காத ஒரு சம்பவத்தை எப்படி நடந்தது என்னும் விபரிப்புக்களோடு நம் நாட்டு அரச சார்பற்ற தமிழ் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டது இதுவே முதல்தடவையாகும்.

நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி. முகாம்மீது செய்தி நிறுவனங்கள் ஒரு 'பாரியதாக்குதலை' நடத்தி முடித்துள்ளன.

ஈ.பி.டி.பி. விடுத்த மறுப்பை செய்தி ஊடகங்கள் வெளியிட்டன. அதேசமயம் தாம் வெளியிட்ட செய்தி பற்றி அந்நிறுவனங்கள் வாசகர்களுக்கு எதனையும் கூறவில்லை. அதனால் தாக்குதல் நடந்ததாக செய்தி ஊடகங்கள் கூறியது உண்மையா? நடக்கவில்லை என்று ஈ.பி.டி.பி கூறியது உண்மையா? என்று வாசகர்கள் குழம்பிப் போனார்கள்.

நெடுந்தீவில் இதுவரை ஈ.பி.டி.பி.யினர் மீது புலிகள் எத்தகைய தாக்குதலையும் நடத்தவில்லை என்பதை 'முரசு' ஊர்ஜிதம் செய்கிறது. ■

## இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிர்ப்பு

### அவுஸ்திரேலிய ஒருங்கிணைப்புக்குழு முடிவு!

அவுஸ்திரேலியாவுக்கு வருகை தரும் இலங்கை கிரிக்கெட் அணியை வரவேற்க இலங்கைத் தமிழர்கள் செல்ல வேண்டாம் என்று அவுஸ்திரேலிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் அவுஸ்ரேலிய பணியகம் விடுத்துள்ள அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

"எதிர்வரும் 1999 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் சிறீலங்காவின் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளை எதிர்த்து மோதவுள்ளது.

இங்குள்ள தமிழர்களில் சிலர் இப்போட்டிகளைப் பார்வையிட முண்டியடிப்பதோடு, வரவேற்பதற்கான ஆயத்தங்களை செய்வதையும் அறிய முடிகிறது.

கிரிக்கெட் அணிக்கு ஆதரவளிப்பதால் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் என்னவென்று சிந்தியுங்கள். கிரிக்கெட் என்பது வெறும் விளையாட்டல்ல. அது அனைத்துலக அரங்கில் அரசியல் ஊடகமாகவும் பயன்படுகிறது.

சிறீலங்கா தன் நற்பெயரினை அனைத்துலக அரங்கில் வளர்த்தெடுக்க தற்போது பயன்படுத்தும் இன்னொரு ஆயுதம் கிரிக்கெட்.

கிரிக்கெட் அணியில் உள்ளவர்கள் நல்லவர்களாக இருக்கலாம். முத்தையா முரளிதரன் போன்ற தமிழர்களாகவும் இருக்கலாம். அவை இங்கு பிரச்சனைகளல்ல. நாம் எழுப்பும் கேள்வி, எந்த நாட்டை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர் என்பதே.

தென்னாபிரிக்க நிறவெறி அரசு நிற ஒதுக்கல் கொள்கையை கடைப்பிடித்தபோது தென்னாபிரிக்க வீரர்கள் அனைத்துலக அரங்கில் புறக்கணிக்கப்பட்டனர். அப்போது விளையாட்டு வேறு, அரசியல் வேறு என்று உலகம் வாய்மூடி மௌனித்துப் போகவில்லை.

இலங்கை அரசுக்கு அனைத்துலக அரங்கில் தனது விளையாட்டு வீரர்களை அனுப்பத் தகுதியில்லை என்று முதற்குரல் அவுஸ்திரேலியாவில் எழட்டும்!" இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது எதிர்ப்பை எவ்வாறு தெரிவிக்கப் போகிறார்கள் என்பதை அவர்கள் வெளியிடவில்லை. ●

## மலையகத்தில் தனியான சிங்களக் கட்சி?

### உரிமையைக் காக்க அவசியமாம்!

"இந்நாட்டின் மலையகத்தில் வாழும் பௌத்த சிங்கள மக்களின் நலன்களைப் பேணுவதற்கென தனியானதோர் அமைச்சர் நியமிக்கப்படுவது அவசியம்!" இவ்வாறு ஒரு கோஷம் வலுவடையத் தொடங்கி இருக்கிறது. தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் தொண்டமான் அண்மையில் வெளியிட்ட கருத்தைத் தொடர்ந்தே இக்கோரிக்கை வலுவடையத் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது.

"இந்த நாட்டின் இரு பெரும் அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியோதான் ஆட்சிபீடம் ஏறுகின்றன. ஆனால் எந்தக் கட்சி ஆட்சியில் அமர வேண்டும் என்பதை நானே நிர்ணயிக்கிறேன்!" என்று அண்மையில் திரு.தொண்டமான் கூறியிருந்தார். இக்கூற்றினால் சில பௌத்த சிங்கள இயக்கங்கள் சீற்றமடைந்துள்ளன.

"தொண்டமான் கூறுவதில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. ஆக 18 சத விகிதமான தமிழர்கள் அங்கம் வகிக்கும் சில தமிழ்க் கட்சிகளிடம், தமது அரசியல் இலாபத்துக்காக, சிங்களத்தலைவர்கள் பிச்சையெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது வெட்கக்கேடானது. இத்தகைய இழிநிலையைப் போக்கடிக்க, சக்தி வாய்ந்த மூன்றாவது அணி ஒன்று உருவாக்கப்படுவது அவசியம்.

அது தவிர மலையக பௌத்த சிங்கள மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற உடனடியாக கண்டிய அலுவல்களுக்கான தனியான ஓர் அமைச்சு நிறுவப்படவேண்டும்!"

இவ்வாறு ஆங்கிலப் பத்திரிகையான ஐலண்டில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஐலண்ட்' நிறுவனத்தின் சிங்கள பத்திரிகையான 'திவயின' முரசுமீது தாக்குதல் தொடுத்து கட்டுரை வெளியிட்டுள்ளது. ●

## பௌத்த சங்கங்கள் கொதிப்பு

### அரசு பணிந்து விட்டுக் கொடுப்பு

"நுவரெலியாவுக்கு அண்மையிலுள்ள சீதா எலியாவில் இராமர் கோவில் கட்டுவதை அனுமதிக்க முடியாது. இதற்கென இப்பிரதேசத்தில் 35 ஏக்கர் காணியை அரசாங்கம் வழங்கியதும் கண்டிக்கத்தக்கது. இத்தகைய நடவடிக்கை இந்நாட்டுக் கலாசாரத்துக்கும் பௌத்த மதத்துக்கும் குந்தகம் ஏற்படுத்திவிடும்." இவ்வாறு பல பௌத்த சங்கங்கள் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

'இந்துக் கோவில்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்கள் ஆகியவற்றின் ஆக்கிரமிப்புக்கு எதிரான பௌத்த சங்கங்கள்' என்ற அமைப்பு அண்மையில் கொழும்பு-பொறளையிலுள்ள பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் ஒரு கண்டனக் கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்தில் உரையாற்றிய அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் செயலாளர் ஜகத்சீல குலதிலக கூறியதாவது:

"இந்துக் கோவில் ஒன்றைக் கட்டுவதற்கு அரசாங்கம் இத்தகைய பெரும்பரப்பான காணியைக் கொடுத்தமை எமது எதிர்காலச் சந்ததியினருக்குச் செய்த பெருந்துரோகமாகும். அரசியல்வாதிகள் தேர்தல்களில் வாக்குகளைப் பெறுவதற்காக பௌத்த சிங்களவர்களின் உரிமைகளைத் தொடர்ந்து விற்று வருகின்றனர்."

கண்டி தேசனரக்ஷக சங்கத்தின் செயலாளர், உடவத்த நந்த தேரோ உரையாற்றும் போது, "அமைச்சர் தொண்டமான் மலையகத்தில் சிங்களவர்களுடைய உரிமைகளைப் பிடுங்குகிறார். அதே வேளையில் கிழக்கில் அமைச்சர் ஏ.எச்.எம். அஷ்ரப், சிங்களவர்களுடைய உரிமைகளை அபகரிக்கிறார். இது போதாதென்று பிரபாகரன் வடக்கே உள்ள நிலம் தனக்கே உரியதென்று உரிமை கொண்டாடுகிறார். இந்நிலையில் எமது சொந்த மண்ணிலேயே நாம் வாழ்வதற்கு முடியாத நிலையிலுள்ளோம்," என்று கூறினார்.

"மலையகத்தில் இராமர் கோவில் கட்டி, படிப்படியாக தனிராஜ்யம் அமைக்கும் திட்டமே இது. இந்தியாவின் ஆதிக்கம் இங்கு பரவ இடமளியோம்!" என்று பௌத்த பீடாதிபதி ஒருவர் கூறியுள்ளார்.

தற்போது பௌத்த சங்கங்களின் எதிர்ப்புக்கு அரசு பணிந்துள்ளது. இராமர் கோவில் கட்டும் முடிவு கைவிடப்பட்டுள்ளது. ●

## தூதரக அதிகாரி நீக்கம்

### அரசு நடவடிக்கை

இலண்டன் மாநகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தகவல்துறை அதிகாரியாகவிருக்கும் அருணா குலத்துங்கவை சிறிலங்கா அரசு பதவிநீக்கம் செய்துள்ளதாக அறிவித்திருக்கிறது.

இவர்மீது எத்தகைய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று வெளிவிவகார அமைச்சு சட்டமா அதிபரின் ஆலோசனைகளைக் கோரியிருப்பதாகத் தெரிகிறது.

தன்னைப் பதவியிலிருந்து நீக்குவது தனது அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று திரு. குலத்துங்க கொழும்பு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

குலத்துங்க பதவிநீக்கம் செய்யப்பட்டதற்கான காரணத்தை வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கவில்லை. இருப்பினும் 'நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தான தகவல்களை, இலண்டன் செய்தியாளர்களுக்கு வழங்கினார்' என்று 'ஐலண்ட்' குற்றம் சுமத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

'முரசு'க்குக் கிடைத்த தகவலின்படி, திரு. அருணா குலத்துங்க இலண்டனில் புலிகளுக்குச் சாதகமான தகவல்களை வெளியிட்டதாகவும், புலிகளுக்கான ஆதரவுக் கூட்டங்கள் சிலவற்றில் கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது. ■

## புலிகளோடு தொடர்பில்லை!

### சந்தன வீரப்பன் மறுப்பு

சந்தன மரக் கடத்தல்காரனான வீரப்பன் தங்கியிருந்த இடம் ஒன்றை பொலிசார் சுற்றிவளைத்தனர். அங்கு விடுதலைப் புலிகளின் பிரசுரங்கள் காணப்பட்டன என்று தமிழக பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டிருந்தன.

புலிகளுக்கும் வீரப்பனுக்கும் தொடர்பு இருக்கலாம் என்றும் அப் பத்திரிகைகள் தெரிவித்தன.

தமிழக பத்திரிகை ஒன்றுக்கு வீரப்பன் அனுப்பிய கசட்டில் அதுபற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

"எங்களைப் பிடிக்க வந்த இடத்தில் விடுதலைப் புலிகளின் கேசட், புத்தகம் போன்றன இருந்ததாக பொலிசார் கூறுகிறார்கள். அது உண்மைதான்.

என்னைப் பார்க்க வந்த 'நெற்றிக்கண்' பத்திரிகையாளர்தான் கொடுத்தார்.

'எங்களுக்கு தீவிரமான இயக்கங்களோடு அறிமுகம் இருக்கிறது. உனக்கும் அறிமுகம் செய்கிறோம். படை திரட்டி தமிழ் நாட்டை தனிநாடாக மாற்ற இயக்கம் நடத்து. ஆயுதம் தரக்கூடிய இயக்கங்களை அறிமுகம் செய்து வைக்கிறோம்' என்று கூறினார்கள்.

அப்படிக்கூறித்தான் இந்தப் புத்தகங்களை கொடுத்தனர். என்னை விடுதலைப் புலிகள் பார்க்கவும் இல்லை; எனக்கு தொடர்பும் இல்லை" என்று கூறியுள்ளார் வீரப்பன்.

**இனிய வாசக நெஞ்சங்களே!**
**நம்பிக்கை தளராது,**
**நாளை நமதே**
**என்ற உறுதியோடு,**
**புதிய ஆண்டை**
**புன்னகையுடன்**
**வரவேற்போம்!**
**வசந்த வாழ்த்துக்கள்!**

## மாணவர்கள்மீது சூடு

சென்ற 19.12.98 அன்று அக்கரைப்பற்றில் மரண வீடொன்றுக்குச் சென்றுவிட்டு இரவு 10 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த க. கந்தசாமி (16), மா. நித்தியானந்தன் (17), நா. பாஸ்கரன் (18) ஆகிய மூன்று இளைஞர்களும் சீருடை அணிந்தோரால் சுடப்பட்டனர். இவர்கள் மாணவர்கள் என்றும் சுடப்பட்ட தறுவாயில் இலேசாக மதுவருந்தியிருந்தனர் என்றும் கூறப்படுகிறது. சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ■

## கிறிஸ்மஸ் தினத் தாக்குதல்

### பொலிஸ்காரர் பலி!

மட்டக்களப்பு-ஏறாவூர் 5ஆம் குறிச்சிப் பகுதி மக்களுக்கு சென்ற 1997ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினமும், 1998ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினமும் தாக்குதலுடன் ஆரம்பித்து கொலையில் முடிந்த கெடுபிடி நாளாகவே இருந்தது.

25.12.98 காலை 8.10க்கு ஏறாவூர் வம்மியடியில் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் அகப்பட்டு ஒரு பொலிஸ்காரர் பலியானார். மூன்று மின்தூண்கள் சரிந்து வீழ்ந்தன. சரமாரியான வெடியோசைகளால் மக்கள் கதிகலங்கிப் போனார்கள். போக்குவரத்து ஸ்தம்பித்தது.

வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலிஸாரைக் குறி வைத்துப் புலிகள் இந்தக் கிளைமோர் கண்ணிவெடியைப் பொருத்தினார்கள்.

சென்ற 1997ஆம் ஆண்டும் கிறிஸ்மஸ் தினத்தன்று சீருடையினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தினால் அப்பகுதியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியது. தாக்குதல் எதுவும் நடைபெறாத போது அநாவசியமாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் கிறிஸ்மஸ் தினத்திற்காகப் பூப்பறிக்கச் சென்ற எம். நிரஞ்சலா எனும் சிறுமி பரிதாபமாகப் பலியானார் என்பது நினைவிருக்கலாம். அந்தச் சம்பவமும் இதே இடத்தில் இதே நேரத்திலேயே இடம்பெற்றது. ஏறாவூர்ப் பகுதியில் கிறிஸ்மஸ் அனர்த்தத்துடன் ஆரம்பமாவதாக மக்கள் கூறுகின்றனர்.

### பொதுமக்கள் காயம்

செங்கலடி பதுளை வீதியில் உள்ள கறுத்தப்பாலத்தடி இராணுவ முகாம் மற்றும் புளொட் முகாம்மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். 26.12.98 அன்று நள்ளிரவுக்குச் சற்றுப்பிந்தி 1.40 க்குப் புலிகள் குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதனால் சுமார் ஒரு மணித்தியாலம் பாரிய பதிலடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதனால் செங்கலடி, ஏறாவூர் நகரங்கள் அதிர்ந்தன.

மட்டக்களப்பு இராணுவத் தலைமையகம், கிரான் படை முகாம், ஏறாவூர் பொலிஸ் நிலையம் ஆகிய பாதுகாப்பு நிலைகளிலிருந்து ஷெல்களும், மோட்டார் குண்டுகளும் ஏவப்பட்டன. மோட்டார் குண்டுகள் புலிகளின் வசமுள்ள குடிமனைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததில் இரு குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் 10பேர் காயமடைந்து, மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். பதுளை வீதியில் உள்ள கொடுவாமடுவிலேயே மோட்டார் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

தாக்குதல் நடத்திவிட்டு வழக்கமாகப் புலிகள் வெளியேறும் பதுளை வீதிப் பகுதியை நோக்கியே ஷெல்களும், குண்டுகளும் ஏவப்பட்டன. எனினும் இம்முறை புலிகள் செங்கலடி நகரப் பகுதிகளுக்குள் இருந்து தாக்குதல் நடத்திவிட்டு நகரப்பகுதிக்கூடாகவே வெளியேறினர். படையினரில் இருவர் காயமடைந்தனர். புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று தெரியவருகிறது.

சமீப சில நாட்களாக செங்கலடி, ஏறாவூர், மைலம்பாவெளிப் பகுதிகளில் தாக்குதல் நடத்தி வருவது புலிகளின் புதிய பயிற்சி அணி என்றும் கூறப்படுகிறது.

ஏறாவூர் காளிகோயிலுக்குள்ளும், செங்கலடி முருகன் கோயிலின் பின்புறமும் ஒவ்வொரு ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. எனினும் பெருத்த சேதமெதுவும் ஏற்படவில்லை. ■

## அக்கரைப்பற்றில் புலிகள் பலி

### சரணடையுமாறு ஒலி பெருக்கியில் அழைப்பு!

அக்கரைப்பற்று-வம்மியடிப் பிள்ளையார் கோயிலடியில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் மறைந்திருந்து தாக்கியதில் 2 புலி உறுப்பினர்கள் பலியாகினர். கொல்லப்பட்ட ஜெகன், மணமகன் ஆகிய இருவரும் அப்பகுதிப் பொறுப்பாளர்கள் என்று தெரியவருகிறது. படையினர் கூப்பிட்ட பொழுது ஓடியதால் சுடப்பட்டனராம்.

மின்மாற்றிகளைச் சேதப்படுத்தும் புலிகளைத் தாக்குவதற்காகப் படையினர் பதுங்கியிருந்த சமயமே இந்தச் சம்பவம் நடந்தது என்றும் கொல்லப்பட்ட மேற்படி இரு புலி உறுப்பினர்களும் மின்மாற்றிகளைச் சேதப்படுத்துவதில் சம்பந்தப்பட்டிருந்தனர் என்றும் கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர்களிடமிருந்து ஒரு தொகைப் பணத்தையும் சீருடையினர் கைப்பற்றியிருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் திருவெம்பாவைப் பூசைக்குச் சென்று கோயிலில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த எஸ். சுசீலா (18) எனும் மாணவியொருவர் காயமடைந்தார். இச்சம்பவம் 26.12.98 அன்று காலை 5.30க்கு இடம்பெற்றது. ■



படிப்பகம்

www.padippakam.com

# "பயமற்ற வாழ்க்கை எமக்கு வேண்டும்!"

## கொழும்பு வீதிகளில் பெண்கள் எழுச்சி!

"பயமற்ற வாழ்க்கை எமக்கு வேண்டும்!" என்று அவர்கள் கோஷமிட்டனர். வீதிகளில் உருண்டு, புரண்டு தம் ஆவேசத்தை வெளிப்படுத்தினர். தம்மீது போர்த்தப்பட்ட இரத்தக் கறைபடிந்த ஆடைகளை இழுத்துச் சென்று எரித்தனர்.

அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். சிவப்பு உடைகளையே அவர்கள் அணிந்திருந்தனர். நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையுமாக அவர்கள் அணி வகுத்தனர்.

இது நடந்தது இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அல்ல; நாட்டின் தலைநகரான கொழும்பில்! கலந்து கொண்டோரில் பலர் வடக்கு-கிழக்கில் இருந்து வந்த பெண்கள்.

'அரங்கம்' செயற்பாட்டுக்குழு என்ற பெயரில் இயங்கிக்கொண்டிருக்கும் அமைப்புத்தான் இந்த எழுச்சிகரமான நிகழ்வை கொழும்பு வீதிகளில் நிகழ்த்திக் காட்டியது. 'மன்று' என்னும் அமைப்பு இதற்கு ஒத்தாசையாக இருந்தது.

மனித உரிமைகள் தினத்தன்று இந்த நிகழ்வை கொழும்பில் நிகழ்த்தும் பொருட்டு கிழக்கில் மட்டக்களப்பு, திருமலை ஆகிய பகுதிகளில் இருந்து தமிழ்ப் பெண்கள் கொழும்புக்கு வந்ததும், துணிச்சலாகக் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்க விடயம்.

நூற்றுக்கணக்கான அப்பெண்களின் போராட்டம் விளம்பரத்திற்காகவோ, அரசியல் இலாபம் கருதியோ நடத்தப்பட்டதல்ல. அதனால்தான் அப்போராட்டத்தை நேரில் கண்டோரையும் அதன் உணர்வெழுச்சி தீபோல பற்றிக்கொண்டது.

"பயமற்ற வாழ்க்கை மீண்டும் எமக்கு வேண்டும்!" என்பதே பிரதான சுலோகமாக தமிழிலும், ஆங்கிலத்திலும் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தது.

### "அன்று அச்சமில்லை..."

போராட்டத்தில் கலந்துகொண்ட யாழ்ப்பாணப் பெண் ஒருவர் தமது பிரதான சுலோகத்தின் பொருளை எம்மிடம் பின்வருமாறு கூறினார்:

"நான் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண். ஒரு பெண் நள்ளிரவிலே எவ்வித பயமும் இன்றி தெருவிலே செல்லக்கூடியதாக இருப்பதுதான் உண்மையான சுதந்திரம் என்று காந்தி கூறினார். அத்தகைய சுதந்திரமான வாழ்க்கையை நான் வாழ்ந்துள்ளேன்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியாக யாழ்ப்பாணம் மாறுவதற்கு முன்னர் இரவு பன்னிரண்டு மணிக்குக்கூட வகுப்பு முடிந்து சைக்கிளில் தனியாக வீடு சென்றிருக்கிறேன். பள்ளிக்கூட நிகழ்ச்சிக்கான ஆயத்தங்கள், கம்பன் விழா, நாடகங்கள் என்று இரவிரவாக சைக்கிளில் பறந்து திரிந்தேன்.

அன்று பயமென்றால் என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால் இன்று அப்படியில்லை; பயத்தோடு கூடிய வாழ்வுதான் அங்கு இருக்கிறது.





அந்தப் பயமற்ற வாழ்க்கை வடக்கு-கிழக்கு முழுவதும் உள்ள பெண்களுக்குக் கிடைக்க வேண்டும். அந்த உணர்வுகளைத்தான் கொழும்புத் தெருக்களில் கொட்டினோம்.

அடக்கப்பட்டுக் கிடந்த எங்கள் நெஞ்சத்து குமுறல்களை கொழும்பில் கொண்டுவந்து வெடிக்க வைத்திருக்கிறோம்.

எங்கள் ஆசை என்ன? நாங்கள் எப்படி வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்? எப்படி வாழ விரும்புகிறோம் என்பதை இனியாவது உலகம் உணரட்டும்!" என்று உணர்ச்சி ததும்ப விளக்கினார் அப்பெண்.

### வானமும் அழுதது

காலி வீதிவழியாக உணர்வுடன் அணிவகுத்த பெண்கள் அணியினர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சென்று தங்கள் நிகழ்வைப் பூர்த்தி செய்தனர்.

அடக்குமுறைகளை தன்னந்தனியாக எதிர்த்து நிற்கும் பெண்ணை உருவகப்படுத்தும் விதமாக கொற்றவை சிலையும் எடுத்து வரப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டோரின் நெஞ்சத்துச் சோகம் கண்டு வானமும் பொங்கி அழுதது. கொட்டும் மழைக்குள்ளும் வீதிகளில் விழுந்து புரண்டபடி அவர்கள் எழுப்பிய குரல்கள் இன்னமும் நம் செவிகளில் எதிரொலித்தபடி இருக்கின்றன.

"எங்கள் உரிமைகள் எமக்கு வேண்டும்! சுதந்திரமான பயமற்ற வாழ்வு எமக்கு வேண்டும்! இனியும் நாங்கள் நசிந்து கிடவோம். நாங்கள் நிமிர்ந்து நிற்போம்! உண்மையை உலகிற்கு உரத்துச் சொல்வோம்! பயமற்ற வாழ்வை மீண்டும் அடைவோம்!"

## குறைபாடுள்ள வித்தியாலயம்

### பெற்றோர் புகார்

(திருமலை நிருபர்)

தி/றொட்டவெவ முஸ்லிம் வித்தியாலயம் பல குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக அப்பகுதிப் பெற்றோர் முரசு நிருபரிடம் தெரிவிக்கிறார்கள்.

ஆசிரியர் பற்றாக்குறை, குடிநீர் வசதியின்மை, கட்டடப் போதாமை, விளையாட்டு மைதானமின்மை, தளபாட வசதிகளின்மை போன்ற குறைபாடுகள் நிரம்பிய இப் பாடசாலையைக் கல்வி நிர்வாகமும் கண்டு கொள்ளாமல் இருப்பதாக இவர்கள் கூறுகிறார்கள்.

பாடசாலை அதிபர் திரு. வி.எம்.ஏ. மர்சூக்குடன் தொடர்பு கொண்டபோது "பாடசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் பொலிஸ் நிலையம் இயங்குகிறது. ஆரம்பப் பாடசாலையான இதற்குக் குறைந்தது ஏழு ஆசிரியர்களாவது நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மூன்றே மூன்று ஆசிரியர்களை வைத்துக் கொண்டுதான் வகுப்புக்களை நடத்த வேண்டியிருக்கிறது. ஆங்கில ஆசிரியரை இப்பாடசாலை எக்காலத்திலும் கண்டதில்லை. செல்வாக்கைப் பிரயோகித்து எல்லோரும் நகருக்குள்ளேயே இருக்க ஆசைப்பட்டால் இந்தப் பின்தங்கிய மழலைகளின் கல்விக்கு என்ன பதில்?" என்று கேட்டார்.

கல்வித் திணைக்களம் உடன் கவனம் செலுத்துமா?


**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள். வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.
T.P:- 586218


## விளம்பரப் பகுதி


**O/L மாணவர்களுக்கு!!!**

* குறும் கால தொழிற்கல்விகள்
* தமிழ், சிங்கள, ஆங்கில மூலம்

பாடநெறிகள்
- Δ DIPLOMA IN COMPUTER STUDIES
- Δ DIPLOMA IN MICROSOFT OFFICE
- Δ DIPLOMA IN PROGRAMMING
- Δ AAT (LONDON) Δ IABK (LONDON)
- Δ SPOKEN ENGLISH COURSE

ஆரம்பம் 18 01 1999

(எல்லா பாடநெறிக்கும் ஆங்கில பாடநெறி இலவசம்)

MICS 3 வருடகாலமாக வெற்றி நடை போடும்....
36, 2nd Cross Street, Puttalam. ☎ 032-65370



**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக தெய்வீக சேவை
CHARITY REGED NO. HA\04\8T\219
NTSF துயர் தீர்க்குமிடம்

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் என்பவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன நீங்கற்ற தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."

தெய்வீக சக்தி நிலையம்
கல்லடி-அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

THEIVEEGAM SRI LANKA,
HEAD OFFICE
BATTICALOA. SRI LANKA.
T.PHONE: 065-24825

"வாழ்விலிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"


## ஓராண்டு நினைவஞ்சலி



**வைத்தியலிங்கம் தம்பிஐயா**

(புங்குடுதீவு 4ம் வட்டாரம்)

27.12.1998 அன்று அன்னாரின் நினைவாக கொச்சிக்கடை தம்பையா சத்திரத்தில் நடந்த கிரிகையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இங்கனம்:
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மலர்வு: 21.09.1914
உதிர்வு: 27.12.1997

தகவல்:
த.மகேந்திரன்,
சிறீ சக்தி ஸ்ரோஸ், தெமட்டகொடை.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**சயந்தினி 19.12.1998**

மட்டுவில் சாவகச்சேரியை சேர்ந்த ராஜ்குமார்-சத்தியபிரபா தம்பதியினரின் செல்வப் புதல்வி சயந்தினி தனது முதலாவது பிறந்த தினத்தை 19.12.1998ல் இலண்டனில் (London) உள்ள பிரசித்தி பெற்ற மண்டபத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

இவரை இலண்டனில் உள்ள அன்பு அப்பா, அம்மா, கொழும்பில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, வவுனியாவில் உள்ள அப்பப்பா, அப்பம்மா, மச்சான்மார், மச்சாள்மார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், பாட்டிமார், பாட்டாமார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மட்டுவில் அம்மன் அருளுடன் எல்லா செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

விருந்துபசாரத்தில் கலந்து, வாழ்த்திய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் து. சத்தியபாலன்.


**ஸ்டூடியோ சாயா**

வீடியோ, போட்டோ, பிரேமிங், லேமினேஷன், டியூரோகாட்
40 1/1, காலி வீதி, வெள்ளவத்தை தொ.பே.: 594492





**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

நவசெலிமாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831


## நினைவஞ்சலி



மலர்வு: 07.03.1932
உதிர்வு: 27.10.1998

**பாலகப்போடி பத்தக்குட்டி** (செங்கலடி)

அன்பின் உறைவிடமாய்
அரவணைத்து உரமூட்டிப்
பண்பான நெறிகாட்டி
பாசமிகு உணர்வூட்டி
சிறப்புக்குத் தொழில் காட்டி
திறமைக்கு மதிப்பூட்டித்
திகழ்ந்தவரை மறவோமே.

உம் வழியே எம் வழியாய்
உம் உணர்வே எம் உணர்வாய்
நம்பிக்கைச் சுடர்கண்டு
நலம் காணத் திகழ்ந்தவரே
உற்றவர்க்கும் மற்றவர்க்கும்
உமபர்க்கும் இனியவராய்
உயர்ந்திட்ட பெரியோனே- உமக்கு
எம் கண்ணீர் அஞ்சலிகள்.
இதயத்தால் சொரிகின்றோம்.

உங்கள் அகால மறைவால் துயருறும் அன்பு மனைவி: பவளக் கொடி, சகோதரர்: கந்தலிங்கம், மக்கள்: தேவகி, லீலாவதி, ஜெயலட்சுமி, அழகையா (மாவட்ட நீதி மன்றம்-மட்டக்களப்பு), வேதநாயகி (பிரதேச செயலகம்- செங்கலடி), முத்து லெட்சுமி, விமலாவதி (செங்கலடி மகா வித்தியாலயம்), நவமலர் (கச்சேரி- மட்டக்களப்பு), கிருஷ்ணாவதி, கிருஷ்ணகுமார், (சவூதி), காலஞ்சென்ற யோகராஜன், மருமக்கள்: ஆனந்தம், கணபதிப்பிள்ளை, சுகுணகுமார் (வைத்தியசாலை- மட்டக்களப்பு) ஜெயராஜன் (சவூதி), சோமசுந்தரம் (கட்டார்) தவராஜா (சவூதி), பென்சியா வாஸ்.

மரணச் சடங்கில் உதவியோருக்கு எம் நன்றிகள்.

தகவல்: கிருஷ்ணகுமார் (சவூதி)


**கல்வி உங்கள் வீடு தேடி வருகிறது**

நீங்களும் ரேடியோ-டி.வி மெக்கானிக் ஆகலாம்

நீங்கள் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தமிழில், தபால் மூலம் (POWER TECH) அளிக்கும் ரேடியோ, டி. வி. மெக்கானிசம் பயிற்சி பெறலாம்.

தற்போது எலக்ரானிக்ஸ்துறை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. எனவே, இத் துறையில் வேலை வாய்ப்புகளும் பெருகி வருகிறது.

விபரங்களும் விண்ணப்பங்களும்

25/= ரூபா காசுக் கட்டளையுடன் 9 X 4 அளவிலான முத்திரை ஒட்டப்பட்டு முகவரி எழுதப்பட்ட கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

DIRECTOR.
POWER TECH
"BLOSSOM"
20, Vajirapura,
Nuwara Eliya



**BRIGHTன் தபால் மூலம் கல்வித் திட்டம்**

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர் ..............................
விலாசம் ..............................
..............................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, P. O. BOX NO: 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO - 11. TELE: 434770, 074-718592

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நாற்காலியில் அமர முன்னரே குறி

**யாழ்** மாநகர சபையின் முதல்வர் நாற்காலியில் அமருகிறவர்களுக்கு மட்டுமே ஆபத்து என்றில்லை. அந்த ஆசனத்தில் அமருவதற்கு ஆயத்தமாகிறவர்களுக்கும் ஆபத்துத்தான்.

யாழ் மாநகர முதல்வராக நியமிக்கப்பட உள்ளவர் என்று பெயர் அடிபட்ட மதிமுகராசா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மதிமுகராசா மாநகர முதல்வராகலாம் என்று வெளியான செய்திகள் வெறும் ஊகங்களல்ல.

முரசுக்கு மதிமுகராசா ஃபக்ஸ் மூலம் தனது கையொப்பத்துடன் அனுப்பிவைத்த கடிதம் ஒன்றில், தன்னை மேயராகும்படி பலரும் வற்புறுத்தியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

மதிமுகராசாவுக்கு மேயராகும் எண்ணம் இருக்கிறது என்ற தகவல் கூட்டணி வட்டாரங்கள் ஊடாகவே புலிகளுக்கும் சென்றிருக்கிறது. யாழ் மாநகரசபை வட்டாரத்திலும் கதை உலாவியது.

இதைவிட மேயர் சிவபாலனின் இறுதிச் சடங்கில் மதிமுகராசா ஆற்றிய உரையும் புலிகளுக்கு ஆத்திரமுட்டக்கூடியதாக இருந்திருக்கிறது.

'நாங்கள் உங்களுக்கு என்ன செய்தோம்? தமிழ் ஈழம் கிடைக்கும்வரை மலசல கூடம் கட்டுவதற்கும் அனுமதி இல்லையா? நாங்கள் மலசலகூடம் கட்டத்தானே. வந்தோம்!' என்று மதிமுகராசா உரையாற்றினார்.

இதற்குமுன்னர் சரோஜினியின் இறுதிச் சடங்கில் புலிகளை கடுமையாகச் சாடியவர் வர்த்தக சங்கத் தலைவர் நமச்சிவாயம். அடுத்த மேயராக அவரே நியமிக்கப்பட உள்ளதாகவும் பேச்சு அடிபட்டது.

நமச்சிவாயமும் கொல்லப்பட்டார். அவரது கொலை பற்றிய மர்மம் இன்னமும் நீடிக்கிறது.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்று ஒரு வருடம் பூர்த்தியாகப் போகிறது.

இந்த ஒரு வருட காலத்தில் யாழ் மாநகர முதல்வர்கள் இரண்டு பேரும், முதல்வர்களாக நியமிக்கப்பட இருந்த இரண்டு பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.

நமச்சிவாயம், மதிமுகராசா இருவரும் யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, புலிகளுடன் நெருக்கமாக இருந்தவர்கள்.

நமச்சிவாயம் முதலில் புளொட் இயக்கத்தினருடன் ஆதரவாக இருந்தார். பின்னர் புலிகளுடன் நெருக்கமாக இருந்தார். யாழ் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்தபின்னர், கூட்டணி மறுபடி சென்றதும் கூட்டணிக்காக வேலை செய்தார்.

இவர்களில் மதிமுகராசாவின் வரலாறு நீளமானது. இளைஞர் பேரவையின் கொக்குவில் கிளை அமைப்பாளர். பிரசார பீரங்கி.

யாழ் மேயராக இருந்த துரையப்பாவை 'கூப்பன் கள்ளன்' என்றுதான் அழைப்பார் மதிமுகராசா. துரையப்பா கொல்லப்பட்ட பின்னர் பொலிசாரின் சந்தேகப் பட்டியலில் மதிமுகராசாவும் இருந்தார். விசாரணைக்கும் உள்ளானார்.

1977 தேர்தல் பிரசார கூட்டங்களில் கூட்டணியின் பிரசார பீரங்கிகளில் மதிமுகராசாவும் ஒருவர். "தேர்தல் வந்தால் கடை விரிக்க ஓடிவரும் கூட்டமல்ல நாம்!" என்று மதிமுகராசா கூறும் வாசகம் அப்போது வெகு பிரபலம்.

ஐக்கிய தேசியக்கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சிகளின் வேட்பாளர்களை எட்டப்பர்கள் என்று எதுகை மோனையுடன் உரையாற்ற வல்லவர்களில் இளைஞர் பேரவையில் இருவர் முன்னணியில் இருந்தனர். முதலாமவர் வண்ணை ஆனந்தன். இன்னொருவர் மதிமுகராசா.

1983க்கு பின்னர் கூட்டணியின் முக்கிய தலைவர்கள் நாட்டை விட்டு சென்ற பின்பும், போராளி இயக்கங்களுடன் முரண்படாதவர்கள் மட்டும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர். அதில் ஒருவர் மதிமுகராசா.

யாழ்ப்பாணத்தில் காப்புறுதிக் கூட்டுத்தாபன திறப்பு விழாவில் கலந்துகொள்ளக் கூடாது என்று இளைஞர்கள் அன்றைய யாழ் எம்.பி. யோகேஸ்வரன் முன்பு மறியல் செய்தனர்.

அரச விழாக்களிலோ, அமைச்சர்கள் பங்கு கொள்ளும் விழாக்களிலோ கலந்து கொள்வோர் துரோகிகள் என்று 1977 தேர்தலுக்கு முன்பாக கூட்டணியினர் கூறிவந்தனர். பின்னர் கூட்டணியினரும் கலந்துகொள்ள ஆரம்பித்த போதே இளைஞர்கள் மறியல் செய்தனர்.

மறியல் செய்த இளைஞர்களோடு மதிமுகராசாவும் வண்ணை ஆனந்தனும் நின்றனர். இவ்வாறு கூட்டணியின் சமரசப் போக்குகளுக்கு எதிரானவராக மாறிய பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கி யாழ்ப்பாண நகரில் பலசரக்கு மொத்த விற்பனை கடை ஒன்றை மதிமுகராசா நடத்தினார். இயக்கங்களுக்கு பொதுவான ஒருவராக நடந்து கொண்டார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ் குடாநாடு இருந்தபோதே அங்கு எம்.ஜி.ஆர். நினைவு தினங்கள் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன. மதிமுகராசாவும் புலிகளின் ஆதரவுடனேயே விழாக்கள் நடத்தினார்.

இவ்வாறு கூட்டணியைவிட்டு ஒதுங்கியிருந்த மதிமுகராசா கடந்த உள்ளூராட்சி தேர்தலின் பின்னரே கூட்டணியுடன் மறுபடி ஒட்ட ஆரம்பித்தார்.

கூட்டணி போட்டியிட முடியுமா? முடியாதா? என்ற சட்டச் சிக்கல் எழுந்தபோது, ஈ.பி.டி.பிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்தார் மதிமுகராசா.

இவ்வாறு பலமுகராசாவாக இருந்து இறுதியில் மறுபடி கூட்டணியின் தூணாக மாறியதோடு, மாநகர முதல்வர் பதவியையும் பெற இருந்தார்.

மதிமுகராசாவின் வீடு யாழ்ப்பாணம் தாவடியில் இருக்கிறது. அப்பகுதியில் புலிகள் நடமாட்டம் இருந்தபோது, மதிமுகராசாவுடன் வந்து நட்பாக பேசிவிட்டு போயிருக்கிறார்கள். இது நடந்தது யாழ் உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்பு.

சமீபகாலமாக மதிமுகராசா கவனமாகவே இருந்திருக்கிறார். இரவில் தங்கும் அடிக்கடி இடங்களை மாற்றியிருக்கிறார். இராணுவ பாதுகாப்புள்ள யாழ் கூட்டணி அலுவலகத்திலேயே கூடுதலாக தங்கியதாகவும் தகவல்.

கடந்த மாதம் டிசம்பர் 14ம் திகதி யாழ் நகரிலுள்ள கூட்டணி அலுவலகம்மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டிருக்கிறது.

'அது தாக்குதலல்ல. காவலுக்கு நின்ற இராணுவத்தினரின் கைக்குண்டே தவறுதலாக வெடித்தது' என்று மதிமுகராசா கூறியிருந்தார். அதனை 512வது படையணிப் பொறுப்பாளர் கோர்ணல் ஜெயதிலக்கா மறுத்திருந்தார். கைக்குண்டு வெளியே இருந்து வீசப்பட்டது என்று கூறியிருந்தார்.

யாழ் குடாநாட்டில் புலிகளுக்கு எதிரான ஏனைய இயக்கங்களின் பிரசார நடவடிக்கைகளில் மதிமுகராசாவும், கூட்டணியினரும் சமீபகாலமாக இணைந்து செயற்பட்டு வருகின்றனர். உலகத் தலைவர்களுக்கு புலிகளுக்கு எதிரான மகஜர் அனுப்ப ஈ.பி.ஆர்.எல்.எஃப். கையொப்பம் திரட்டியபோது, யாழ் மாநகர சபை கூட்டணி உறுப்பினர்கள் கையொப்பம் போட மதிமுகராசா சம்மதம் தெரிவித்திருந்தார்.

ஏனைய தமிழ்க் கட்சிகள் சரியோ, தவறோ பகிரங்கமாகவே தமது புலி எதிர்ப்பு கருத்துக்களை கூறி வருகின்றன. ஆனால் கூட்டணியினர் உதட்டளவில் புலிகளுக்கு விரோதமில்லாதவர்கள் போன்று பேசியபடி, திரைமறைவில் புலிகளுக்கு எதிரான நகர்வுகளுக்கு பூரண ஒத்துழைப்பு கொடுத்து வருவதாக புலிகள் கருதுகின்றனராம்.

இதனால்தான் கூட்டணிமீது புலிகள் கடும் கோபம் கொள்வதோடு, 'உங்கள் இரட்டை வேடம் எமக்கு தெரியாதது அல்ல' என்று அடிக்கடி எச்சரித்தும் வருகின்றனர்.

"எங்களை ஏதோ சிறு பிள்ளைத்தனமாக இந்த முன்னாள் தலைமை எடைபோடுகிறது. இவர்கள் என்ன செய்கிறார்கள். எங்கு எதைப் பேசுகிறார்கள் என்பதெல்லாம் எங்களுக்கு விலாவாரியாகத் தெரியும்" என்று சமீபத்தில் வன்னியில் புலிகளின் உளவுத்துறை முக்கியஸ்தர் ஒருவர் மதகுரு ஒருவரிடம் தெரிவித்தாராம்.

மதிமுகராசாவை சுட்டது யார் என்று இலண்டன் பி.பி.சி. வானொலியினரால் கேட்கப்பட்டபோது, 'எல்லோரிடமும் பிஸ்டல் இருக்கிறது. யார் சுட்டார்கள் என்று தெரியவில்லை' என்று கூட்டணித் துணைத்தலைவர்களில் ஒருவரான ஆவரங்கால் சின்னத்துரை கூறியிருக்கிறார்.

புலிகள் என்று கூறாமல் இருப்பதற்கு அச்சம்தான் காரணம் என்று கருதுவது தவறு.

புலிகளுக்கு எதிரான தேர்தல் என்று அப்பட்டமாக தெரிந்தபின்பும், புலிகளால் ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தும் தேர்தலில் போட்டியிட்டனர். தங்கள் முதல்வர்கள் சுடப்பட்டபின்பும் சவால் விடுவது போல மாநகர சபை கூட்டத்தை இராணுவ பாதுகாப்புடன் நடத்துகின்றனர். இதற்கெல்லாம் இல்லாத அச்சம், சுட்டது யார் என்று கூறுவதற்கு மட்டும் ஓடி வருகிறதா?

விஷயம் அதுவல்ல, சுட்டது புலிகள் என்று தெரிந்தால், அது கொலையாக அல்ல, துரோகத்திற்கான தண்டனையாக கருதப்படும் என்று எண்ணம்தான் காரணம்.

அந்த எண்ணத்தால் ஏனைய தமிழ்க் கட்சிகளை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி சந்தேகத்தை சுமத்தவும் கூட்டணி சற்றும் தயங்கவில்லை.

கூட்டணி உறுப்பினர்கள் பலியானால் அனுதாப அறிக்கை விடும் தமிழ்க் கட்சிகளையும் 'இவர்களும் ஜனநாயக விரோதிகளே' என்றுதான் கூட்டணி கூறிவருகிறது.

மதிமுகராசா கொலை தொடர்பாக புலிகளும் உரிமை கோரவில்லை. கூட்டணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று புலிகளின் குரலில் செய்தியாக கூறியதோடு சரி.

யாழ் மாநகர முதல்வர்களான இரண்டு பேரும், முதல்வராகக்கூடும் என்று கருதப்பட்ட மதிமுகராசாவும் கொலையானதில் ஓர் பொது ஒற்றுமை இருக்கிறது. மூவரும் நல்லூரில் வைத்தே கொல்லப்பட்டனர்.



நல்லூர் சங்கிலி மன்னனின் கடைசி ராஜதானி. சரோஜினி கொலைக்கு முதலில் சங்கிலியன் படை உரிமை கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

யாழ் குடாநாட்டு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை குறிவைக்க உருவாக்கப்பட்ட பிரிவே சங்கிலியன் படைப்பிரிவு. அதன் முதற் தாக்குதல் நல்லூரிலேயே ஆரம்பமானது.

நல்லூரில் வைத்து சரோஜினி சுட்டுக் கொல்லப்பட்டபோது, பாதுகாப்பான பகுதிக்குள் புலிகள் வந்து போனது எப்படி? வேறு இயக்கமாக இருக்குமோ? என்று சந்தேகங்கள் கிளப்பப்பட்டன.

சரோஜினி சுடப்பட்ட இடத்தைவிட மதிமுகராசா சுடப்பட்டது பகிரங்கமான இடம். நல்லை ஆதினத்தின் முன்பாக வைத்தே பட்டப் பகலில் பிஸ்டலால் சுட்டுவிட்டு, நிதானமாக மறைந்துவிட்டார் சம்பந்தப்பட்டவர்.

எந்தப் பாதுகாப்புக்குள்ளேயும் ஓட்டைகள் இருக்கும். அந்த ஓட்டைகள் வழியாக கெரில்லாக்கள் நுழைந்துவிடுவார்கள்.

காலை முதல் மதிமுகராசாவின் நடமாட்டத்தை கண்காணித்து, நிகழ்ச்சியில் கலந்து கொள்வோருடன் அமர்ந்திருந்த புலி ஒருவரே, சரியான தருணம்பார்த்து மதியை மடக்கி சுட்டிருக்கிறார். எவ்விதமான பதற்றமும் இல்லாமல் முதலில் தலையிலும், பின்னர் வயிற்றிலும் சுட்டு, சாவு சர்வநிச்சயம் என்று தெரிந்த பின்னரே சுட்டவர் தப்பிச் சென்றுள்ளார்.

●□□●

**வி**டுதலைப் புலிகளின் வானூர்திகளை கண்டுபிடிப்பதில் இலங்கை விமானப் படை அடிக்கடி தேடுதல் வேட்டை நடத்துகிறது.

புலிகளிடம் உள்ள வானூர்திகளுக்கு பெரிய ஓடுபாதைகள் தேவையில்லை. நிறுத்தி வைக்கவும் பெரிய இடம் தேவையில்லை. அவசியப்பட்டால் பாகம் பாகமாக பிரித்து அடுக்கிவைக்கலாம்.

ஆகவே, வானூர்திகள் பறக்கும் போது தாக்கலாமே தவிர, தரித்து நிற்கும் இடமறிந்து தாக்குவது கடினம்.

இதற்கிடையே புலிகளின் வானூர்திகள் பற்றி பற்பல கதைகள் தென்னிலங்கை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் உலாவுகின்றன.

விமானங்களில் புலிகள் வெளிநாடுகளில் இருந்து ஆயுதம் கடத்தக்கூடும் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளிடம் உள்ள வானூர்திகளில் இரண்டுபேர்தான் பயணம் செய்ய முடியும். பாரமான பொருட்களை சுமந்து செல்ல முடியாது.

ஆயுதங்களை சுமந்து செல்லும் விமானங்களும் உள்ளன. அவற்றை விலை கொடுத்து வாங்குவதோ, போக்குவரத்தில் ஈடுபடுத்துவதோ அரசுகளால்கூட தாங்க முடியாத செலவீனம்.

அதனால்தான் இலங்கை அரசுகூட கப்பல் மூலமே ஆயுதங்களை இறக்குமதி செய்கிறது.

சாதாரண விமானத்தில் கொண்டு வரக்கூடிய ஆயுதங்கள் எதுவும் தற்போதைக்கு புலிகளுக்கு தேவை கிடையாது. தேவைக்கு அதிகமாகவே அவை கையிருப்பிலும் உள்ளன.

கவச வாகனங்கள், ஆட்டிலெறிகள் போன்றவையே புலிகளுக்கு தேவைப்படும். அவற்றை சாதாரண விமானங்களில் ஏற்றிவர இயலாது. அதைவிட கடல் மார்க்கமாக கொண்டு வருவது சுலபம்.

சர்வதேச கடல் எல்லையில் நிற்கும் கப்பலில் இருந்து வானூர்தி மூலம் ஆயுதங்களை காவி வருவதுகூட இயலாது. அதைவிட படகுகளில் ஏற்றி முடிக்கலாம்.

படகுகள் செல்ல முடியாதளவுக்கு கடற்படை ரோந்தில் ஈடுபட்டிருந்தால், வானூர்தியும் பறக்க முடியாது. கடலில் இருந்தே கடற்படையினர் விமான எதிர்ப்பு துப்பாக்கியால் சுடமுடியும்.

எனவே, ஆயுதங்களை கொண்டு செல்வதற்கு கடல் மார்க்கம் மட்டுமே பயன்படுத்தப்படும்.

தவிர, தற்போது புலிகளிடம் உள்ள வானூர்திகள் இலகுவாக தரையிறங்கக் கூடியவை. சுலபமாக மறைத்து வைக்கக் கூடியவை. சற்றுப் பெரிய விமானங்கள் என்றால் பெரிய ஓடுபாதை தேவை. மறைப்பதும் கடினம். வானில் இருந்து கண்டுபிடித்து விமானப் படையினர் தாக்கியழிக்கவும் முடியும்.

அதனால் தாக்குதல் தொடர்பான நடிவடிக்கைகளுக்கு மட்டுமே புலிகளின் வானூர்திகள் பயன்படுத்தப்படப் போகின்றன.

ஆனாலும், அரச உயர் மட்டம் புலிகளிடம் வானூர்தி கிடையாது என்றே கூறி வருகிறது. படைத்தரப்பு புலிகளிடம் வானூர்தி இருப்பதாக கூறுகிறது. புலிகளின் வானூர்திகள் பற்றிய ஊகங்களும் படைத்தரப்பாலேயே ஆங்கில, சிங்கள பத்திரிகைகளுக்கு கூறப்படுகின்றன.

அதனால், தற்போது ஹெலிகள் தமது தலைக்குமேலாகப் பறந்தால் தென்னிலங்கை மக்கள்கூட சந்தேகத்தோடு அண்ணாந்து பார்க்கிறார்கள்.

ரசியாவின் மிகப் பாதுகாப்பான பகுதிக்குள் விளையாட்டு விமானம் ஒன்றில் ஒருவர் சென்று இறங்கிய பழைய சம்பவம் ஒன்றை நினைவு கூர்ந்துள்ள ஆங்கில விமர்சகர் ஒருவர், புலிகள் தலைநகருக்குள் ஊடுருவக்கூடும் என்று எழுதியிருக்கிறார்.

தமது வான் கண்காணிப்புக்கள், ராடர்கள் என்பவற்றை மீறியும் புலிகள் வான் பரப்புக்குள் ஊடுருவ முடியும் என்று படைத்தரப்பும் நம்புகிறது. அதனால்தான் பாராளுமன்றம் முன்னாலும் கலிபர் 50 ரக துப்பாக்கிகளுடன் விமானப்படையினர் காவல் புரிகின்றனர்.

விரைவில் புலிகளின் வானூர்திகள் தாக்குதல் ஒன்றை நடத்தப் போவதாகவே தெரிகிறது. எந்த முனையில் என்பதுதான் கேள்விக்குறி.

நாரதர்

## ரிமோட் கொன்ட்ரோல் விமானம்



**பு**லிகளின் வானூர்த்திகள் பற்றிய பரபரப்பான செய்திகளுக்கிடையே, இந்தியாவில் இருந்து கிடைத்துள்ள தகவல் இது. 1998 நவம்பர் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை ஜம்முகாஷ்மீர் பகுதியில் ரிமோட் கொன்ரோல் விமானம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் எல்லைக்கருகே இது விழுந்து கிடந்துள்ளது. வெடி குண்டுகளை இதில் பொருத்தி, குறிப்பிட்ட இலக்கை எட்டியதும் ரிமோட் கொன்ரோலை அழுத்த வேண்டியதுதான். இலக்கு தகரும். இதுவும் ஸ்போர்ட்ஸ் விமானம் போன்றதே. ஆனால் ஆள் எவரும் பயணம் செய்ய இயலாது. இதன் சிறகில் ராக்கெட் வடிவில் குண்டுகள் பொருத்தப்பட்டுள்ளன. இது 20 கிலோ வெடி பொருளை சுமக்க வல்லது.

இவற்றை நகரங்களுக்குள் பாவிக்க முடியாது. நம்நாட்டில் என்றால் வன்னி போன்ற போர் முனைகளில் பயன்படுத்தலாம்.

## அதிரடி அய்யாத்துரை



**வவுனியாவில்** திருமணம் நடத்த படையினரின் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வந்தனராம். வந்தவர்களிடம் இயக்கமொன்று ஐந்து இலட்சம் கேட்டிருக்கிறது. அவர்கள் கதி கலங்கி இன்னொரு இயக்கத்திடம் போய் உதவி கேட்டிருக்கிறார்கள். அந்த இயக்கம் மூன்று இலட்சத்தை கறந்துகொண்டு, "ஒடுங்கோ இந்தப் பக்கம் வரவேண்டாம்!" என்று சொந்தப் பகுதிக்கு அனுப்பிவைத்ததாம்.

**திருமணம் நடத்துவோரின்** வசதி வாய்ப்பைப் பொறுத்து வரி வசூலிப்பு வவுனியாவில் நடக்கிறது. கடந்த 14ம் திகதி கல்யாணம். 13ம் திகதி மாப்பிள்ளையைக் கடத்திக்கொண்டு போனதாம் இயக்கமொன்று. சீப்பை ஒளித்து வைத்தால் கல்யாணம் நடத்தலாம்; மாப்பிள்ளையையே ஒளித்து வைத்தால் என்ன செய்யலாம்? கேட்டதை கொடுத்துப்போட்டு மாப்பிள்ளையை மீட்டனராம்.

**குடாநாட்டில்** சமூகச் சீரழிவுகளுக்கு இயக்கங்களும் துணை போவதாக ரெண்டு எழுத்தார் குற்றம் சாட்டியிருக்கினம்.

**ரெண்டு எழுத்தாரிடம்** வானூர்தியே கிடையாது என்று கூறுகினம். பின்னர் உக்கரய்ன் ஹெலியாக இருக்குமோ? ஜப்பான் ஹெலியாக இருக்குமோ? என்று சந்தேக விதைகளையும் தூவுகினம். ஒன்றுமே புரியல்லை உலகத்திலே.

**கொழும்பில் பல்கலைக்கழக** தமிழ் மாணவர்கள் பட்டிமன்றம் நடத்தினார்கள். டமில் கட்சிகளை கிழி கிழியென்று கிழித்துப் போட்டனராம். வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளர்தான் நடுவர். மாணவர்கள் எட்டடி பாய்ந்தால், அவர் பதினாறு அடி பாய்ந்து விட்டாராம். யார் பாய்ந்துதான் என்ன? தூங்கினால் அல்லவோ அவை துடித்தெழுவதற்கு!?

**"கூட்டான கட்சியில்** யார் இறந்தாலும் யாழ் செல்ல மாட்டேன்!" என்று செயலதிபர் உறுதியாகக் கூறிவிட்டாராம். அவர் பெயரால் அனுதாபச் செய்திகூட வரவில்லை. கூட்டான கட்சியில் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்கு என்று நிரந்தரமாக ஒருவரை நியமித்திருக்கினம் போல கிடக்கு! இதுவரை நான்கு சடங்குகளை நடத்தி முடித்திருக்கிற சங்கதியார் தான் அவர். என்னதான் சொன்னாலும் தன் கட்சிக்காரரின் துயரத்தில் பங்கெடுக்கும் சங்கதியாரைப் பாராட்டத்தான் வேண்டும்! அவரை முன்னே தள்ளிப்போட்டு செயலதிபர் பதுங்கியல்லோ இருக்கிறார்?

**தலைநகரில் கம்பன் கழகம்** விழா நடத்துகிறார்கள். 31.12.98 முதல், 03.01.99 வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் கம்பன் பிரியர்களுக்கு காதுக்கினிய விருந்து. விழாவில் ஒரு நிகழ்வில் பத்திரிகையாளர் இக்பால் அத்தாசும் கௌரவிக்கப்படுகிறார். கூடவே அநியாயமாக சிறை சென்று வந்த தமிழ்ப் பத்திரிகையாளர்களில் ஒருவரையாவது கௌரவித்திருக்கலாம். தற்போதுகூட நினைத்தால் செய்யலாமே! செய்வார்களா?!

**தப்பிச்சென்ற சீருடையினரைத்** தேடி கிராமம் கிராமமாகத் தேடுதல் வேட்டை நடக்கிறது. அப்படியான வேட்டையில் ஒருவரை மடக்கிப்பிடித்துக் கொண்டுவந்தனராம். பின்னர்தான் விஷயமே தெரிந்ததாம். அவர் தப்பியோடியவர் அல்ல; எப்போதோ சீருடையாரின் தேர்வுக்குச் சென்று எடுபடாமல் தட்டுப்பட்டவராம். அவர் பெயரும் எப்படி பட்டியலில் சேர்ந்ததோ தெரியவில்லை. ஒரு விதமாக நிலவரத்தை விளக்கிவிட்டு விடுபட்டு வந்தாராம். அன்று தேர்வாகாததை எண்ணி பெருமூச்சு விட்டாராம்.

**யாழில் தனியார்** தொலைபேசி ஒன்று தொடர்ந்து வேலை செய்யுது. ரெலிகொம் தொலைபேசி மட்டும் அடிக்கடி துடிப்பதை நிறுத்திக்கொள்கிறது. ஒரு வேளை தனியார் தொலைபேசிக்காரர்தான் உள்ளுக்குள்ளாலே வேலையைக் கொடுக்கினமோ என்று சிலர் சந்தேகப்படுகினம்.

**"வடக்கு-கிழக்குக்கு** நானே செயலாளர்!" என்று ஒரு அதிகாரி புரளி கிளப்பினாராம். மாகாணசபை அதிகாரிகளை தன்னிடம் பயபக்தியாக நடக்கவைக்க அந்த அதிகாரி கையாண்ட தந்திரம்தான் அதுவாம். அண்ணர் எப்பவாவது செயலாளராவார் என்று சக அதிகாரிகள் ஒரு மரியாதை கொடுப்பினமல்லோ? அதுக்குத்தான் இந்தக் கூத்து!

**இந்தவாரப் பொன்மொழி**

**"உலகை அறிந்தவன்
வெட்கப்படமாட்டான்!
தன்னை அறிந்தவன்
அகம்பாவம் அடையமாட்டான்!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

எழுதுவது **அற்புதன்**

# ரஞ்சன் விஜயரத்தினாமீது புலிகள் நடத்திய தாக்குதல்!

ஏனைய இயக்கங்களில் இருந்து உறுப்பினர்களை இழுக்கும் வேலைகளை புலிகள் செய்வதில்லை என்று இத்தொடரில் குறிப்பிட்டிருந்தேன்.

இலண்டனிலுள்ள நண்பர் ஒருவர் பின்வருமாறு கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார். ஈரோஸ் பாலகுமார், பராராஜசிங்கம் போன்றோர் புலிகளுடன்தானே உள்ளனர். அவர்கள் வேறு இயக்கத்தினர் இல்லையா? என்று கேட்டிருந்தார்.

ஈரோஸ் பாலகுமார் , பராராஜசிங்கம் உட்பட பலர் ஈரோஸ் இயக்கத்தை கலைத்துவிட்டுத்தான் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டனர். ஈரோசைவிட்டு கட்சி மாறும் பட்சிகளாகச் செல்லவில்லை.

ஈரோஸ் கலைக்கப்பட்ட பின்னர் பலர் ஒதுங்கினார்கள். ஒரு பகுதியினர் புலிகளோடு இணைந்து கொண்டனர்.

இணைந்து கொண்டவர்களுக்கும் உடனடியாக பொறுப்புக்கள் தரப்படவில்லை. அவர்கள் நன்கு செயற்பட்டு இயக்க உறுப்பினர்களது நம்பிக்கையை பெற்ற பின்னரே பொறுப்புக்கள் தரப்பட்டன.

சக இயக்கங்களில் இருந்து உறுப்பினர்களை இழுப்பது, ஏனைய இயக்கங்களில் தவறு செய்து விட்டு வருபவர்களுக்கு புகலிடம் தந்து உறுப்பினராக்குவது, பொறுப்புக்கள் கொடுப்பது போன்ற நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபட்டதில்லை.

ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட முன்னர் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ இராணுவம் கலைக்கப்பட்டது.

அந்த அமைப்பில் இருந்த உறுப்பினர்கள் விரும்பினால் தம்மோடு இணைந்து கொள்ளலாம் என்று கிட்டு கூறியிருந்தார்.

அதனை ஏற்று ஒருசாரார் புலிகளோடு இணைந்து கொண்டனர். அவ்வாறு இணைந்து கொண்டவர்களில் ஒருவர்தான் வரதன்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தவர் வரதன்.

கொழும்பும் அவருக்கு நன்கு பரிச்சயமானது. தன்னை கொழும்பில் பணியாற்ற அனுமதிக்குமாறு வரதன் புலிகளின் தலைமைப்பீடத்திடம் கேட்டிருந்தார்.

வரதனின் திறமையை கணிப்பிட்ட பிரபாகரன் முக்கிய பொறுப்பு ஒன்றுடன் கொழும்புக்கு அவரை அனுப்பிவைத்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ரஞ்சன் விஜயரத்னாவை தீர்த்துக் கட்டுவதற்கான தாக்குதலுக்குரிய பொறுப்பே வரதனிடம் தரப்பட்டது.

தம்பாப்பிள்ளை மகேஸ்வரனுடன் இருந்தவர். அந்த இயக்கம் கலைக்கப்பட்டதால் ஒதுங்கி இருப்பவர் என்ற தோரணையில் கொழும்பில் தங்கியிருந்தார் வரதன்.

கொழும்பில் உள்ள பிரபலமான வீடியோ கொப்பிகள் வாடகைக்கு விடும் கடை ஒன்றில் வரதன் பணியாற்றினார்.

### தலைக்கு குறி

"பிரபாகரனின் தலையைக் கொண்டு வந்தால் பரிசு தரப்படும்" என்று பகிரங்கமாக அறிவித்தவர் ரஞ்சன்.

அவரது தலைக்கே குறிவைத்தனர் புலிகள். ரஞ்சனின் நடமாட்டங்கள் பலநாட்களாக கண்காணிக்கப்பட்டன.

ரஞ்சனின் இல்லம் திம்பிரிக்கஸாயாவில் இருந்தது. வீட்டிலிருந்து அநேகமாக தினமும் எட்டு மணியளவில் ரஞ்சன் புறப்பட்டு விடுவார்.

கொமாண்டோ வாகனப் பாதுகாப்புடன் வாகன அணியாக கூட்டுப்படை தலைமையகம் செல்வார்.

எப்போதுமே ஒரே பாதையைத்தான் ரஞ்சன் பயன்படுத்தி வந்தார்.

பாதைகளை மாற்றிச் செல்லலாம் என்று அவரது பாதுகாவலர்கள் கூறியதை ரஞ்சன் ஏற்கவில்லை.

தனக்குரிய பாதுகாப்பு ஏற்பாட்டைமீறி புலிகளால் தாக்குதல் நடத்த முடியாது என்று அவர் நினைத்தார்.

ரஞ்சனிடம் இயல்பாக இருந்த பிடிவாதமும், துணிச்சலும் இன்னொரு காரணம்.

தினமும் குறிப்பிட்ட பாதையிலேயே பயணம் செய்வதால் தாக்குதலுக்கு திட்டமிடுவது நினைத்ததைவிட இலகுவாக இருந்திருக்கிறது.

### இறுதி நாள்

1991 மார்ச் மாதம் 02ம் திகதி சனிக்கிழமை ரஞ்சன் விஜயரத்னாவுக்கு குறிவைக்கும் நாளாக தீர்மானிக்கப்பட்டது.

ஹவலொக் வீதியில் உள்ள பொலிஸ் பார்க் அருகே வெள்ளை ஹை ஏஸ் வேன் ஒன்று காத்திருந்தது.

அதற்குள் கரும்புலி ஒருவர் சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தார். ரஞ்சனுக்காக காத்திருந்தார்.

தனக்கு குறிவைக்கப்பட்டிருப்பது தெரியாமல், பளிச்சென்ற வெள்ளை உடையணிந்து, கம்பீரமாக நடந்து சென்று தன் காரில் ஏறிப் புறப்பட்டார் ரஞ்சன்.

கொமாண்டோ வாகனம் அவரது படகுபோன்ற நீளக் காரை பின்தொடர்ந்தது. காரின் முன்னால் போக்குவரத்து பொலிசாரும் போக்குவரத்தை ஓரமாக ஒதுக்கி வழி ஏற்படுத்தி கொடுத்தபடி சென்றனர்.

வெள்ளை ஹைஏஸ் வாகனத்தில் தயாராக இருக்கும் கரும்புலிக்கு வேன் துரித வேகத்தில் வேனை நெருங்கிவருகிறது வாகன அணி.

இதோ வந்துவிட்டது.

வேனை சடுதியாக கிளப்பிய கரும்புலி, வாகன அணிக்கு அருகே, ரஞ்சனின் கார் அருகே வேனை கொண்டு சென்று சுவிட்சை காலால் அழுத்துகிறார்.

என்ன, ஏது என்று எவருமே சுதாரிக்க முடியாத கண்ணிமைக்கும் நேரத்தில்,

வேன் வெடிக்கிறது,

கூடவே ரஞ்சனின் காரும், பாதுகாப்புக்கு வந்த கொமாண்டோ வாகனங்களும் வெடித்துச் சிதறுகின்றன.

கொழும்பு நகர் அந்தச் சத்தத்தில் அதிருகிறது.

வெடிச்சத்தம் கேட்டபோது பழைய நேரப்படி காலை 8.25

வெடிவிபத்து ஏற்பட்ட இடத்தில் பாரிய அதிர்வுகள். அருகிலுள்ள கட்டடங்களில் கண்ணாடிகள் வெடித்து உதிர்ந்தன.

போக்குவரத்து அதிகமான நேரம் என்பதால் பொது மக்கள் 25 பேர் வரை பலியானார்கள். 77 பேர் காயமடைந்தனர்.

ரஞ்சனின் உடல் அடையாளம் தெரியாதளவு சிதறிப்போனது.

எங்கும் மனித உடல் பகுதிகள் சிதறுண்டு கிடந்தன.



கன்னாடி வழியாக தூரத்தில் வேகமாக வரும் வாகனத் தொடரணி தெரிகிறது.

அவர் வேன் எஞ்சினை உயிர்ப்பிக்கிறார்.



### ரிமோட்கொன்ரோல்

முதல் முறையாக கொழும்பில் நடந்த மனிதக் குண்டு தாக்குதல் அதுதான்.

மனித இலக்கை குறிவைத்து புலிகள் நடத்திய முதலாவது மனிதக் குண்டுத் தாக்குதலும் அதுதான்.

அதனால் தாக்குதல் எவ்வாறு நடந்தது என்பதை ஊகிக்க முன்பே அப்பகுதியில் கிடந்த மனித அவயவங்களையும் அகற்றிவிட்டனர்.

வாகனம் ஒன்றை முன்கூட்டியே நிறுத்தி வைத்து ரிமோட் கொன்ரோல் மூலம் வெடிக்க வைத்திருக்கலாம் என்றே பொலிசார் சந்தேகித்தனர்.

வெள்ளை ஹைஏஸ் வாகனத்தின் உதிரிப் பாகங்களை வைத்து அதன் உரிமையாளர் யார் என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

இத்தகைய தாக்குதலை கையாளும் அனுபவம் அப்போது இருக்கவில்லை.

ராஜீவ் காந்தி கொலைக்கு பின்னர் தமிழக சிறப்பு புலனாய்வு குழு கையாண்ட அணுகுமுறைகளே பின்னர் இங்கும் பயன்படுத்தப்பட்டன.

பலியான உடல்களுக்குள் கரும்புலி உடலை தேடுவது, அவயவங்களை இணைத்துப் பார்ப்பது போன்ற நடைமுறைகள் ராஜீவ் கொலைக்கு பின்னரே இங்கும் பரிசீலிக்கப்பட்டன.

ரஞ்சன் மீதான தாக்குதலில் நேரடியாக ஈடுபட்ட கரும்புலியின் பெயரை புலிகள் வெளியிடவில்லை.

முகம் தெரியாத கரும்புலிகள் என்ற பட்டியலில் அவரது பெயரும் இணைந்து கொண்டது.

ரஞ்சன்மீதான தாக்குதலின் தளப் பொறுப்பை ஏற்றிருந்தவர் வரதன்.

### சந்தேகம்

ரஞ்சன் விஜயரத்னா கொலைக்கு ஜனாதிபதி பிரேமதாசா காரணமாக இருக்கலாம் என்று வதந்திகள் உலாவின.

எதிர்க்கட்சி வட்டாரங்களும் அதனை ஊக்குவித்தன.

கசினோ சூதாட்டக்காரர் ஒருவரை ரஞ்சன் நாட்டைவிட்டு வெளியேற்றினார்.

அந்த சூதாட்டக்காரருக்கு பிரேமதாசாவின் துணைவியார் ஹேமாவுடன் அறிமுகம் இருந்தது.

முக்கிய அமைச்சர்களுடனும் சூதாட்டப் புள்ளிக்கு தொடர்புகள் இருந்தன. அவர்கள் எவருடனும் தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளக்கூட அவருக்கு அனுமதி தரப்படவில்லை.

தானே விமான நிலையம் சென்று அந்த கசினோ ஆசாமியை வெளியேற்றிவிட்டுத்தான் ஓய்ந்தார் ரஞ்சன்.

அதுமட்டுமல்ல தன் கட்சிக்காரர்கள் தப்பு செய்தால்கூட பொலிசாரை நடவடிக்கை எடுக்குமாறு கூறிவிடுவார்.

அப்போது உதவி சபாநாயகராக இருந்த காமினி பொன்சேகா வீட்டில் பொலிசார் சோதனை நடத்தினர்.

பாராளுமன்றம்வரை காமினி பிரச்சனையைக் கொண்டு சென்றார். தனது கட்சியின் முக்கிய நபர் என்றும் சார்பு காட்டாது, பொலிசாரின் நடவடிக்கையை ஆதரித்து ரஞ்சன் வாதிட்டார்.

அவரது தனிப்பட்ட நேர்மையை எதிர்க்கட்சிகள்கூட குறைகூறமுடியாத அளவுக்கு இருந்தது என்பது உண்மை.

ரஞ்சனுக்கு அவரது கட்சியினர் இரகசிய மாக ஒரு பட்டம் சூட்டியிருந்தனர். 'விசர்ப் பூனை' என்பதுதான் அந்தப் பட்டம்.

இத்தகைய காரணங்களால் ரஞ்சன் கொலைக்கு பிரேமதாசாமீதே பழிபோடப்பட்டது.

புலிகளும் இத் தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை.

ரஞ்சன் பலியானபோது 59 வயது. மார்ச் 2இல் ரஞ்சன் பலியானார். ஏப்ரல் 04ம் திகதி அவரது 60வது பிறந்தநாள்.

### ஒருமுறை தவறியது

மார்ச் 02ம் திகதி தாக்குதல் நடத்துவதற்கு முன்னரும் ஒரு தடவை ரஞ்சனின் வாகனத் தொடர்மீது தாக்குதல் நடத்த சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் நடத்தவில்லை.

குறிப்பிட்ட வாகனத்தில் தளப் பொறுப்பாளரான வரதனும் இருந்திருக்கிறார்.

அவர் வாகனத்தைவிட்டு இறங்க முன்னரே ரஞ்சனின் வாகனத் தொடரணி குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே வந்துவிட்டது.

அதனை அவதானித்த வரதன் சுவிட்சை அழுத்துமாறு கரும்புலியிடம் கூறியிருக்கிறார்.

ஒரு ஆள் செய்யவேண்டிய காரியத்திற்கு மேலதிகமாக இன்னொருவரை, அதுவும் தளப் பொறுப்பாளரையே பலி கொடுப்பதா? என்று நினைத்த கரும்புலி சுவிட்சை அழுத்த மறுத்து விட்டார்.

அதனால் அன்று ரஞ்சனின் தொடரணி தாக்குதலில் இருந்து தப்பியது.

(தொடர்ந்து வரும்)



## அன்றும் இன்றும்

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் மனச்சாட்சி என்று வர்ணிக்கப்பட்ட பத்திரிகை 'சுதந்திரன்'.**

**6.04.1975ல் சுதந்திரன் பத்திரிகை வெளியிட்ட காரசாரமான ஆசிரியர் தலையங்கம் இது.**

**இன்றுள்ளதைவிட அன்று ஆயிரம் மடங்கு பரவாயில்லாத சூழல். அவ்வாறிருந்தும் என்னவிதமாக கொதித்தும் குமுறியும் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது பாருங்கள்:**

சபாஷ்! சிறிமாவோ பண்டாரநாயகா அவர்களே! சபாஷ்!

அனைத்துலக பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டின் தொடக்கத்தின்போது நீங்கள் ஆற்றிய உரைக்குத்தான் சபாஷ்போடுகிறோம்!

ஏனெனில் உங்களைப் போல வேறு யாராலும் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாக இப்படி கச்சிதமாகப் பேசியிருக்கவே முடியாது!

உங்களைப்போல இப்படி வேறுயாராலும் உருத்திராட்சப் பூனைபோல வேடம் போட்டு நடித்திருக்கவே முடியாது!

உதட்டளவில் ஊருக்கு உபதேசம் செய்வதற்கு உங்களைவிட வேறுயாராலுமே முடியாது!

முழுப் பூசணிக்காயை கனகச்சிதமாக பிடிசோற்றில் மறைத்துக்கொண்டு- உலகப் பிரச்சனைகளைப்பற்றி பேசுவதில் உங்களுடன் வேறுயாராலும் போட்டியிடவே முடியாது!

அம்மையாரே! அம்மையாரே! காலனியாதிக்கத்தையும், சுரண்டலையும் எதிர்த்து கனகச்சிதமாக மாநாட்டு மேடையில் முழங்கியிருக்கிறீர்கள்!

ஆனால் நடைமுறையில் இங்கு என்ன செய்கிறீர்கள் என்பதை உங்கள் உள்ளத்தை தட்டிக்கேளுங்கள்! நீங்கள் வணங்கும் புத்தபகவான் மீது ஆணையாக உங்கள் மனச்சாட்சியைத் தட்டிக்கேளுங்கள்!

தமிழ் தேசிய இனத்தின் சம்மதத்தை துளியும்பெறாத- தமிழ் தேசிய இனத்தினால் முற்றாக நிராகரிக்கப்பட்டுவிட்ட -உங்கள் புதிய தனிச்சிங்கள பௌத்த ஏகாதிபத்திய குடியரசு அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள்மீது பலவந்தமாக திணித்து தமிழினத்தையும், தமிழ் ஈழத்தையும் அடக்கியொடுக்கி ஆட்சி நடத்த முயற்சிக்கிறீர்கள்!

தமிழ்பேசும் மக்களின் சொந்தத் தாயகமாக விளங்குவதும்- தமிழினம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தனியாட்சி நடத்தி வந்ததுமான தமிழ் ஈழத்தில்-உங்கள் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தை திணித்து-அதை ஒரு புதிய காலனி நாடாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

தமிழ் ஈழத்தில் ஆயுதப்படைகளை பெருந்தொகையாகக் குவித்து-அதை ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட நாடு போல அடிமைப்படுத்த நினைக்கிறீர்கள்!

தமிழ் ஈழத்தின் நிர்வாகத்தை கவனிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நீங்கள் அனுப்பும் உயர்தர மேல்மட்ட அரசாங்க அதிகாரிகள்-பொலிஸ் அதிகாரிகள்-அனைவரையும் தனிச் சிங்களவர்களாக அனுப்பிவைத்து-தமிழ் ஈழத்தை சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் ஒரு காலனியாக உறுதிப்படுத்தி வருகிறீர்கள்!

தமிழ் ஈழத்தின் விவசாய நிலங்களில் சிங்களவர்களை திட்டமிட்டு குடியேற்றி தமிழர் நிலத்தை-அவர்களின் பூர்வீகச் சொத்தை- ஆக்கிரமிக்கிறீர்கள்! புதிய சுரண்டல் கொள்கையை கச்சிதமாக கடைப்பிடிக்கிறீர்கள்!

தமிழர் நிலம் பறிக்கப்படுகிறது; வேலை வாய்ப்புக்கள் பறிக்கப்படுகின்றன; மீன் பிடி, விவசாயம், கைத்தொழில் போன்றவற்றிலும் சிங்கள ஆதிக்கம் தலையெடுக்கிறது; தமிழர் தாயகமாம் வடக்கு கிழக்கு மாகாணங்கள்- அதாவது தமிழ் ஈழம்- சுரண்டப்படுகிறது!

தமிழ் ஈழத்திலுள்ள மன்னாரில் எண்ணெய்வள ஆராய்ச்சிக்குக்கூட தெற்கிலிருந்து 500 சிங்களவர்களைக் கொண்டுவந்து குவித்து, தமிழ் ஈழ மக்களின் வேலை வாய்ப்புக்களை சுரண்டுகிறீர்கள்!

இவ்வாறு பல்வேறு வழிகளிலும் தமிழ் ஈழத்தை புதிய 'காலனியாக' அடிமைப்படுத்திக்கொண்டு-தமிழ் இனத்தைச் சுரண்டிக் கொண்டுதான், சுரண்டல் கொள்கையையும், காலனி ஆதிக்கத்தையும் எதிர்த்து மாநாட்டில் பிரமாதமாக முழங்கித் தள்ளியிருக்கிறீர்கள்!

ஆனால் இந்த நாட்டில் தமிழ் மக்களின் கலாசாரத்தை-அக்கலாசாரத்தின் மூலவித்தான தமிழ் மொழியை- ஒழித்துக் கட்ட உங்கள் ஆட்சி எடுத்து வரும் நடவடிக்கைகள் உலகத்துக்கு தெரியாதா என்ன?

கடந்த 1974ம் ஆண்டு தை மாதம் 10ம் நாள் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழ் கலாசார மாநாட்டில்-வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட அந்த மாநாட்டில்- உங்கள் ஆட்சியின் வெறி பிடித்த பொலிஸ்படை புகுந்து வெளிநாட்டு அறிஞர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் மிருகத்தனமாகத் தாக்கி பத்துப்பேரை படுகொலை செய்ததை உலகம் அதற்குள் மறந்தாவிட்டது? தமிழ் மக்களின் கலாசார அபிலாஷைகளுக்கு நீங்கள் தந்த "உரிய இடம்" இது தானே!

"காலனி ஆதிக்கத்தினால் ஏற்பட்ட தடைகள் நீக்கப்படவேண்டும்" என்றும் கூறியிருக்கிறீர்கள்!

இதை ஏற்றுக்கொள்ளுகிறோம்- இந்த அடிப்படையில்தான், தமிழ் ஈழத்தேசிய இனம் அந்நிய காலனித்துவ ஆட்சிகளினால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த தங்கள் தமிழ் ஈழநாட்டை விடுவிப்பதற்கு இப்பொழுது உறுதி பூண்டுள்ளனர்!

வெளிநாட்டு ஆதிக்கம் அகன்ற பின்னரும்- தமிழ் ஈழத்தில் புதிய அந்நிய பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் திணிக்கப்படுவதை - தமிழ் ஈழம் மீண்டும் புதியதோர் காலனி நாடாக்கப்படும் ஆபத்தை தமிழ் இனம் வலிவுடன் எதிர்த்து நிற்கின்றது!

தமிழ் ஈழத்தை-பௌத்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் சுரண்டலிலிருந்தும் புதிய காலனித்துவ ஆதிக்கப்பிடியிலிருந்தும் விடுவித்து- தங்கள் கலாசார அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளவே தமிழ் ஈழத்தேசிய இனம் இன்று உறுதிபூண்டுள்ளது!

இதை அம்மையாருக்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் கூறி வைக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஈராக் மீதான தாக்குதலும் இலங்கை இனப்பிரச்சனையும்

## அலசுவது- இராஜதந்திரி

அமெரிக்கா ஈராக்கை மிரட்ட எடுத்த நடவடிக்கை, அமெரிக்காவுக்கே பாதகமாக அமைந்துள்ளது.

ஈராக்கில் ஆயுத பரிசோதனை என்ற பெயரில், கேந்திர நிலைகள் பற்றிய தகவல்களையே அமெரிக்கா இரகசியமாக திரட்டியிருக்கிறது.

ஐ.நா.சபையின் ஆயுதப்பரிசோதகர்களாக சென்றவர்கள் சிலர் அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.யின் ஒற்றர்களுமாவர் என்ற திடுக்கிடும் தகவல் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

ஆயுதப் பரிசோதனை நடத்தச் சென்ற குழுவின் தலைவரான ரிச்சார்ட் பட்லர் அமெரிக்காவின் கையாள் என்பது அப்பட்டமாக தெரிய வந்திருக்கிறது.

ஆயுத பரிசோதனை, அணு ஆயுத தடை என்ற போர்வைகளுக்குள் ஐ.நா. சபையை தம்மிஷ்டப்படி அமெரிக்கா தவறாக வழிநடத்தியிருந்தது.

தனது மேலாதிக்க நோக்கங்களுக்கு வளைகுடாவில் தடையாக உள்ள ஈராக்கையும், அதற்கு தலைமை தாங்கும் சதாம் ஹுசைனையும் பணியவைப்பதுதான் அமெரிக்காவினது உண்மையான நோக்கமாகும்.

அமெரிக்காவும், பிரிட்டனும் ஏனைய நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு பின்நிற்காத நாடுகளாகும்.

அதேநாடுகள் ஈராக் குவைத்மீது மேற்கொண்ட படையெடுப்பை சாக்காக வைத்து ஈராக்கை பலவீனமாக்குவதற்கு நியாயம் கற்பிக்கின்றன.

ஈராக் பலமாக திகழ்வதும், அணு ஆயுதங்களை கொண்டிருப்பதும் வளைகுடா அமைதிக்கு ஆபத்து என்றே அமெரிக்கா நீலிக்கண்ணீர் வடித்து வருகிறது.

அப்படியாயின் அமெரிக்கா பலமாக இருப்பதும், அதனிடம் அணுக்குண்டுகளும், நியூத்திரன் குண்டுகளும் பெருமளவில் குவிந்து கிடப்பதும் உலக அமைதிக்கு பங்கமாகாதா? என்ற கேள்வியும் எழுகிறது.

ஈராக்கின் உள்ளே சென்று ஆயுத பரிசோதனை நடத்த முன்வந்த ஐ.நா.சபை அமெரிக்காவுக்குள் சென்று ஆயுத பரிசோதனை நடத்தவோ, அங்குள்ள அழிவாயுதங்களைப் பற்றிய விபரங்கள் பெறுவதற்கோ அமெரிக்காவும் அனுமதிக்க வேண்டியிருக்கும். அது ஒருபோதும் நடக்கமுடியாத ஒன்றாகும்.

எனவே, ஈராக்கில் ஆயுத பரிசோதனை நடத்த ஐ.நா. சபை செய்த முடிவும் ஒருதலைப்பட்சமானதேயாகும். அமெரிக்காவின் நலன் சார்ந்த முடிவாகவே அது அமைந்திருந்தது.

ஐ.நா. சபை பக்கச்சார்பற்ற தூய்மையான ஓர் அமைப்பாக எப்போதும் இருந்தது கிடையாது. அவ்வாறு இருக்க முடியும் என்று எதிர்பார்ப்பதும் கற்பனையேயாகும்.

ஐ.நா.சபையின் பொதுச் செயலாளர் தெரிவு முதல் பல்வேறு முக்கிய விடயங்களில் அமெரிக்காவே பின்னணியில் இருந்து வருகிறது.

எனவே அத்தகைய ஐ.நா.சபை ஒப்புக்காக சில நேரங்களில் அமெரிக்காவை மெல்லக் கண்டித்தாலும், அமெரிக்க நலனுக்கு மாறாக செயற்பட முன்வராது.

எனவே, ஈராக் தொடர்பாக ஐ.நா.சபை எடுக்கும் முடிவுகள் யாவும் அமெரிக்காவின் நாடித்துடிப்பறிந்து மேற்கொள்ளப்படும் முடிவுகளேயாகும்.

சோவியத் யூனியன் இருந்தவரை ஐ.நா.சபை முடிவுகளில் அமெரிக்கா ஒரு வரம்புக்கு அப்பால் செல்வாக்கு செலுத்த முடியாமல் இருந்தது.

சோவியத் யூனியன் பல தனி நாடுகளாக சிதறுண்டுபோன பின்னர் அமெரிக்காவின் பிடி ஐ.நா.சபைக்குள் இறுக்கமாகிவிட்டது.

ஐ.நா.சபை தன் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பை அமெரிக்காவிடமோ, பிரிட்டனிடமோ ஒப்படைக்கவில்லை. ஐ.நா.சபையை ஈராக் மதிப்பதில்லை என்று கூறிக்கொண்டு அமெரிக்காவும், பிரிட்டனும் ஈராக்கை தாக்கியிருக்கின்றன.

இத்தாக்குதல் பற்றி ஐ.நா.சபையுடன் கலந்தாலோசிக்காதது மூலம், இந்த இருநாடுகளும் ஈராக்மீது தாம் கூறிய குற்றத்தை தாமும் செய்து முடித்துள்ளன.

இத்தாக்குதல் தொடர்பாக ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான் காட்டமாகக் கண்டிக்க தவறியிருந்தார். 'இது சோகநாள்' என்று வருந்தியிருந்தார்.

பூசாரி செய்தால் குற்றமில்லை என்பதுபோல, வல்லரசு செய்தால் வன்மையான கண்டனமில்லை என்பது போன்றே ஐ.நா.சபையின் நிலைப்பாடு காணப்பட்டது.

அதேபோல இலங்கை போன்ற அமெரிக்க சார்பு நாடுகளும் மென்மையான கண்டனங்களையே தெரிவித்திருந்தன.

இலங்கையில் முஸ்லிம் வாக்கு வங்கிகளும் இருப்பதைக் கருத்தில் கொண்டே அத்தகைய மென்மையான கண்டனமாயினும் அரசால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத அமெரிக்கத் தாக்குதலானது இம்முறை விளைவித்துள்ள சாதக பாதகங்கள் பற்றி நாம் உற்று நோக்க வேண்டும்.

இத் தாக்குதலின் பின்னர் ஏற்பட்டுள்ள சர்வதேச மாற்றங்கள் இங்கும் எதிரொலிக்கப் போகின்றன. எனவே அத்தகைய சூழல் மாற்றங்களை அவதானிக்க வேண்டியது அவசியமாகிறது.

இங்குள்ள தமிழ்க் கட்சிகள் இந்த முக்கிய விவகாரம் குறித்து சிறிதும் அலட்டிக்கொள்ளவில்லை. இக் கட்சிகள் எந்தளவுக்கு மரத்துப் போயுள்ளன என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

வெளிநாடுகளில் இருந்து இங்குவரும் அமைச்சர்கள், எம்.பி.கள் மற்றும் தூதுக்குழுக்களை சந்திப்பதும், அதனைப் பத்திரிகைகளுக்கு தெரிவிப்பதுமே தமிழ்க் கட்சிகளது வெளிநாட்டு கொள்கையாக மாறியுள்ளது.

சர்வதேச அரங்கில் ஏற்படும் மாற்றங்களை உற்று நோக்குவது, முற்போக்கான சக்திகளோடு கைகோர்த்து நிற்பதெல்லாம் இக் கட்சிகளைப் பொறுத்தவரை மறந்துபோன பழங்கதைகளாக மாறிவிட்டன. ஏதோ ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கியபோது பகட்டுக்காக கூறப்பட்ட கோஷங்கள் போல அவற்றை தூக்கி எறிந்து விட்டன.

புலிகள்தான் சர்வதேச அனுதாபத்தை கெடுத்தனர், இந்தியாவை பகைத்தனர் என்று வெறுமனே திரும்ப திரும்பக் கூறுவதைத் தவிர , வெளியுறவுகள் தொடர்பான எவ்வித கரிசனையும் இக் கட்சிகளிடம் காணப்படவில்லை.

இன்று சர்வதேச அனுதாபம் மறுபடி திரண்டுவரும்போது அதனை தக்கவைக்க இக் கட்சிகள் எவ்வித அக்கறையும் காண்பிக்காமல் இருப்பதோடு, அந்த அனுதாபத்தை தகர்க்கக்கூடிய பொதி விளையாட்டில் பங்கேற்றும் வருகின்றன.

அதுபோல சர்வதேச பார்வையை நம்மீது திருப்பக்கூடிய சர்வதேச விவகாரங்களையும் இக் கட்சிகள் அலட்சியப்படுத்தியே வருகின்றன.

ஈராக்மீதான அமெரிக்க தாக்குதலின் பின்னர் ரசியா, இந்தியா, சீனா போன்ற நாடுகள் அமெரிக்கா தொடர்பான உஷார் நிலையை அடைந்துள்ளன.

சோவியத் யூனியன் பல துண்டுகளாக சிதறுண்ட பின்னர் அமெரிக்க எதிர்ப்பு சர்வதேச அரங்கில் தணித்திருந்தது. தட்டிக்கேட்க ஆளில்லாத சண்டப் பிரசண்டனான அமெரிக்காவை அனுசரித்துப் போகவே பல நாடுகள் முயன்றன.

ஆனால், எப்படித்தான் அனுசரித்துப் போனாலும், தனது கட்டளைகளுக்கு பணிய மறுத்தால், பலப்பிரயோகம் மூலம் பணியவைக்க அமெரிக்கா தயங்காது என்பது தெளிவாகிவிட்டது.

இன்று ஈராக், நாளை...? என்று அச்சுறுத்தும் கேள்வி தற்போது உலகின் முன்பாக எழுந்திருக்கிறது.

குறிப்பாக இந்தியா, ரசியா போன்ற நாடுகள் அமெரிக்காவின் உலகப் பொலிஸ்காரன் பாத்திரத்தை சகிக்க முடியாது சீற்றம் கொண்டுள்ளன.

ஈராக் மீதான தாக்குதலை வன்மையாக கண்டித்த இந்தியாவும், ரசியாவும் அதே சூட்டோடு தங்களுக்கிடையான உறவை கெட்டிப்படுத்தியுள்ளன.

இந்தியாவுடனான இராணுவ ஒப்பந்தத்தை 2010ம் ஆண்டுவரை ரசியா நீடித்திருக்கிறது. அணு ஆயுத தயாரிப்புக்கும் உதவ முன்வந்திருக்கிறது.

சோவியத் யூனியன் சிதறுண்ட போதிலும் ரசியாவும், பிரிந்து சென்ற ஏனைய நாடுகளும் இப்போதும் இராணுவரீதியில் பலமாகவே உள்ளன. அணு ஆயுதங்களையும் கொண்டுள்ளன.

சோவியத் யூனியன் ஒன்றாக இருந்தபோது, அதனுடன் இந்தியா வலுவான உறவைக் கொண்டிருந்தது. அத்தகைய உறவே தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் தளம் காணும் ஆசைக்கு சவாலாக விளங்கியிருந்தது.

இப்போது மீண்டும் ரசியாவும், இந்தியாவும் கைகோர்த்துக் கொண்டதும், இராணுவ ரீதியிலான உறவுகளை புதுப்பித்திருப்பதும் அமெரிக்காவினால் சகிக்க முடியாத திருப்பமேயாகும். அதுமட்டுமன்றி ரசியப் பிரதமர் பிரிமகோவ் கூறியுள்ள கருத்தும் அமெரிக்காவால் ஜீரணிக்க முடியாததாகும்.

### அமெரிக்க ஜனநாயகம்

மோனிகா விவகாரத்திற்காக கிளின்ரனை அமெரிக்க பிரதிநிதிகள் சபை கண்டித்துள்ளது. அதேசமயம் பலநூறு பெண்களும், குழந்தைகளும், முதியவர்களும் பலியாகக் காரணமான கிளின்ரனின் தாக்குதலை பிரதிநிதிகள் சபை கண்டிக்க முன்வரவில்லை.

ஏனெனில், கிளின்ரன் அமெரிக்காவின் ஆதிக்க நோக்கம் நிறைவேறுவதற்காகவே தாக்குதல் நடத்தினார். அதிலே அவரது சுயநலமும் கொஞ்சம் கலந்திருந்தது அவ்வளவுதான். ஈராக் அவலத்தை அமெரிக்க ஜனநாயகம் கண்டுகொள்ளவில்லை. கண்களை மூடிக்கொண்டது.

ரசியா, இந்தியா, சீனா ஆகிய நாடுகள் இணைந்து முக்கூட்டு உடன்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ரசியப் பிரதமர் அறைகூவல் விடுத்திருக்கிறார்.

இந்த முக்கூட்டு உடன்பாட்டு யோசனை முத்தான யோசனை என்று இந்தியப் பத்திரிகைகளும் வரவேற்றுள்ளன.

உடனடியாக இந்த உடன்பாடு சாத்தியமாகாவிட்டாலும், படிப்படியாக அதற்கான சூழலை ரசியாவே முன்னின்று உருவாக்க முயலலாம். இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான எல்லைத் தகராறுகள் தீர்க்கப்பட்டு பரஸ்பர நல்லுறவை இரு நாடுகளும் எட்டினால், முக்கூட்டு உடன்பாடு சாத்தியமானதாக அமையும்.

ஈராக்குக்கு அமைதி போதிப்பதாக கூறிக்கொண்டு, ஈராக்மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் உலக அமைதிக்கு சவாலானதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் பிரதிபலிப்பாக சர்வதேச அரங்கில் அமெரிக்காவுக்கு எதிரான சக்திகள் தமக்குள் கைகோர்க்க ஆரம்பித்துள்ளன.



அந்த கைகோர்ப்புக்கு கால்கோள் விழா போன்றதே இந்தியாவில் ரசியப் பிரதமர் கூறிய கருத்துக்களாகும்.

பலம்தான் இன்றைய உலகில் எதனையும் தீர்மானிக்கிறது. தாம் மட்டும் பலமாக இருக்கக்கூடியதாக ஏனைய நாடுகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு தன் முன்னால் மண்டியிட வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது.

எனவே, அமெரிக்காவின் இந்த மனோபாவம் சகல நாடுகளுக்கும் அச்சுறுத்தலாகும். இதனை எதிர்கொள்ள வேண்டுமானால் அமெரிக்க எதிர்ப்பு அணியொன்று கண்டிப்பாக உருவாக வேண்டும்.

உலக சனத்தொகையில் இந்தியாவும், சீனாவும் 40 சதவீதத்தை கொண்டுள்ளன. இந்த நாடுகளும் ரசியாவும் ஒன்றுபட்டு நின்றால் அதுவே அமெரிக்காவுக்கு பாரிய சவாலாகிவிடும்.

இந்த முக்கூட்டு அணி உருவாகாமல் தடுப்பதற்கு அமெரிக்காவும் தன்னால் முடிந்தவரை முயற்சிகளை முடுக்கிவிடப்போகிறது.

அந்த முயற்சியில் ஒன்றாக இந்தியாவை மேலும் கடுமையாக கண்காணிப்பதும், இந்தியாவை சுற்றி சதிவலை விரிப்பதுமாக இருக்கப்போகிறது.

எனவே, இலங்கையிலும் தனது பிடியை இறுக்குவதற்காக தனது இராணுவ, பொருளாதார வலைக்குள் மீளமுடியாதளவு இலங்கையை சிக்க வைப்பதற்கு அமெரிக்கா விரும்பும்.

இந்தியாவுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா விஜயம் செய்யலாம். நட்புறவு நன்றாக உள்ளது என்று கூறலாம். புன்னகைகளை பரிமாறியும் கொள்ளலாம். இவையெல்லாம் மேற்பூச்சுக்களேயாகும்.

இலங்கையில் அமெரிக்க தலையீடு பற்றிய தனது அதிருப்தியை ஜனாதிபதி சந்திரிக்காவிடம் நேரடியாக இந்தியா கூறப்போவதில்லை. ஆனால் பல்வேறு வழிகளில் அதுபற்றிய தகவல்களை அறிவதில் இந்தியா ஆர்வம் கொண்டிருக்கிறது.

தற்போது ஈராக் மீதான தாக்குதலையடுத்து, இந்தியா மேலும் விழிப்படைந்திருக்கிறது.

ரசியப் பிரதமர் தெரிவித்த முக்கூட்டு உடன்பாடு பற்றிய கருத்தை இந்தியா மறுக்கவில்லை என்பதும், அமெரிக்கா மீதான இந்தியாவின் எதிர்ப்புணர்வை உணர்த்தியிருக்கிறது. இலங்கை அப்படியான நிலைப்பாட்டை ஒரு போதும் மேற்கொள்ள முடியாது. இந்தியாவை அதிகம் பகைக்காது அமெரிக்காவுடனும் நட்பை தொடரும். உதவிகளையும் நாடி நிற்கும்.

சர்வதேச அரங்கில் அமெரிக்காவுக்கும், அமெரிக்கா எதிர்ப்பு சக்திகளுக்கும் இடையே, மீனுக்கு வாலையும், பாம்புக்கு தலையையும் காட்டுவது போன்றே இலங்கை அரசின் நிலைப்பாடு திகழப்போகிறது.

ஆகவே, இந்திய அரசும் இலங்கை அரசைப் பொறுத்தவரை 'நம்ப நட, நம்பி நடவாதே' என்ற அணுகுமுறையையே கைக்கொள்ளும்.

இதன் காரணமாக இந்தியாவில் எதிர்கால ஆட்சிமாற்றங்கள்கூட இலங்கை அரசுக்கு தற்போதுள்ளதைவிட சாதகங்களை ஏற்படுத்தப்போவதில்லை.

முன்பும், அமெரிக்கா இங்கு தளம் காணும் முயற்சியை தடுக்கவே இந்தியா பிரதான கவனம் செலுத்தியது. இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்தியப்படை உதவி போன்ற வழிமுறைகள் ஊடாக தலையிட்டிருந்தது.

அவ்வாறான தலையீட்டுக்கு இனிமேல் சாத்தியம் கிடையாது. அதேசமயம் இங்கு இனப்பிரச்சனையும், யுத்தமும் தீராதவரை அதனை வைத்தே அமெரிக்கா வாலை நீட்டிக்கொண்டிருக்கும். அதனால் இனப்பிரச்சனை தீர்வுக்கு தனக்கு பாதகமில்லாத நாடு மத்தியஸ்தம் செய்வதற்கு இந்தியாவில் எந்தவொரு அரசும் குறுக்கே நிற்கப்போவதில்லை.

ஈராக் மீதான விமானத் தாக்குதலால் பல நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் பலியானது வருத்தத்துக்குரியதேயாகும். அதேசமயம் இக் கொடூரத் தாக்குதல் ஈராக் மக்களுக்கு உலக அனுதாபத்தை தேடிக்கொடுத்திருக்கிறது. அமெரிக்க எதிர்ப்பு அலையை மறுபடி உருவாக்கி சர்வதேச அரங்கில் மாற்றங்கள் ஏற்படவும் வித்திட்டுள்ளது.

அந்த மாற்றங்கள் இங்கும் பிரதிபலிக்கவே செய்யும். அவற்றை உற்று அவதானித்து, தமது தரப்புக்கு சாதகமாக கையாள்வது தமிழ் பேசும் தரப்பின் தலைமைத்துவத்திலேயே தங்கியிருக்கிறது.

சோவியத் யூனியனாக ஒன்றாக இருந்து பிரிந்த சில நாடுகளுடன் புலிகளுக்கு தொடர்பு இருக்கிறது. அங்கிருந்தே விமான எதிர்ப்பு ஏவுகணைகள், வானூர்தி உதிரிப்பாகங்கள் புலிகளால் பெறப்பட்டுள்ளன என்று படைத்தரப்பினர் சந்தேகம் தெரிவித்து வருகின்றனர்.

சமீபத்தில் சிங்களப் பத்திரிகை ஒன்றில் புலிகளின் ஹெலி முன்னாள் சோவியத் நாடுகளில் ஒன்றான உக்ரேயினில் வாங்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது. சர்வதேச அரங்க மாற்றங்கள் மேற்கண்டவாறான சந்தேகங்களை உண்மையாக்கவும் கூடும்.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

### கல்யாணவீட்டில் புலிகள்

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழ்நாட்டு பத்திரிகைகள் பலவற்றுக்கு ஆரம்பம் முதலே தெளிவான பார்வை இருந்ததில்லை.

தந்தை செல்வா காலத்தில் அமைதியாக போராடிக் கொண்டிருந்தபோதே 'துக்ளக்' போன்ற சஞ்சிகைகள் அதனை ஏற்காமல் மாறுபட்ட கருத்துக்களை கூறிவந்தன.

அக்கட்டத்தில் இலங்கை வந்த துக்ளக் ஆசிரியர் 'சோ', இலங்கை அரசுடன் நல்லவிதமாகப் பேசி உரிமைகளைப் பெறுமாறு கூறிவிட்டுப் போனார்.

'இதயம் பேசுகிறது' மணியன் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை சந்தித்து நட்பு பாராட்டினார்.

இதே பத்திரிகைகள் தமிழ் நாட்டில் திராவிடக் கட்சிகளை பற்றியும் நல்ல அபிப்பிராயங்களை கொண்டிருக்கவில்லை.

இப்பத்திரிகைகள் பலவற்றின் முதலாளிகள் பாப்பானியர்கள். திராவிட இயக்கங்கள் பாப்பானியர்களை தமிழர்கள் அல்ல என்று கூறிவந்தன. பாம்பையும், பாப்பானையும் கண்டால் முதலில் பாப்பானை அடி என்று கூறினார் தந்தை பெரியார்.

இவற்றாலோ என்னவோ தமிழ், தமிழ் இனம், தமிழ் உணர்வு என்ற வார்த்தைகளைக் கேட்டாலே இப்பத்திரிகைகளுக்கு அலர்ஜி.

இலங்கைத் தமிழர் போராட்டத்தையும் அதே அலர்ஜியுடனேயே ஆரம்பத்தில் நோக்கின. பின்னர் தமிழ் நாட்டிலும் இலங்கைப் பிரச்சனை முக்கிய கவனத்திற்குரிய பிரச்சனையாக மாறியதால் படிப்படியாக தம் நிலையை மாற்றிக்கொண்டன.

இந்தியப் படைகால அட்டூழியங்களை வெளிக்கொண்டு வருவதில் ஜூனியர் விகடன், தேவி, ராணி போன்றவை முன்னின்றதும் குறிப்பிடத்தக்கது. இவற்றில் தேவி, ராணி இரண்டும் பாப்பானியர் அல்லாதவர்களால் நடத்தப்படுகிறது.

எனினும், போதிய தரவுகள் இன்றி சில சமயம் பரபரப்புக்காக கூட செய்திகளை வெளியிட்டு விடுகின்றன.

போராளி இயக்கங்கள் அனைத்தையும் விடுதலைப் புலிகள் என்றே பொதுவாக குறிப்பிட்டு வருகிறார்கள். எப்படி விளக்கிச் சொன்னாலும் மாற்றத் தயங்குகிறார்கள்.

தமிழ்நாட்டில் எங்காவது கொள்ளைக்காரர்கள் ரிவோல்வர் வைத்திருந்தால்கூட, "நவீன ஆயுதத்துடன் கொள்ளையன் கைது. ஆயுதம் கொடுத்தது 'புலிகளா?" என்று தலைப்பு கொடுத்துவிடுவார்கள்.

தமிழ் நாட்டில் புலிகள் உட்பட ஏனைய இயக்கங்கள் நடமாட முன்னரே ஆயுதங்கள் பாவனையில் இருந்தன. மணிப்பூர், மிசோரம் போன்ற மாநிலங்களில் ஆயுதம் ஏந்திய விடுதலைப் படைகள் இயங்கின. ஏதோ புலிகளும், ஏனைய இயக் கங்களும்தான் இந்தியாவில் ஆயுதங்களை அறிமுகம் செய்தது போல நினைத்து எழுதுகிறார்கள்.

சந்தனக் கடத்தல் வீரப்பன் கண்ணிவெடி வைத்தால், "வீரப்பன் ஆட்களுக்கு புலிகள் பயிற்சி" என்று செய்திபோட்டு விடுவர்.

இதேபோல சமீபத்தில் 'தினமலர்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியானது. 'ராஜீவ் கொலை வழக்குக்காக இரகசிய நிதி வசூல்' என்ற தலைப்பில் பெரிய செய்தியாக வெளியானது.

ராஜீவ் காந்தி கொலை வழக்குக்காக நிதி சேகரிப்பது பல மாதங்களுக்கு முன்னரே பகிரங்கமாக நடந்துவரும் விஷயம். இப்பகுதியில் நாமும் அத் தகவலை வெளியிட்டிருந்தோம்.

வெளிநாடுகளிலும், தமிழ் நாட்டிலும் வங்கி கணக்கு இலக்கம் கொடுத்து பகிரங்கமாகவே நிதி சேகரிப்பு நடந்துவருகிறது. குறிப்பிட்ட பத்திரிகை நிருபருக்கு சில வாரங்களுக்கு முன்னர்தான் விஷயம் தெரிந்திருக்கிறது. இரகசிய வசூல் என்று செய்தியாக்கிவிட்டார்.

அடுத்த பரபரப்பு செய்தி, ம.தி.மு.க. தலைவர் வை.கோ. வீட்டு கல்யாணத்தில் புலிகள் கலந்து கொண்டனர் என்பதுதான்.



காசி – வை.கோ

புலிகள் என்று அவர்கள் கூறுவது கவிஞர் காசி ஆனந்தனை. வை.கோவுடன் காசி ஆனந்தன் நிற்கும் படம் 'இந்திய ருடே'யில் வெளியாகியுள்ளது.

காசி ஆனந்தன் புலி என்றால் தமிழ் நாட்டில் இத்தனை காலமாக பகிரங்கமாக தங்கியிருக்க எப்படி அனுமதிக்கப்பட்டார்? ராஜீவ் கொலை பற்றி விசாரித்த ஜெயின் கமிஷன் முன்னாள்கூட காசி ஆனந்தன் சாட்சியம் அளித்திருக்கிறார்.

தமிழ் நாட்டில் சட்டபூர்வமாக இருக்க அனுமதிக்கப்பட்ட ஒருவரை வை.கோ.வின் வீட்டு கல்யாணத்தில் கலந்து கொண்டதால் புலியாக சித்தரிக்கப்பட்டு செய்தி போட்டுவிட்டனர்.

காசி ஆனந்தன் தற்போது இயக்க வாழ்க்கையில் இருந்து ஒதுங்கியிருப்பதாக கருதியே தமிழ் நாட்டில் குடும்பத்துடன் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலிகளுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் பேசி வரும் அமைப்புக்களும் பகிரங்கமாகவே இயங்கி வருகின்றன. கூட்டங்கள் நடத்தி வருகின்றன. அந்த அமைப்புக்களின் பிரமுகர்களும் வை.கோ. வீட்டு கல்யாணத்தில் கலந்துகொண்டனர்.

இவர்கள் தவிர புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்று கூறத்தக்க எவரும் கலந்துகொள்ளவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

# அதிர் இடி 42

**கடந்தவாரம்**

**பிஷப்பாண்டவரும் இரு அமைச்சர்களும் இடி அமீன் கட்டளைப்படி கொல்லப்படுகின்றனர். வாகன விபத்தில் பலியானதாக அறிவிக்கிறான் அமீன்.**

**இனி....**

# இடி அமீன்

பிஷப்பாண்டவர் கொல்லப்பட்டதை மூடி மறைக்க அமீன் எடுத்த முயற்சிகள் பயன ளிக்கவில்லை.

வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் அதிருப்திகள் தலைதூக்கின. பிஷப் பாண்டவரின் உடலைப் பார்வையிட வேண்டும் என்று மக்கள் முண்டியடித் தனர்.

உடலைக் காண்பிக்க முடியவில்லை. காண்பித்தால் நடந்தது விபத்தல்ல என்பது தெரிந்துவிடும்.

பிஷப்பாண்டவரும், இரு அமைச்சர் களும் கொல்லப்பட்ட தினைத்தன்று மாலையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இடி அமீனின் உதவி ஜனாதிபதி முஸ்தாபா அட்ரிசி அக் கூட்டத்தில் உரையாற்றினார்.

"பிஷப்பாண்டவரும், இரு அமைச்சர் களும் பலியான செய்தியை அறிந்த அதிபர் இடி அமீன் ஆழ்ந்த அதிர்ச்சியில் இருக்கிறார்.

இந்த விபத்து விதியின் திருவிளை யாடல்! இதனை கொலையாக சித்தரிக்க சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன.

ஜனநாயகத்தை மதித்து, சர்வதேச விடுதலை இயக்கங்களுடன் நட்பு பாராட்டி வரும் எமது நாட்டுக்கும், மக்களுக்கும் எதிரான சக்திகளையிட்டு விழிப்பாக இருக்குமாறு அதிபர் இடி அமீன் கேட்டுக்கொண்டுள்ளார்." என்று உதவி ஜனாதிபதி உரையாற்றினார்.

பொய் என்று தெரிந்தும் மக்கள் மௌனமாக அதனை செவி மடுத்தனர்.

உதவி ஜனாதிபதி அங்கு உரை யாற்றிக் கொண் டிருந்தபோது அமீன் தன் உடம் புக்கு மசாஜ் பண்ணிக் கொண்டிருந்தான்.

தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்தான வர்கள் என்று கருதுபவர்களை தீர்த் துக்கட்டினால் அன்று முழுவதும் அமீன் சந்தோசமாக இருப்பான்.

அன்று சாப்பாட்டில் மலைப்பாம்பு கறி நிச்சயமாக இருக்கும்.

அதற்காகவே மிருகக் காட்சி சாலை ஒன்றில் விதம் விதமான மலைப்பாம்புகள் வளர்க்கப்பட்டு வந்தன.

மலைப்பாம்பு கறியுடன் சாப்பிட முன்னர் மசாஜ் பண்ணிக் கொள்ளவேண் டும்.

பிஷப்பாண்டவர் கொல்லப்பட்ட தைக்கூட மிக லேசாக விபத்தாக சித் தரித்த தன் புத்திசாலித்தனத்தை எண்ணி மனதுக்குள் பூரித்துப் போனான் அமீன்.

அந்தக் குஷியில் இருந்தவன், மசாஜ் செய்த அழகிகளில் ஒருத்தியை தன் கைகளால் வளைத்து, வயிற்றில் முகத்தை புதைத்து கிளுகிளுப்பூட்டினான்.

சட்டென்று எழுந்தவன் அவளை அலாக்காகத் தூக்கி தான் படுத்திருந்த இடத்தில் மல்லாந்து படுக்க வைத்தான்.

"இன்று நான்தான் உனக்கு மசாஜ் பண்ணப் போகிறேன்" என்றான்.

அவளால் மறுக்க முயலவில்லை. அமீனின் கைகள் அவளது உடலை பிடித்துவிட ஆரம்பித்தன.

முதலில் அவளுக்கும் இதமாக இருந் தது. முரட்டுக்கரங்கள் பிடித்துவிட்ட இடங்களில் புத்துணர்ச்சி ஏற்படுவது போலிருந்தது.

அவளது மிகக் குறைந்த ஆடைகளை யும் அமீன் அனுமதிக்கவில்லை.

உடல் முழுக்க பிடித்துவிட் டான். படிப்படியாக அவனது பிடி கடுமையானது. அவள் உடலை பிழிய ஆரம்பித்து விட்டான்.

அவள் வலியால் துடித்துப் போனாள். அவள் துடிப்பதை வழக்கம் போல ரசித்தான்.

அவள் துடிப்பதைக் காண அவனுக்கு வெறி தலைக்கேறியது. அவள் முகமருகே குனிந்து, அவ ளது உதடு களைக் கடித்தான். அவள் கத்தினாள். அது அவளது தொண்டைக்குள்ளேயே அடங்கிப் போனது.

உதடுகளில் துளிர்த்த இரத்தத் தை தன் உதடுகளால் சப்புக் கொட்டி உறிஞ்சினான்.

இத்தனை கொடூரத்தையும் கண்களால் பார்த்துக் கொண்டி ருந்த இன்னொரு அழகிக்கு பயத்தில் உடம்பெங்கும் உதறல் எடுத்தது.

அடுத்தது தனக்குத்தான் என்று நினைத்தபோது, அங்கிருந்து ஓடி விடலாமா என்று எண்ணம் உதித்தது.

ஓடினால்தான் ஆபத்து. மலைப் பாம்பு கறியுடன், தன் எலும்புகளையும் முறித்து சாப்பிட்டுவிடுவான் என்று பயந் தாள்.

அமீன் பயங்கர ராட்சதன். மனித இறைச்சிப் பிரியன் என்றுதான் கேள் விப்பட்டதை அவள் முன்னர் நம்ப வில்லை.

அமீன் பெண்பித்தன். வக்கிர மனம் கொண்டவன் என்பதை மட்டும் அனுப வத்தில் நம்பினாள். இன்றுதான் அமீன் ராட்சதன் என்பதையும் நம்பினாள்.

உதடுகளை உறிஞ்சிய அமீன் தாகம் தீர்ந்த நரிபோல உதடுகளைவிட்டு விலகி னான்.

அவள் கத்தவும் தோன்றாமல், வலியில் முனகவும் முடியாமல் பேயறைந்தவள் போன்று கிடந்தாள்.

**"இங்கு சம்பளம் அதிகம். வேலை கஷ்டம். உன்னை நான் கழுத்தில் கடித்து**





கொலையான அமைச்சர் ஒ.ஃபும்பி

**இரத்தம் குடிக்காமல் விட்டது உன் அதிஷ்டம்!"** என்று கூறிச் சிரித்தான்.

அவர்கள் இருவரும் பயத்தின் உச்சியில் இருப்பதை ரசித்த அமீன், **"வா இங்கே"** என்று அடுத்தவளை அழைத்தான்.

அவள் நடு நடுங்கிபபடியே அவன் அருகே செல்ல, தன் முன்பாக மண்டியிட்டு அமருமாறு கூறினான்.

அவள் தயங்கி அமீன் போட்ட அதட்ட லில் சட்டென்று மடங்கி அமர்ந்து அழத் தொடங்கிவிட்டாள்.

எலிகளோடு விளையாடும் பூனைமாதிரி, அவள் அழுவதை வேடிக்கை பார்த்த அமீன், அவளை நெருங்கினான்.

அதற்கு அடுத்து அவன் செய்த காரி யத்தால் அவள் வெறுப்புற்றாள். ஆனாலும் பணிந்தேயாக வேண்டிய கட்டாயத்தால், அமீனின் விருப்பத்துக்கு கீழ்ப்படிந்தாள்.

மறுநாள் விடிந்தபோது அந்த இரு



கொலையான அமைச்சர் ஒலியெமா

மசாஜ் அழகிகளும் தூக்கில் தொங்கினர். தாங்கள் தப்பிச் சென்றாலும் தாமோ தன் குடும்பத்தினரோ அமீனிடம் இருந்து தப்பிப் பிழைக்க முடியாது என்பதால்தான் தற்கொலை பண்ணிக்கொண்டனர்.

அமீனுக்கு எதிர்பாராத அதிர்ச்சி. இப் படிச் செய்வார்கள் என்று அவன் நினைத் திருக்கவில்லை.

உடல்களை இரகசியமாக புதைக்க ஏற் பாடு செய்தான். அவர்கள் இருவரும் முக் கியமான சில ஆவணங்களுடன் காணாமல் போய்விட்டதாக இருவரது வீடுகளிலும் தகவல் கூறப்பட்டது.

அடிக்கடி அவர்களது வீடுகளுக்கு சென்று பெற்றோரை இராணுவம் மிரட்டி யது.

"உங்கள் பெண் வந்தாளா? வந்தால் ஒளித்து வைக்க எண்ணாதீர்கள். நாட்டுக்கே துரோகம் செய்துவிட்டாள். சாகும்வரை தூக்கில் போட வேண்டும்" என்று கூறிவிட்டுப் போவார்கள்.

பிள்ளைகளை பறிகொடுத்த சோகம் போதாது என்று, இராணுவம் கொடுக்கும் தொல்லைகளும் சேர்ந்து கொண்டன.

இடி அமீனுக்கே நேராக மனுப்போட்ட னர். இரு குடும்பத்தினரும் ஒன்றாகவே, உருக்கமாக தங்கள் குடும்ப சோகத்தை தெரியப் படுத்தி இருந்தனர்.

மனுவைப் பார்த்த அமீன் தன் செயலா ளரிடம் கூறி னான்; **"என் குடிமக்கள் இருவர் மனு அனுப்பியிருக் கிறார்கள். உடனே பதில் போடு. காணாமல் போன பிள்ளைகளை கண்டுபிடித்து மீட்டுத் தருவதற்கு சகல நடவடிக்கைகளும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கவலைப் படவேண்டாம் என்று மறக்காமல் குறிப்பிடு"** என்றான்.

தங்கள் பெண் பிள்ளைகளைக் காண வில்லை என்று உகண்டாவுக்கு வெளியே தகவல் போகச் செய்துவிடுவார்களோ என்று நினைத்தே பதில் போட்டான்.

அத்தோடு நிற்காமல், இரண்டு குடும்பத் தினரையும் அழைத்து கொஞ்சம் பணம் கொடுத்தான்.

அவர்கள் மறுத்தபோதும், **"இதை நான் தானமாகத் தரவில்லை. அதிபர் மாளிகையில் பணி செய்தவர்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமை. நீங்களும் எனக்கு பெற்றோர் மாதிரித்தான்! என்னை உங்கள் பிள்ளையாக நினைத்துக் கொள்ளுங்கள். இந்தாருங்கள்"** என்று கூறினான்.

அமீனின் நடிப்பில் அவர்கள் மயங்கித் தான் போனார்கள். அவன் சொன்னதை கபடமில்லாமல் நம்பினார்கள்.

## தருவது ரசிகன்

அமீன் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களும், அடக்குமுறைகளையும், கண் காணிப்புக்களையும்மீறி உருவாகத் தொடங் கின.

தலைநகரான கம்பாலாவில் இராணுவ ஜீப் ஒன்றின்மீது கைக்குண்டு வீசப்பட்டது. காயங்களுடன் இராணுவத்தினர் தப்பிக் கொண்டனர்.

அதனையடுத்து சந்தேகத் தில் பலர் கைதானார்கள். அவர் களை விடுவிக்குமாறு கோரி மக்கள் கூட்டம் கூட்டமாக பொலிஸ் நிலை யங்கள் முன்பாக கூட ஆரம்பித் தனர்.

**"மக்களை கூட்டமாக திரள அனு மதிப்பதே ஆபத்து. முதலில் கூட்டமாக வருவார்கள். பின்னர் ஊர்வலமாக வருவார்கள். அதற்குப் பின்னர் ஆயுதங்களோடும் வருவர். அதனால் மக்கள் ஒன்றாக திரண்டு நிற்க அனுமதிக்கக்கூடாது. நாட்டு நிலை காரணமாக பலர் ஒன்றாக கூடி நிற்பதோ, ஊர்வலம் போல செல்வதோ தடை செய்யப்படு கிறது. மக்களின் பாதுகாப்பை முன்னிட்டே இத்தடை அமுலுக்கு வருகிறது"** என்று அறிவித்தான் அமீன்.

கூட்டம் கூடியதாக பலர் கைதாகி உதைக்கப்பட்டனர். பலரை தடுத்து வைத்திருந்தனர். **"நாட்டின் பாதுகாப்பு கருதி அவர்கள் கைதாகினர். நிரபராதிகள் என்று தெரிந்தால் அடுத்த நிமிஷமே விடுதலையாவர்"** என்று அமீன் வானொலியில் கூறினான்.

எங்கும் அச்சம் சூழ்ந்தது. அமீனை தீர்த்துக்கட்ட ஒரு குழு தயாரானது.

ஆயுதம் தயார்.

ஆட்கள் தயார்.

திட்டம் தயார்.

**(இடி தொடரும்)**

# உதிர்ந்துபோன ஏழு உயிர்கள்



ஸ்ரீதேவி

ரமேஷ். உமா மகேஸ்வரி தம்பதிக்கு இரண்டே இரண்டு பிள்ளைகள். முதல் பிள்ளை ஸ்ரீதேவி. இரட்டாவதாக மகன் சத்யா.

ஸ்ரீதேவிமீது கொள்ளைப்பிரியம். சென்னையில் பெரும் தொழிலதிபரான ரமேசும், மனைவியும் ஸ்ரீதேவியை சேலத்தில் படிக்க வைத்தனர்.

ஸ்ரீதேவிக்கு அடிக்கடி தலைவலி வந்தது. டாக்டரின் யோசனைப்படி கண் ணாடி அணிந்தாள். அப்படியும் சுகம் வராமல் போனதால் நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியிடம் காண்பித்தனர்.

ஸ்ரீதேவியின் மூளையில் கட்டி இருப்ப தாகவும், சத்திர சிகிச்சை மூலம் அகற்றி விடலாம் என்று கூறினார்.

அக்டோபர் 13ம் திகதி சத்திர சிகிச்சைக்கான நாளாக குறிக்கப்பட்டது.

தீவிர பாபா பக்தர்களான தம்பதிக்கு பாபாவிடம் ஆசிர்வாதம்பெற்றபின்னரே சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்று பிடிவாதம்.

அக்டோபர் பத்தாம் திகதி வருமாறு பாபா ஆசிரமத்தில் இருந்து அழைப்பு வந்ததாம்.

புட்டர்பத்திக்கு சென்று குடும்பமாக தங்கியிருந்தனர். அக்டோபர் 10ம் திகதி பாபா அழைக்கவில்லை. அதன் பின்னர் மேலும் 50 நாட்கள் தங்கியிருந்தும் அழைப்பு வரவில்லை.

சத்திரசிகிச்சைக்கான நாள் தள்ளிப் போய்விட்டது. குழந்தை ஸ்ரீதேவிக்கு நோய் தீவிரமானது. புட்டர்பத்தியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல் லும் வழியில் அந்த பிஞ்சு உயிரிழந்தது.

அதன் பின்னர் நடந்ததுதான் கொடு மையிலும் கொடுமை. தமது குழந்தை பாபாவிடம் சென்றுவிட்டது, தாமும் செல்ல வேண்டும் என்று நினைத்த தம்பதியர் குடும்பத்தோடு தற்கொலை செய்துகொண்டனர்.

இன்னொரு குழந்தையான சத்யனுக் கும் பூச்சி மருந்து கொடுத்தனர். தாய் தந்தையோடு அக் குழந்தையும் செத்துப் போனதுதான் கொடூரம் நெஞ்சை பிசையும் சோகம். மொத்தம் ஏழுபேர் தற்கொலை செய்து கொண்டனர்.

எதுவும் அளவுக்கு மீறினால் ஆபத்து என்பதற்கு இச் சம்பவம் ஒரு உதாரணம்.

# பெண் அமைச்சர்மீது குறும்பான குற்றச்சாட்டு

இந்தியாவில் சிவசேனா அமைப்புக்கு பால்தக்கரே தலைவராக இருக்கிறார்.

மும்பாயில் இவரது கட்சி தற்போது இறங்குமுகத்தில் இருக்கிறது.

இதனால கட்சியின் செல்வாக்கை மறுபடி உயர்த்த 'ஃபயர்' என்ற சினிமா படத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து செல் வாக்கு தேடுகிறார்.



பாரதிய ஜனதா கட்சி யுடன் கூட்டு வைத்திருக் கும் பால் தக்கரே, மத்திய அமைச்சராக இருந்த சுஷ்மா சவராஜ்மீது குற்றம் சாட்டியுள்ளார்.

"பெரிய மனுஷியான சுஷ்மா, படத்தின் நாயகி ஷப்னாவும் நெருங்கிய தோழிகள். அதனால் சுஷ்மா அமைச்சராக இருந்த போது சுலபமாக தணிக்கை யில் அனுமதி கிடைத்துவிட் டது" என்று பால்தக்கரே சொல் எறிந்துள்ளார்.

இந்த குறும்பான இரட்டை அர்த்த குற்றச் சாட்டைக் கண்டு சுஷ்மா கலங்க வில்லை. "உண்மைதான். நானும் ஷப்னாவும் நெருங்கிய தோழிகள்தான். ஆனால் படத்தின் இயக்குநர் தீபாவை எனக்குத் தெரியாது. இப்படம் தொடர்பாக ஷப்னா என்னோடு பேசவும் இல்லை" என்று கூறுகிறார் சுஷ்மா.

இப்படத்திற்கு ஆதரவு தெரிவித்து பெண்கள் அமைப்புக்கள் மெழுகுவர்த்தி ஏந்தி போராட்டம் நடத்தியுள்ளன. அவ்வாறு போராட்டம் நடத்திய அமைப்புக்களில் இரண்டு 'லெஸ்பியனிச'த்தை பகிரங்கமாக ஆதரிக்கும் அமைப்புக்களாகும்.

"லெஸ்பியனிசம் எமது உரிமை. இதில் தலையிட எவருக்கும் அதிகாரமில்லை" என்று அவை கூறுகின்றன.

1996ல் வெளிநாடுகளில் வெளியாகி விட்டது ஃபயர். இந்தியாவில் சமீபத்தில் வெளியாகி சில வாரங்கள் சுமுகமாக ஓடியது. தற்போதும் ஓடிக்கொண்டிருக் கிறது.

மும்பாயிலும், டில்லியிலும் மட்டுமே சிவசேனாவின் எதிர்ப்பால் சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. இச் சர்ச்சைகளை பயன் படுத்தி லெஸ்பியனிசத்தை நியாயப்படுத்த ஒரு சாரார் முயற்சிப்பதாக இந்தியப் பத்திரிகைகள் சில குற்றம் சாட்டியுள்ளன.

படம் திரையிடுவதை எதிர்ப்பதும் தவறு, லெஸ்பியனிசத்தை ஆதரிப்பதும் தவறு என்பது அவற்றின் வாதம். தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிடம் இப் படம் பற்றி கேட்டுள்ளனர். 'எத்த னையோ கதை இருக்க, இப்படி ஏன் படம் எடுக்க வேண்டும்?' என்று கேட்டுள் ளார் ஜெயலலிதா.

# அதிர்ச்சி தரும் பெண்கள்

இளம் பெண்கள் இருவர் அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டி பரபரப்பை ஏற்படுத்தியி ருக்கிறது.



தங்கள் பதினைந்து நாள் விடுமுறையை தின மும் ஐந்து ஆண்களுடன் பகிர்ந்து கொண்டதாக பேட்டியளித்துள்ளனர்.

ஒருவரது பெயர் சாரா. 18 வயது. அவரது சிநேகிதி லூசிக்கு 22 வயது. இவர்களது பேட்டியைப் பார்த்தவர்கள் தலையில் அடித்துக் கொள்கின்றனர். இவர்களோ படு அலட்சியமாக தொடர்ந்து பத்திரிகை களுக்கும் பேட்டி கொடுத்துள்ளனர்.

எங்களுக்கு பிடித்த மான ஆண்களுடன் நாங்கள் சந்தோசமாக இருக்கிறோம். ஆண்கள் மட்டும்தான் இப்படி இருக்கலாமா? நாங்கள் செய்யக்கூடாதா? என்று கேட்கிறார்கள்.

"இதில் எங்களுக்கு மென்மையான ஆச்சரி யங்களும் காத்திருந்தன. பயங்கரமான அனுப வங்களும் ஏற்பட்டன" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இவர்களில் லூசி பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரின் மகள். இவரும் பல்கலைக் கழகத்தில் சட்டம் படித்து வருகிறார்.



# மதகுருமார் மோதல்

சாந்தமே உருவாக நின்று, சாந்தியைப் போதிக்க வேண்டிய புத்த பிக்குகள் சண்டையில் பிரியம் வைக்கலாமா?

தென்கொரியாவில் உள்ள சியோலில் இரண்டு புத்த குருமார் கோஷ்டிகள் தமக்குள் மோதிக் கொண்டன.

'சோகிகியே' என்று அழைக்கப்படும் அந்தக் கோவில் நிர்வாகத்தை கைப்பற்றவே மோதல்.

77 புத்தகுருமார்கள் கைகலப்பில் இறங்கினர். அவர்களில் 28 பேர்மீது பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

முட்டையைக் கூட உடைக்கக்கூடாது என்றார் பகவான் புத்தர். இவர்கள் தமக்குள் மோதி மண் டைகளை உடைத்துக் கொள்கிறார்கள்.

www.padippakam.com



# சின்ன எடை

குரங்குகளில் மிகக் குள்ளமானவை 'மாமொசெற்' குரங்குகள். இவற்றிலேயே பல ரகங்கள் உள்ளன.

இங்கு விரலிடுக்கில் உள்ளதும், பெண்ணின் கையில் உள்ளதும் வெவ்வேறு ரகமான மாமொசெற் குரங்குகள்.

அமெரிக்காவில் உள்ள வெப்ப மண்டலத்தில் இக் குரங்கு குட்டிகள் சீவிக்கின்றன. இவை உயரத்தில் மட்டுமல்ல, எடையிலும் மிகக் குறைந்தவை.

விரலிடுக்கில் குரங்கு. விரலில் மோதிரம். இந்த மோதிரத்தின் எடைதான் இந்தக் குரங்குக் குட்டியின் எடை. அதனை காண்பிக்கத்தான் இப்படியொரு போஸ்.

## தகவல் பெட்டி



# ஒன்றில் மூன்று

இது நம்நாட்டு அபூர்வம். அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்பு பிரதேசத்தில் இந்த அபூர்வ தென்னை மரம் காணப்படுகிறது.

மூன்று கிளைவிட்டு மூன்று கிளையிலும் செழிப்பாக காய்த்து குலுங்கி நிற்கிறது. 36 அடி உயரம் வளர்ந்திருக்கிறது. இதன் உரிமையாளருக்கு மூன்று மடங்கு பலன். பிள்ளையைப் பெத்தா கண்ணீரு, தென்னையை வைத்தால் இளநீரு என்று கவியரசு சொன்னது சரிதானே! (படமும், தகவலும்: இராசேஸ்வரன்)



# மார்பழகர்



அமெரிக்கா-பென்சில்வேனியா மாநிலத்தில், கிரீன்ஸ்பேக்கைச் சேர்ந்த திருவாளர் ஐசாக் நெஸ்ஸர் என்பவருடைய மார்பகம்தான் இன்றைய உலகில் மிகப் பெரிய அளவுடையது என்று உலக சாதனை படைத்துள்ளது. இவருடைய மார்பகத்தின் அளவு, யப்பா, யப்பா... 1.88 மீட்டர் (6 அடி 2 1/16 அங்குலம்.)

நெஸ்ஸர் எட்டு வயதுச் சிறுவனாக இருக்கும்போதே பளுதூக்கும் பயிற்சியைத் தொடங்கினார். அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து 20 வருடங்களாக இடைவிடாமல் தொடர்ந்து பயிற்சி பெற்று வருகிறார்.

கைகளை ஒரு மேசையில் ஊன்றி 254 கிலோ கிராம் (560 இறாத்தல்) பளுவைத் தன் மார்பகத்துக்குத் தருகிறார். 136 கிலோ (300 இறாத்தல்) எடைகொண்ட கர்லாக் கட்டையைச் சுற்றுகிறார். இவ்விரு பயிற்சிகளும், தினசரி பலதடவைகள் தொடர்கின்றன.

இவரது மார்பழகை காண்பதற்கு ஆண்களும் பெண்களும் திரளுகின்றனர். சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தி மார்பை நிமிர்த்தி காண்போரின் விழிகளை விரியச் செய்கிறார் இந்த உலக சாதனை மார்பழகர்.

# மிஸ் ஒலிம்பியா



மிஸ் ஒலிம்பியா போட்டியில் வெற்றிபெறுவதற்கு கெட்டியான தேகம் கண்டிப்பாகத் தேவை. உடம்பை கெட்டிப்படுத்துதல் ஆண்கள் சமாச்சாரம் என்ற கதை எப்போதோ மலையேறிவிட்டது. கெட்டியான உடல்களோடு மிஸ் ஒலிம்பியா போட்டிகளில் பெண்கள் தூள் கிளப்புகிறார்கள்.

இங்கு அசத்தும் பெண்ணின் பெயர் கொறி எவர்சன். மிஸ் ஒலிம்பியாவாக தொடர்ந்து ஆறுதடவை வெற்றிபெற்று உலக சாதனை படைத்த வல்லழகி. 1984 முதல் 1989வரை தொடர்ந்து வெற்றி பெற்றார்.

ஒரே அடியில் உடம்பிலுள்ள எலும்புகளை முறித்து எண்ணுமளவுக்கு அக்காச்சி உடல் வலிமை கொண்டவர். மானே, மயிலே என்ற வர்ணிப்புக்களை மூட்டை கட்டிப் போட்டு விடுங்கள். மீறினால் எலும்புகள் மிஞ்சாது.

# ஊரும் உத்தி



விரியன் பாம்புகள் கொடிய விஷம் கொண்டவை. சில விரியன் வகைப் பாம்புகள், அதிக வெப்பமான பாலைவனங்களிலும் வாழக்கூடியன. பாலைவனத்தின் கடும் சூட்டைக் கூட சிரமத்தின் மத்தியில்தான் சமாளிக்கின்றன.

ஏதாவது சிறு நிழல் இருந்தால் சற்று நேரம் ஒதுங்கியிருக்கும். அதே இடத்தில் வெப்பம் அதிகரிக்குமானால் அது நிச்சயம் வேறிடம் சென்று ஒதுங்க வேண்டும். புதிய இடத்தைச் சென்றடைய- இடையிலுள்ள சூடான மணலைத் தாண்டிச்செல்ல, தந்திரமான முறையை இப்பாம்பு கையாளுகிறது. வழக்கம்போல ஊர்ந்து செல்லாமல் தன் நகர்வு முறையை மாற்றிக்கொள்கிறது.

பாம்பின் உடல் முன்பகுதியை விட வால்பகுதி ஓரளவு வெப்பத்தைத் தாங்கக்கூடியது. பக்கவாட்டில் முன்னுடம்பைச் சுருட்டி, ஒரு முடிச்சு போலாக்கி உடலை நிலத்தில் பதித்து முன்புறம் உந்துகிறது. அப்போது பின்புறம் முன்னே நகர்கிறது. இவ்வாறு மாறிமாறி நகர்ந்து செல்கிறது.

பாலைவன வெப்ப மணலில் இவ்விரியன் பாம்புகள் நகரும்போது உருவாகும் தடங்களைப் படத்தில் காண்கிறீர்கள். தந்திரமான நகர்வு என்று கூறலாம்.

மனிதர் நடந்தால் மட்டும்தான் தடம் பதியுமா? பாம்புகூட தடம் பதித்திருக்கும் அழகைப் பார்த்தீர்களா?


படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 84

# இலண்டனுக்கு பறந்த நடிகர் கணவரைக் கண்டிக்காத துணைவி

தமிழ்ப்பட உலகில் இன்று முன்வரிசையில் உள்ள இரண்டு நடிகர்களுடனும் மிக நெருக்கமாக இருக்கிறார் இரண்டெழுத்து நடிகை. இரண்டு பேருக்குமே அந்த நடிகையின் கண்கள்மீதும், கொஞ்சம் உதடுகள்மீதும் ஒரு கண் என்று கோடம்பாக்கம் வட்டாரத்தில் பரவலாகவே பேசப்படுகிறது.

அந்த நடிகையின் தாயாரும் முன்னாள் தாராள நடிகைதான். பின்னர் தன் வித்தைகளை அரசியலில் காண்பித்து பல முக்கிய பிரமுகர்களை வளைத்துப் போட்டவர்.

பிரபலமான இரு நடிகர்களில் ஒருவர் குறிப்பிட்ட சில மாதங்களாக நடிகையை தனியாக தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். இது ஓரளவு வெளியே தெரிந்தாலும் நடிகரின் செல்வாக்குக்கு பயந்து பெரிதாக வெளியில் பேசப்படவில்லை.

தமிழ் இலக்கிய பாத்திரம் ஒன்றின் பெயரோடு இணைத்து பெயர் சூட்டப்பட்ட படத்தில் இரண்டாவது பிரபல நடிகருடன் இணைந்தார் நடிகை.

நடிகையின் பட்டுப்போன்ற மேனியும், உடல்வாகும் நடிகரை கவர்ந்துவிட்டது. அதிலும் முத்தம் கொடுக்கும் காட்சியில் நடிகை காட்டிய ஈடுபாடு நடிகரை வெகுவாக கவர்ந்துவிட்டது. இந்த விவகாரங்களில் சகலகலா வல்லவரான நடிகருக்கு நடிகை நெருக்கமான காட்சிகளில் உணர்த்திய குறிப்புக்களும் மகிழ்ச்சியளித்தன.

ஒரு சில தடவைகள் நடிகரும், இரண்டெழுத்து நடிகையும் சென்னையில் தனியாகச் சந்தித்தனர். நடிகரின் மனைவிக்கு மூக்கு நீளம். அவரும் நடிகையாக இருந்தவர். நடிகரின் நடவடிக்கையில் மனைவிக்கு சந்தேகம் எழுந்தது.

ஏற்கனவே வித்யமான நடிகை விவகாரத்தில் நடிகரை துப்பறிந்து பிடித்தவர் மனைவி.

மனைவிக்கும் சந்தேகம் வராமல் நடிகையுடன் சில நாட்களை கழிக்கத் திட்டமிட்டார் நடிகை.

அந்தத் திட்டத்தின் பிரகாரம் இலண்டனுக்கு புறப்பட்டுச் சென்றார் நடிகை. பின்னாலேயே தனியாகப் புறப்பட்டுப் போனார் நடிகர்.

இலண்டனில் பிரபல விடுதி ஒன்றில் எவ்வித இடையூறுமின்றி இரண்டெழுத்து நடிகையுடன் உல்லாசம் கண்டார் நடிகர்.

நடிகையின் திறமையைக் கண்டு சொக்கிப் போனதால், குறிப்பிட்ட நாட்களுக்கு மேலும் இருவரும் இலண்டனில் தங்கியிருந்தனர். அதனால் நடிகைக்கு நஷ்டம் இல்லையென்றாலும், நடிகருக்கு பெரும் செலவு.

பிரபல தொழிலதிபர்களே அந்த நடிகையிடம் கோடிக் கணக்காக இழந்தனர். அதனோடு ஒப்பிட்டால் நடிகர் இழந்தது சொற்பமே.

நடிகைக்கு ஒரே ஒரு வருத்தம், என்னதான் நெருக்கமாக இருந்தாலும் தங்கள் படங்களில் இருவருமே தனக்கு வாய்ப்புத் தரவில்லையே என்றுதான் வருத்தம்.

## மயங்கினார் இயக்குநர்

அது இல்லாவிட்டால் உடல் வெறும் கூடாகிவிடும். அதன் பெயரில் தமிழில் வெளியானது ஒரு படம்.

அப்படத்தின் இயக்குநர் பெரிய இடத்து பிள்ளை. பல வெற்றிப்படங்களை கொடுத்தவர். அவரை வளைத்துப் போட பல நடிகைகள் முயன்றும் மனிதர் அசைந்து கொடுக்கவில்லை.

உலக அழகியிடம் மட்டும் சிறிது தடுமாறினார். மணியான நடிகை ஒருவர் மையல் கொண்டு பலமுறை அழைத்தும் வைராக்கியம் காத்தவர்.

அப்படிப்பட்ட இயக்குநர் உடலுக்கு தேவையான முன்னெழுத்து சமாச்சாரத்தின் பெயரில் படம் எடுத்தார். அப் படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்தவர்மீது இயக்குநரின் மனம் சாய்ந்துபோனது.

படம் வெளியாகி ஓடியும் முடிந்துவிட்டது. அந்த நாயகியுடன் ஏற்பட்ட தொடர்பு இன்னமும் நீடிக்கிறதாம்.

விவகாரமித்திரருக்கு வந்த மேனகை மாதிரி, இயக்குநருக்கு அந்த நடிகை என்று அவரது யூனிட்டில் உள்ளவர்களே பேசிக் கொள்கிறார்கள்.

இந்த விவகாரம் இயக்குநரின் மனைவிக்கும் தெரிந்திருக்கிறது. அவர் தெரியாதது போல இருக்கிறார்.

திருமணத்தின் பின்னரும் இயக்குநரின் மனைவி சில படங்களில் நடித்தார். அப்படங்களின் கதாநாயகர்கள் தன் மீது தாராளமாக சாயவும், நெருங்கித் தழுவவும் அவரும் அனுமதித்தார். அதனால் கணவரையும் அவர் கண்டிக்கவில்லை.

★★



சரத்குமார்-குஷ்பு
படம்: சிம்மராசி



ஆஷா மெஹ்ரா
படம்: காமா

"தேனிருக்கும் மலரினிலே
நீயிருக்கச் சம்மதமா?
பாலிருக்கும் கனிகளிலே
பழகிவரச் சம்மதமா?"

## விஜய் நடிப்பார்

பாக்யராஜ் இயக்கும் படம் ஒன்றில் பிரபுதேவா கதாநாயகன். இன்னொரு படத்தில் பார்த்திபன் கதாநாயகன். இப்படங்களில் பாக்யராஜ் நடிக்கப்போவதில்லை.

விஜய்க்கு பாக்யராஜ் கதை சொன்னதாகவும், அது ஒத்துவராமல் விஜய் தழன்று கொண்டதாகவும் ஒரு தகவல்.

அதனை பாக்யராஜ் மறுக்கிறார். விஜய் கதை கேட்டது உண்மை. கதை அவருக்கு பிடித்திருந்தது. இருவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது படம் தயாராகும். என் இயக்கத்தில் விஜய் கண்டிப்பாக நடிப்பார் என்கிறார் பாக்யராஜ்.

## என்றும் என்னுடன்

குறைந்த செலவில் சங்கீதாவை கதாநாயகியாக வைத்து ஒரு படம் பண்ணுகிறார்கள். 'என்றும் என்னுடன்' என்று பெயர் சூட்டியுள்ளனர். சங்கீதாவுடன் தலைவாசல் விஜய், பாண்டு, வையாபுரி, ராஜீவி மணிவண்ணன் உட்பட பலர் நடிக்கவுள்ளனர்.

புதிய இயக்குநரான எம்.ராகவேந்தர் இயக்கும் இப்படத்திற்கு இசை பொழிபவர் தேவா.

## ரஜினியின் அன்பு

மீனாவுக்கும் ரஜினிக்கும் இடையே பரஸ்பர அன்பு உண்டு. தனது படங்களில் அடுத்தடுத்து மீனாவுக்கு வாய்ப்புத் தந்தவர் ரஜினி.

தற்போது 'படையப்பா' படத்தில் மீனா இல்லாது போனாலும், மீனாமீது கொண்ட அன்பு குறையவில்லை. ஹைதராபாத்தில் நடக்கும் திரைப்பட விழாவில் மீனா விளக்கேற்றி வைக்கிறார். மீனாவை பலமாக சிபாரிசு செய்தவர் ரஜினி. இந்தி நடிகர் சத்துருக்கன் சின்ஹா விடம்தான் ரஜினி சிபாரிசு செய்தாராம்.

## மினி சினி

* 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' தெலுங்கில் தயாரிக்கப்படுவது தெரிந்ததே. தெலுங்குப் பதிப்புக்கு 'ராஜா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் சிம்ரான் பார்வையற்றவராக நடிப்பதைத் தொடர்ந்து, 'நிலவே முகம் காட்டு' படத்தில் தேவயாணி பார்வையற்றவராக நடிக்கிறார்.

* 'காலமெல்லாம் காதல் வாழ்க', 'உன்னுடன்' போன்ற படங்களை இயக்கிய ஆர்.பாலு, அடுத்து பிரபுதேவா நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* 'பாரதி கண்ணம்மா', 'உல்லாசம்' போன்ற படங்களில் நடித்த பேபி ஸ்வேதா, சந்தோஷ்சிவன் இயக்கும் 'மல்லி' படத்தில் மல்லியாக நடிக்கிறார்.

* 'தலைமுறை' படத்தில் வில்லனாக அறிமுகமாகி அசத்திய, இயக்குநர் ராஜ்கபூர் அடுத்து 'தாஜ்மஹால்', 'கரிசக்காட்டுக்காதல்' போன்ற படங்களில் வில்லனாக நடிக்கிறார்.

* 'அப்படிப் போடு' என்ற பெயரில் பாண்டியராஜன்-ஈஸ்வரிராவ் நடிக்க ஆரம்பமான படம்தான் தற்போது 'சுந்தரி நீயும் சுந்தரன் நானும்' என்ற பெயரில் தயாராகி வருகிறது.

* 'சொலலாமலே' படம் இந்தியில் தயாரிக்கப்படுவது தெரிந்த செய்தி. தமிழில் கௌசல்யா வேடத்தில் இந்தியில் நடிக்கப்போகிறவர் ராணி முகர்ஜி என்பது புதிய செய்தி.

* 'கள்ளழகர்' படத்தில் நடித்து வரும் விஜயகாந்த் அடுத்து 'கௌரவர்', 'பெரியண்ணர்' போன்ற படங்களில் நடிக்கிறார். இதைத் தொடர்ந்து 'சிம்மாசனம்' என்ற புதிய படத்தில் நடிக்கவுள்ளார்.

* தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்திப் படங்களில் நடித்துள்ள சிம்ரான் முதன் முறையாக கன்னடப்படமொன்றில் நடிக்கவுள்ளார். இதில் ரவிச்சந்திரன் ஹீரோவாக நடிக்கிறார்.

* வசந்த் இயக்கத்தில் சூர்யா-ஜோதிகா நடிக்கும் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் குஷ்பு.



ராணிமுகர்ஜி

www.padippakam.com

## ...ளசல்யா—நந்தினி

...கௌசல்யா மலையாளத்தில் ...னி என்ற பெயரில் நடிக்கிறார். ... இரண்டுமே அவரது சொந்தப் ...ர் அல்ல. கவிதா என்பதுதான் ...ந்தப் பெயர்.

...கௌசல்யாவை கவிதா என்று ...ழப்பவர் முரளி மட்டும்தான். ...வருமே கன்னடக்காரர்கள். நடிப் ...ாக மட்டும் தமிழ் பேசுபவர்கள். ...கௌசல்யா, நந்தினி இரண்டிலும் ...ாவுக்கு பிடித்த பெயர் எது? ...சல்யாதானாம். "அந்தப் பெயரில் ...மெல்லாம் காதல் வாழ்க ...தில் நடித்ததால்தானே பெரிய ...கையாக பிரபலம் கிடைத்தது" ...கிறார்.

## ...ணி முகர்ஜி

...ந்திப்பட உலகில் கலக்கல் நடத்த ...டங்கியுள்ளார் ராணி முகர்ஜிக்கு ...லும் சில வாய்ப்புக்கள் கிடைத் ...க்கின்றன.

...விஜய், பிரபுதேவா ஆகியோருக்கு ...டியாக நடிக்க வெவ்வேறு ...ழப்புக்கள். இந்தியில் பிஸியாகிக் ...ண்டிருந்தாலும் தமிழில் நடிக்க ...தித்திருக்கிறார்.

...திரைப்படம் தவிர, விளம்பர படங் ...ல் அசத்துவதும் இவருக்கு ...பந்த தொழில்.



அஜித்குமார்

## பிரசாந்த்—ரம்பா

பிரசாந்த்துக்கு 'ஜீன்ஸ்' படத்தின் பின்னர் மறுபடி பட வாய்ப்புக்கள் தேடி வருகின்றன.

ஐஸ்வர்யாராயால் துடிப்புள்ள இளைஞர் என்று பாராட்டப்பட்ட ராசியோ என்னவோ சிம்ரானுடனும் நடித்துவிட்டார். அடுத்து 'செவ்வாழைக் கால் அழகி' ரம்பாவுடன் ஜோடி சேர்ந்து பார்க்கப்போகிறார்.

பிரசாந்த்-ரம்பா இணைந்து நடிக்கும் புதிய படத்திற்கு 'பூமகள் ஊர்வலம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. லிவிங்ஸ்டன் முக்கிய பாத்திரத்திரத்தில் நடிக்கிறார்.

ராதிகா, மணிவண்ணன், விவேக், தலைவாசல் விஜய், பாண்டு, வையாபுரி, பொன்வண்ணன் உட்பட பலர் நடிக்க, இயக்கம் மதுரவன். இவர் புதியவர். இயக்குநர் மணிவண்ணனின் உதவியாளராக இருந்தவர். 'லவ் டுடே' படத்திற்கு இசையமைத்த ஷிவா இப்படத்திற்கும் இசை மீட்டுகிறார்.

## வெளுத்து வாங்கும் வில்லத்தனமான கதை

பிரகாஷ்ராஜுக்கு திருஷ்டி சுற்றிப் போட்டிருக்கிறார் அவரது மனைவி. 'குருபார்வை' படம் நன்றாக வசூல் பண்ணிக்கொண்டிருக்கிறது.

காதல் கதை உள்ள படங்களாக எல்லோரும் சுட்டுத்தள்ளிக்கொண்டிருக்க, இயக்குநர் மனோஜ்குமார் துணிந்து வித்தியாசமான வில்லத்தனமான கதையாக எடுத்திருக்கிறார். முயற்சி திருவினையாகிவிட்டது. படம் ரசிக மகா ஜனங்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது. அதனால் பிரகாஷ்ராஜ் பக்கம் தயாரிப்பாளர்களது பார்வை திரும்பப்போகிறது. முற்பணத்தோடு வரிசையில் நிற்கப் போகிறார்கள்.

## இரண்டாம் நாயகன்

ரஜினி, கமலுக்கு அடுத்த இடத்தை மார்க்கெட்டில் பிடிப்பார் என்று எதிர்பார்க்கபட்டவர் அப்பாஸ். இப்போது இரண்டாவது நாயகனாக பல படங்களில் நடித்து வருகிறார்.

ரஜினியின் படையப்பாவில் அவரது மகனாக நடிக்கிறார். நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் 'கேள்வியின் நாயகன்' படத்திலும் இரண்டாவது நாயகன் அப்பாஸ்.

தேவயாணி, ரகுவரன், கவுண்டமணி, மனோரமா ஆகியோரும் 'கேள்வியின் நாயகன்' படத்தில் நடிக்கின்றனர். கதை, திரைக்கதை வசனம், இயக்கம் எஸ்.குமார். இவர் புதிய இயக்குநர். இசை இளையராஜா.



நாகார்ஜுன்-ஹீரா
படம்: போலீஸ் திவ்யாரா

மனிஷா கொய்ராலா
படம்: முதல்வன்

நக்மா
படம்: மாயா

முகப்பில்

## சிம்மராசி சறுக்கல்

'நாட்டாமை' 'சூரியவம்சம்', 'நட்புக்காக' என்று தொடர்ச்சியாக வெற்றிப்படங்களை தந்தவர் சரத்குமார். திருஷ்டிப் பரிகாரம்போல வந்தது 'சிம்மராசி'. படம் பலத்த அடி வாங்கியுள்ளது. 'சிம்மராசியின்' தோல்வியால் ஆடிப்போன சரத், தனது வீட்டை சாஸ்திர முறைப்படி இடித்து திருத்திக் கொண்டிருக்கிறார்.

நக்மா விவகாரத்தால் பிரிந்துபோன சரத்தின் மனைவி சாயாவும் மறுபடி சரத்துடன் இணைந்துவிட்டதாக தகவல். அதனால் விவாகரத்து பிரச்சனையில் இருந்து சரத் தப்பிக் கொண்டார்.



## தாயின் கோபம்

கஸ்தூரியின் தாயார் பத்திரிகைகள் மீது எரிந்து விழுகிறார். சமீபத்திய நீலப்பட கசட் விவகாரத்தில் தன் மகளையும் சம்பந்தப்படுத்திவிட்டனர் என்று கோபமாம்.

ஆனால் கஸ்தூரி அது பற்றி வாயே திறக்கவில்லையாம். தாய்க்குலம்தான் நெருப்பெடுக்கிறார்.

## காமா காமா அதிரடிக் கவர்ச்சி

ஒளிப்பதிவாளர் அசோக்குமார் இயக்கும் 'காமா' படம் செக்ஸ் புயலை கிளப்ப இருக்கிறது.

சில்க் சுமிதாவை வைத்து அசோக்குமார் இயக்கிய 'அன்று பெய்த மழையில்' பரபரப்பாக பேசப்பட்ட படம்.

'காமா' படத்தில் பயங்கர சூடான காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எதற்கும் தயாராக மும்பையில் இருந்து வந்திருக்கிறார் ஆஷாமொஹ்ரா. கதாநாயகி அவர்தான். எதிர்பக்கத்தில் போஸ் கொடுக்கிறார் பார்த்துக்கொள்ளுங்கள்.

படத்தின் நாயகன் அசோக்குமாரின் மகன். தந்தை முன்பாக கதாநாயகியுடன் படுக்கையறைக் காட்சிகளில் நடிப்பதற்கும், நெருக்கமான காட்சிகளில் நடிக்கவும் வெட்கப்படுகிறாராம். இது நடிப்புத்தானே என்ற தந்தை உற்சாகம் கொடுக்கிறார்.

நெருக்கமான காட்சிகள் அதிகம் இருப்பதால் நடிப்பு என்பதையும் தாண்டி உணர்ச்சிவசப்பட்டு விடுகிறார் நாயகன்.

விதம் விதமான உடைகளில் ஆஷா மொஹ்ரா நடித்திருக்கிறார்.. கதாநாயகன் நாயகியை பலவித கோணங்களில் படம் பிடிப்பது போன்ற காட்சியில் ஆஷா கொடுத்த அதிரடி போஸ்களால் படப்பிடிப்புக் குழுவே சூடாகிவிட்டதாம்.

"மோகமா, ராகமா, தாகமா, வாசமா, சொர்க்கமா, எங்கு நான் போகிறேன். காமா, காமா, காமா" என்று அனுபாமா பாடும் பாடல் கிளுகிளுப்பாக படமாக்கப்பட்டுள்ளது.

ஆஷா போதாது என்று ஊர்வசி என்னும் புதுமுகம் ஒருவரையும் இறக்கியுள்ளனர். புதுநாயகன் விஷ்வாவின் கைகள் அவர்மேல் படாத இடமேயில்லை என்னுமளவுக்கு படு கிளுகிளுப்பான காட்சிகளில் ஒத்துழைத்திருக்கிறார் ஊர்வசி.

## ஹீராவின் கவனிப்பு

நாகார்ஜுனுடன் நடிக்கும் நாயகிகள் அவருடன் நகமும் சதையுமாக ஒட்டிக்கொள்வது வழக்கம். ஹீரா படப்பிடிப்பில் மட்டும் நெருங்கியதோடு சரி. மேலதிகமான நெருக்கங்களுக்கு மறுத்துவிட்டாராம்.

அஜித்குமார் முதுகுவலிக்கு சிகிச்சை பெறுவதற்கு அமெரிக்கா சென்று சமீபத்தில்தான் திரும்பினார். அஜித்குமாருடன் கூடவே சென்று பரிவோடு கவனித்து, கூடவே திரும்பி வந்திருக்கிறார் ஹீரா.

## காதோடு சொல்லுகிறோம்

**மூ**க்கழகி என்று புகழப்பட்ட நான்கெழுத்து நடிகை மலையாளத்தில் கொடியை பறக்கவிட்டுள்ளார். தமிழில் நடிப்பதாக இருந்தால் அக்கா, அண்ணி வேடம்தான் தருவார்கள். அரசியல் நெருக்கடியும் இருக்கிறது. அதனால் மலையாள புள்ளிகள் உதவியால் அங்கு கதாநாயகியாக நடித்துவருகிறார்.

**க**ஸ்தூரமான நடிகை 'காதல் கவிதை' பாடும் படத்தில் வெகு கவர்ச்சி காட்டி, படத்தின் நாயகனைக் கூட பாடல் காட்சிகளில் பாடாய்படுத்திவிட்டாராம். கதாநாயகனை மயக்கும் பாத்திரம் என்பதால், கவர்ச்சியை கொட்ட தக்க வாய்ப்பு. இடத்தை தக்கவைக்க இந்த வாய்ப்பைப் பயன் படுத்தியிருக்கிறார் நடிகை.

**பா**க்யமான நடிக இயக்குநரை 'தற்போதைக்கு சொந்தப் படங்களில் நடிக்க வேண்டாம். நடித்து பணத்தை கரியாக்க வேண்டாம்' என்று இல்லத்தரசி உத்தரவு போட்டுவிட்டாராம். அதனால்தான் தனது முன்னாள் சிஷ்யரை வைத்து படம் எடுக்க கதை தயார்படுத்தி வருகிறாராம். படத்தில் நடிக்காது விட்டாலும், கதாநாயகியாக நடிப்பவருக்கு வழக்கம்போல அன்புத் தொல்லை கொடுக்காமலோ இருக்கப்போகிறார்?

**போ**தைமருந்துக்கு அடிமையாகி மீண்டுவந்தவர் ஐஸ்நடிகை. அவரது தாயாரான லட்சுமிகரமான நடிகை மகளையும், குழந்தையையும் பராமரித்து வருகிறார். நடிக்கும்போதே 'ஐஸ்' நடிகைக்கு பெண் தோழிகள்மேல் தனிப் பிரியம். போதை மருந்து பழக்கத்தை நிறுத்தினாலும், அந்த 'நட்பு' பழக்கத்தை நிறுத்த மறுக்கிறாராம். இதனால் தாயாருடன் சின்ன சின்ன லடாய். தற்போதுள்ள நடிகைகளில் செண்பகமான நடிகைதான் ஐஸ் நடிகையின் உயிர்த் தோழியாகியிருக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

## காற்றில் எல்லாம் எமனின் காலடிகள்!

பிணப் புதையல்களுக்குள்ளும்
எலும்புக் குப்பைகளுக்குள்ளுமாய்
இது
நிர்ப்பந்திதத ஜீவிதம்!
•
இங்கே–
அதிகம் உயிருக்குப் பயப்பட
வேண்டியிருப்பது
ஆயுதபாணிகளைவிட
நிராயுதபாணிகளுக்குத்தான்
ஏனெனில்
இந்த இரு தசாப்த யுத்தத்தில்
அதிகம் இறந்தது
பொதுமக்கள்தானே!
•
இதற்குள்
அன்றாடம்
இலக்கில்லாது வரும்
'புல்லட்'டின் இலக்கிற்கு தப்பிப்பதே
பெரும் பாடாகிப்போகிறது!
•
இங்கே–
'புல்லட்' பயணிக்காத
அண்டவெளிகளில்லை!
காற்றிலெல்லாம் அதன் காலடிகள்!
•
எனக்காகக் காயப்பட்டுக்கிடக்கும்
என் வீட்டுச் சுவர்கள் சாட்சி!
பலமுறை நான்
படுத்துக் கொண்டதாலும்
ஒளிந்துக் கொண்டதாலும்
உயிர் தப்பினேன் என்பதற்கு!
•
இங்கே இரவு வரும்
விம்மி அழுது விழித்திருக்க!
பகலும் வரும்
கூடி ஒப்பாரி வைத்து
இறந்தோரை புதைக்க!
•
ஆக
ராசாத்தி!
யுத்தம் பறித்த என் உறவினரை
சொத்து சுகத்தை கேட்கவில்லை!
நிவாரணமோ?
நஷ்ட ஈடோ கோரவில்லை.
நீ சொன்ன சமாதானத்தை
கொஞ்சம் சமைத்துத்தா?
நாங்கள் மீளத் துளிர்க்க!

மீராவோடை எஸ். நஸீம்,
மருதானை.

## தனிமைத் தீபமும் விளம்பர நிலவும்

அது கைராசியான நேரம்
காற்று அவளை உரசிக்கொண்டு
என் பக்கத்தில் வந்து நின்று
கொண்டது!
••
கூழ் குடிக்கவே வசதியற்ற எனக்கு
காற்றின் முகத்தை கண்டபோது
கிடுகுக் கதவுகூட அகலத் திறந்து
விழா எடுத்தது என் இளவாலிபம்!
••
மனசு தலைகீழாய்த் தொங்க
நெஞ்சம் குனிந்து நின்று
பொங்கல் வைத்தது இதயக்கூட்டில்!
••
நாவு ஆலயங்களின் ஆராதனை
செய்ய–சின்னவனாகி மௌன
வாசிப்பை மெல்லக் கலைத்து
வார்த்தைப் பிடரியை மெல்ல
முறித்து அவளிடம் பேச
அவஸ்தைப் படுகின்றேன்!
••
கூதல் என்னை தழுவிக்கொள்கிறது
அவள் தன் முக்காடு கழற்றி
அருகில் வருமாறு அழைப்பது கேட்க
அருகில் போகிறேன்.....!

புல்வெளியில் நடந்த
மார்கழி நிமிஷங்களை
சேகரித்த மனது
ஒரு பனித்துளியை
ஆத்மாவிற்குள்
விதைத்து
வசந்தம் வளர்த்த
அருவி வயதை
அசைபோடுகிறது!
••
காற்று விரித்துவிட்ட
கண்ணீர்க் கம்பளத்தில்
உட்கார்ந்து கொண்ட
விழிகளின் ஓரத்தில்
சோகம் சுகமாக
படுத்துக்கொண்டு
சொர்க்கக் கனவுகளில்
மிதக்கின்றது!
••
மனசுக்குள் உவமைக் கோலங்கள்
தீபங்களாகின்றன!
அந்த நிலவை காற்று விளம்பரப்படுத்த
விழித்துப் பார்க்கிறேன்!
••
விளக்கு அணைந்திருக்க
வெறும் பாயில் நான் மட்டும்!

உவைஸ்கனி.

## கைதான சொர்க்கம்!

உயிரில் தீப்பிடித்த
இந்த நரக நாட்கள்
ஜீவிதத்தை
சிதைக்கின்ற
சுவாலையில் எழும்
புகையினில் அந்த
மல்லிகையின் முகத்தை
மலரவைக்கும் கொடுமை
மனதில் நிகழ்கிறது!
••
என்றும் கமழ்கின்ற
புஷ்பத்தின் புன்னகையில்
இன்றும் இனிக்கும்
இதயத்தின்
சந்தோசத்திற்கு
இடையூறு வராது
இமைகளை
காவல்வைத்து
விழிகளில்
பூட்டிக்கொண்டு
தேனருவியில்
என் கனவுப் படகில்
நானும் என் உயிரும்
தித்திக்கத் தித்திக்க
பயணித்தோம்!
••
வைகறையின்
வாசலை திறந்தபோதுதான்
வீசா இல்லாமல்
வெளிநாட்டில்
பிடிபட்ட எங்கள்
இலங்கையரைப் போல
என் சொர்க்கம்
கைதாகிப்போனது!
••
இப்போது
என்னில் நான்
வெறிச்சோடிக் கிடக்கிறேன்:
ஊரடங்கு இடப்பட்ட
எங்களின்
தெருக்களைப்போல!
கட்டாரிலிருந்து–
பூண்டுலோயா மெய்யன்
நட்ராஜ்.

## யார் இவர்?




## உண்மைச் சம்பவம்

### கடற் பரப்பில் தன் உடன் பிறப்பை பறிகொடுத்த நங்கை நளாயினியின் அனுபவம்

கடல் அலைகள் நித்தம் முத்தமிடும் வல்வெட்டித்துறை எங்கள் ஊர்.

கம்பர்மலை என்ற கிராமமே அங்குதான் உண்டு. அங்கே பாரதி வீதியில் எங்கள் வீடு.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அருணகிரிராசாவின் இரண்டாவது புதல்வி நான்.

பெயர் நளாயினி– வயது 27.

இரவும் பகலும் மாறி மாறி வருவது என்னவோ உண்மைதான்.

ஆனால் என் வாழ்வு மட்டும் இருண்டு கிடக்கிறதே.

அது மாறவில்லை. மாறப்போவதும் இல்லை.

ஓடும் குருதியின் ஒவ்வொரு அணுவோடும் கலந்துவிட்ட அந்த உணர்வு.

அதைப் பகிர்ந்து கொள்வதால் திக்கெட்டும் வாழும் வழிகெட்ட–நொந்த ஈழத் தமிழரின் இதயங்களுக்கு இப்படியுமா? என்ற இதயச் சுமைகளை இறக்கி வைக்கவே இந்த சில வரிகள்.

ஆம். இன்று யாழ் மக்களின் பிரயாணம் ஈழத்தின் ஏனைய பகுதி மக்களோடு உறவு கொள்ள முடியாத–முடியாமல் தடம் புரண்டு நிற்கிறது.

பல சிரமங்களுக்கு மத்தியில் நான், எனது அக்கா இந்துமதி நம்மோடு சிறு வயது முதல் இன்ப துன்பங்களிலெல்லாம் தோள் கொடுத்த– ஒரு சுவர் மட்டும் பிரித்த– பக்கத்து வீட்டு அன்ரி சிவகெங்காவுடன் தனிப்பட்ட விடயம் காரணமாக கொழும்பு சென்று திரும்ப முடியாத அவல நிலை.

எமக்கோ எங்கள் ஊர் நிற்கெழு வைரவர் கோவில் வருடாந்த திருவிழாவிற்கு கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல்.

செய்வதறியாது கலங்கி நிற்க, திடீர் அறிவிப்போடு திருமலையிலிருந்து கப்பல் ஏதாவது புறப்பட்டாலும் அதில் பயணம் செய்யலாம் என்ற நப்பாசையில் திருமலை அடைந்தோம்.

நாட்கள் வாரங்களாகியது. வாரங்கள் மாதங்களாகியது. மாதங்கள் சில கடந்து விட்ட நிலை.

எமக்கோ கொண்டுவந்த பணம் கரைந்து கொண்டிருந்தது. எப்படியாவது எங்கள் ஊர் வைரவர் கோவில் திருவிழாவில் கலந்து கொள்ளவேண்டும் என்ற நிலை.

திருமலை விட்டு புறப்பட்டு வவுனியா செல்கிறோம். அங்கிருந்து மன்னார் ஊடாக வன்னியை அடைந்து நாச்சிக் குடா என்னும் குறுக்குப் பாதையை அடைந்தோம்.

எமது ஆவல் சில மணி நேரத்தில் நிறைவேறும் போல் தோன்றியது. எல்லாம் அந்த வைரவரின் அருள்தான் என்று எங்கள் மனது அடிக்கடி கூறிக்கொண்டிருந்தது.

இரவு நித்திரை இல்லாமலே விடிந்தது.

25.07.1998 எல்லோருக்கும் விடிவது போல் எமக்கும் விடிந்தது. முடிந்துவிடும் இவ்வளவு நாளும் பட்ட சிரமம்.

அதோ படகு. படகில் ஏறி மூவரும் உட்கார்ந்தோம். இன்னும் ஒன்பது பயணிகள் ஏறிக்கொள்கிறார்கள்.

எம்மைப்போல் அவர்கள் முகங்களிலும் ஏக்கம் கலந்த ஆவல்.

எப்ப போய் ஊர் சேரலாம் என்ற தவிப்பு.

அவரவர் இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொள்கிறோம். நிற்கெழு வைரவரை நாமும் வேண்டிக் கொள்கிறோம்.

காலை 7.00மணி. படகு புறப்பட்டது.

பட்ட துன்பங்களுக்கு பரிவு காட்டுவது போல் கடல் மாதா கருணையோடு தாலாட்டினாள். படகும் சென்று கொண்டிருந்தது.

ஒருசில மணித்தியாலத்தில் படகு கட்பிட்டி என்ற சிறு நிலப்பரப்பை அடைந்தது.

அது வரைக்கும்தான் படகுச் சேவை.

நாம் இறக்கி விடப்பட்டோம்.

படகு திரும்பியது.

இனி பயணம் தொடர்வது நம் கையில் தான்.

இப்படித்தான் பலர் வன்னியிலிருந்து யாழ் குடாவை அடைந்திருக்கிறார்கள்.

நம்மோடு வந்தவர்கள் உரையாடல் மூலம் நாம் அறிந்து கொண்டது அவ்வளவு தான்.

என்ன செய்வது விதி துரத்தியது. வீதியா நடந்து செல்வதற்கு? சுற்றி வர கடல் பரப்பு. ஆயினும் ஒரு புறம் நடந்து செல்லக் கூடிய ஆழமற்ற கடல் நீர் குறைந்த நீர்ப்பரப்பு.

அதனூடே நாம் மூவரும் நம்மோடு வந்த அண்ணா ஒருவரின் துணையோடு நடக்கிறோம்.

குருநகர் இறங்கு துறை சற்றுத் தொலைவில் கண்ணில் தெரிகின்றது. உற்சாகம் மேலிட ஒவ்வொரு அடியையும் துரிதப்படுத்துகின்றோம்.

ஊர் சென்று விடலாம் என்ற ஆவல் ஒரு புறம் இழுக்க, அதிகரித்து வரும் நீரின் ஆழம் எமை ஒரு புறம் இழுத்தது.

ஆழம் தெரியாமல் வந்தோமா? விதிதான் இப்படி இழுத்து வந்ததா? நம்மை மீறி இதயம் படபடத்தது.

குரல் கேட்கும் தொலைவில் இலங்கை இராணுவத்தின் 'சென்றி பொயின்ற்' கத்தினோம். கதறினோம். கூக்குரலிட்டோம். காப்பாற்ற யாரும் இல்லை.

நீர் அதிகரித்து வரும் நிலை. நீர் மட்டம் அதிகரித்த பகுதிக்கு அலைதான் அழைத்துச் சென்றதே தவிர யாரும் எம்மை கரை சேர்க்க உதவிக்கு வரவில்லை.

மாறாக இராணுவம் கரங்களைக் காட்டி திரும்பிச் செல்லுமாறு உத்தரவிடுகின்றது. துப்பாக்கியைக் காட்டி மிரட்டுகின்றது.

நம்மிடம் இருந்த சிறு துணிவும் நம்மை விட்டு விடைபெற்றது.

திரும்பிச் செல்வது தான் அப்போது சாத்தியமாகப்பட்டது.

சுமைகளோடு மீண்டும் கட்பிட்டி என்ற நிலப்பரப்பை நோக்கி நடந்தோம் நிர்க்கதியற்ற நிலையில்.

விதி விடவில்லை. நீரின் ஆழமும் குறைந்து வழி விடுவதற்கு மாறாக கூடிக் கொண்டிருந்தது.

பாதை மாறிய பயணமானது. படு குழியில் விழ்ந்தது போல் இருந்தது. தொடர்ந்து வந்த நீரோட்டம் நீரின் ஆழம் கூடிய பகுதிக்கே மேலும் நம்மை இழுத்துச் சென்றது.

சுற்றி வரப் பார்க்கின்றோம். எம்மோடு வந்த அண்ணாவையும் காணவில்லை. ஆதரவு காட்டி வந்த அன்ரியையும் காணவில்லை.

"ஐயோ அக்கா..... அன்ரி எங்கே....?" என்கிறேன்.

அக்காவின் பதிலைக் காணோம்... திரும்பிப் பார்க்கிறேன். "அக்கா... அக்கா..." கத்தினேன்... கதறினேன் அக்காவும் பதில் அளிக்கும் நிலையில் இல்லை.

அக்கா இறந்து விட்டாளா?

அன்ரி?

தொலைவில் - வெகு தொலைவில் அன்ரியின் குரல் அடங்கிக்கொண்டிருந்தது.

அக்கா நீருக்குள் மூழ்கிக்கொண்டிருந்தாள்.

விரைந்தேன். "அக்கா.... அக்கா...."

அக்காவென்று ஒரு முறை அழைத்தால் என்னைப் பரிவோடு "நளா யி" என்று பத்து முறை ஒலிக்கும் அந்தக் குரல் அடங்கிப் போயிருந்தது.

ஆனால் அவள் கண்களில் மட்டும் என்னைப் பரிவோடு பார்த்துக் கொண்டிருப்பது போல் இருந்தது.

இருப்பவற்றை எல்லாம் இழந்து விட்டால் யாருக்கும் துணிவு வரும். அப்படியொரு நிலை எனக்கும் ஏற்பட்டது.

அன்ரியைக் கை விட்டேன். ஆனால் அக்காவை விடமாட்டேன்.

மனம் உறுதி கொண்டது. நான் விட்ட கண்ணீரின் உப்பும் கடல் நீரின் உப்பும் சங்கமித்தது.

தண்ணீருக்குள் மீன் அழுத கதை போல் என் கதை. கண்ணீரைத் துடைப்பதற்கு யாருமே இல்லை. என் கைகளும் மறுத்தன. ஆனால் அக்காவின் மயிரைப் பற்றி இழுத்துக் கொண்டு நீரின் ஆழமற்ற பகுதிக்கு செல்ல நகர்கிறேன்.

எனக்குத் தலை வாரும் பொழுது வலிக்கக் கூடாது என்று மெதுவாகவே தலை வாரும் அந்த அக்காவை - வலிக்கிறது என்றால் செல்லமாக கிள்ளி விட்டு வாரி விடும் அந்த அக்காவின்– தலை மயிரை பற்றி இழுத்தவாறு செல்கிறேன். அவளுக்கு வலி தெரியவில்லை. தெரிந்திருக்க ஞாயமு மில்லை.

ஆனால் அந்த வலி என் உடல் முழுவதும் பரவி இருந்தது.



கூடவே விரக்தியால் வந்து துணிவு.

துணிவுடன் தொடர்ந்தால் தோல்வி கிடையாது என்பார்கள். ஆனால்,

துன்பம் என்னை ஓட ஓட விரட்டியது.

அதன் கோரப் பசிக்கு கடல் மாதாவின் மடியில்.

அதிக நேரம் நின்றதால் எடுத்து ஒரு அடி கூட வைக்க முடியாத நிலை.

அவ்வேளை கூடவே எடுத்து வந்த சுமை சொல்லிக் கொள்ளாமலே என்னை விட்டு பிரிந்தது.

அன்ரியை இழந்தேன்.

அக்காவை இழந்தேன்.

கூடவே எடுத்த வந்த பணம். 140,000ஐ இழந்தேன்.

அதை விட அன்ரி எடுத்துவந்த பணம் 110,000.

வழிப் பயணத்தின்போது விழிப்போடு நாம் கொண்டு வந்த தங்க நகை.

இத்தனையும் எடுத்த விதியின் கோரப் பசி என்னை மட்டும் ஏன் விட்டு வைத்தது?

"ஐயோ அக்கா...."

அழுதேன். யாருக்கு நாம் என்ன தீங்கு செய்தோம். என் குரல் எவருக்குமே கேட்கவில்லை.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் கரை தெரிகிறது.

ஆனால்,

கரை சேர வழியில்லை.

"அக்கா... அக்கா...."

என் அழுகை அவளுக்கு கேட்க ஞாயமில்லை.

அக்கா நீ சாகக் கூடாது.

அக்காவுக்கு முதலுதவி செய்து பார்க்க விளைகின்றேன்.

எப்படிச் செய்வது.

கடல் நீருக்குள் நான்.

உடல் தூக்க முடியாத வலி எனக்கு.

தொடர்ந்தேன். சற்றுத் தொலைவில். கடல் நடுவே மீனவர்கள் நட்டு வைத்த தடி ஒன்று தென்படுகிறது.

மீண்டும் வலியைப் பொருட்படுத்தாது அக்காவின் மயிரைப் பற்றி இழுக்கிறேன்.

அந்த தடியில் அக்காவின் மயிரை கட்டி தடியோடு இணைக்கிறேன்.

"அக்கா... அக்கா..." பலமுறை அவரின் வயிற்றை.... நெஞ்சை அமுக்குகிறேன்.

அவள் இனி எனக்கு இல்லை என்று உறுதியாயிற்று.

இறுதிக் கிரிகைக்காவது அக்காவை எடுத்துச் செல்ல மனம் எண்ணுகிறது.

இல்லை, நானும் இப்படியே அக்காவோடு இறந்து விடுவோம். என்றும் மனம் சொல் விற்று.

இப்படியே எத்தனை மணிநேரம் தடியைப் பிடித்துக் கொண்டிருந்தேனோ தெரியவில்லை.

நேரம் நகர்ந்தது.

விரக்தி - துணிவு மாறி மாறி வந்தது.

விரக்தி விடைபெற்றது.

துணிவு நித்திரையைத் துரத்தியது.

ஆம். இரவும் வந்தது. அந்த தடியைப் பிடித்த வண்ணம் இரவு முழுக்க நிற்கிறேன்.

வானத்து நிலாவும் என் சோகத்தை கண்டு துவண்டதோ என்னவோ? மேகத்துள் மறைந்து கொண்டது.

இடையிடையே மனம் வீடு நோக்கி சென்றது.

வாழ்ந்த வீடு. வளமான மண்.

"அம்மா.... இந்த கதையை எப்படியம்மா உன்னிடம் சொல்வேன். எம் மூவரையும் வழியனுப்பிய அன்புத் தெய்வமே...

நீ கலங்கியதை என் வாழ்நாளில் காணலயே...

உன் பெயரை உன் குணமறிந்தா அதிருபவதி என்று வைத்தார்கள். இப்போது எப்படியம்மா தாங்கிக் கொள்ளப் போகிறாய்?"

தாய்– தகப்பன்– பேரன்– பேத்தி என அறுவரை கயவர்கள் சுட்டுக் கொன்ற போது,

பதிவு செய்தவர்:
**ஆதிகோவிலடி ஜெயம்**

கரை சேர முடியாமல் தவித்த அந்த பச்சிளம் குழந்தைக்கு நிழல் கொடுத்தாயே.

அநாதை என்ற சொல்லுக்கே இடமில்லாமல் எமக்கு பாசமுள்ள தம்பி துஷ்யந்தனைத் தந்த தெய்வமே...

எமக்கா இந்த நிலை....?

எப்படியம்மா உன்னிடம் வந்து அக்காவை ஒப்படைப்பேன்.

அக்கா பவானியும் தம்பி சிறிதரனும் ஆவலோடு நிற்பார்களே. அவர்களுக்குத்தான் என்ன நான் சொல்வேன்.

"ஐயோ.... அக்கா... அம்மா.. ஆண்டவனே... நீ இருக்கிறாயா....?" என் இதயமே வெடித்து விடும் போல் இருந்தது.

என் இதயத் துடிப்பு என் காதுக்குள் சம்மட்டிபோல் அடித்தது.

கடல்அடிப்புச் சத்தத்தையும் மீறிக் கேட்டது.

மனதுக்குள் மனம் போராடியது.

இரக்கமுள்ள ஆண்டவரே... இப்பொழுது நான் சாகக் கூடாது. என் அக்காவின் முகத்தை ஒரு முறையாவது அம்மாவிடம் காட்ட வேண்டும். பின்னரே நானும் சாக வேண்டும்.

பல வீர மைந்தர்களை பெற்ற மண்ணின் புதல்வி. வைராக்கியம் நெஞ்சில் பாய்கிறது.

தூரத்து விளக்குகளும் கொஞ்சம் கொஞ்சமாக இரவோடு கரைந்தது.

அந்த இருட்டிலும் அக்காவின் இரக்கப் பார்வை என்னைப் பார்ப்பது போல் அவள் விழிகள் மூடப்படாமலே இருந்தது.

முப்பது வயது முழு நிலவே. இப்பொழுது என்னை நீ ஏன் அப்படிப் பார்க்கிறாய். இப்பொழுதே உன்னோடு நானும் சீக்கிரம் வரவேண்டும் என்றா?

இல்லையக்கா.... நீ ஓடியாடித் திரிந்த அந்த வீட்டுக்கு உன்னை எடுத்துச் செல்ல வேண்டும்.

அந்த மண்ணில்தான் உன்னை அடக்கம் செய்ய வேண்டும்.

எனக்குள்ளே என் மனம் புலம்பிற்று.

தடியிலே ஒரு கை. அக்காவில் மறு கை. தரையைத் தொடாத கால்கள்.

தண்ணீரில் தத்தளித்தேன். உடல் மட்டும் அல்ல. மனமும்தான்.

பித்துப் பிடித்து என் மனது எதை யெதையோ புலம்பிற்று.

இரவும் மெல்லமெல்ல நகர்ந்தது.

கிழக்கு வானம் வெளுத்தது....

கண்ணீர் வற்றிய கண்களுடாக தேடியது மனம்...

அன்ரி தப்பிப் பிழைத்து எமைக் கரை சேர்க்க வருவாளா என்று.... அந்த அன்னை...

இப்படியே மனம் போராடியது.

அப்போதுதான் நான் இருக்கும் இடத்தை நோக்கி ஒரு படகு வந்து கொண்டிருந்தது.

எனக்காக அல்ல. என் திசையை நோக்கி.

மீண்டும் கூக்குரலிட்டு அழைக்கிறேன். சத்தம் எனக்குள்ளே மட்டும் கேட்கிறது.

கையைத் தூக்கி ஆட்டுகிறேன்.

படகு என் அருகில் வந்தது.

என்னையும் அக்காவின் உடலையும் ஏற்றிக் கொண்டது.

நான் ஊரை அடைந்த போது. வீட்டில் சாக்கோலம். எல்லோர் கண்களிலும் நீர்க்கோலம்.

அம்மா கதறினாள்.

அக்கா.... தம்பி...

ஏன் ஊரே கதறியது.

இனி அக்கா எமக்கு இல்லையென்றான பின் எத்தனை பேர் கதறித்தான் என்ன? தேற்றித்தான் என்ன?

இனி எனக்கு அந்த இரவுகளில் போல்தான் என்றுமே. விடியாத இரவுகள்.

வளமான வாழ்வு, வாழ்ந்த வீடு எல்லாமே இருண்டு விட்டது.

இந்த நிலை என் எதிரிக்குக் கூட வரக் கூடாது.

சாவு எல்லோருக்கும் நிச்சயம்தான். சாவுக்குள்ளே செத்துக்கொண்டே எத்தனை நாள்தான் நாம் வாழ்வது? ■



படிப்பகம்

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

## பொன்நகை மின்னிட



இப்போது நகைகளில் நாளொரு டிசைனாக பல டிசைன்கள் வந்துவிட்டன. தங்கம் விற்கும் விலையில் எல்லாவற்றையும் வாங்க முடியாது.

என்றாலும் பல்வேறு டிசைன்களில் நகை போட எல்லாருக்கும் ஆசை.

இவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டதுதான் கவரிங் நகைகள் எனப்படும் தங்க முலாம் பூசப்பட்ட நகைகள். தங்க நகைதான் என்று நினைக்கும் அளவுக்கு விசேஷ கவரிங் நகைகள் வடிவமைக்கப்படுகின்றன. எனினும் இவை கறுத்துவிடும் என்று நினைக்கலாம்.

எந்த நகையோ அவரவர் வைத்திருக்கும் விதத்தில்தான் புதுப் பொலிவுடன் இருக்கும்.

நகைகள் எப்போதும் புதுப் பொலிவுடன் இருக்க சில யோசனைகள்:

- நகை அணிய வேண்டும் என்றால் எல்லா அலங்காரங்களையும் முடித்துக் கொண்டு (முகத்தில் பவுடர் போடுவது முதல்) கடைசியாகத்தான் நகை அணிய வேண்டும்.
- அதே போல் எங்காவது போய் விட்டு வீட்டுக்கு வந்ததும் நகைகளைத்தான் முதலில் கழற்ற வேண்டும்.
- நகைகளைக் கழற்றியவுடன் அதற்கென்று இருக்கும் பெட்டியில், நல்ல பட்டுத் துணியால்-வியர்வை போன்றவற்றைத் துடைத்து விட்டு வைக்கவேண்டும்.
- நகைகளை இரும்புப் பெட்டிகளில் வைக்காமல் மரப்பெட்டிகளில் வைக்க வேண்டும்.

இப்படிப் பக்குவமாகக் கையாண்டால் நகைகள் எப்போதும் புதுப்பொலிவுடன் இருக்கும்.

## பரிசு வென்றவர்



முரசின் பட்டுச்சேலை பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் ஒருவர் இவர்:-

ஃபாத்திமா ஸஃப்ரா
இல. 20, கல்லூரி வீதி,
மடிகே, கலகெதர.

## மஞ்சளின் மகிமை



மஞ்சள் அழகிற்கும் ஆரோக்கியத்திற்கும் ஏற்றதாகும். உணவு, மருந்து மற்றும் மங்கள நிகழ்ச்சிகளில் மஞ்சள் பெரும் பங்கு வகிக்கிறது. மஞ்சளின் மகிமைகள் வருமாறு:

- மஞ்சளில் கெட்ட கிருமிகளை அழிக்கும் தன்மை இருக்கிறது.
- உடலில் ஏற்படும் பலவித விஷத்தன்மைகளை முறிக்கும் ஆற்றல் மஞ்சளுக்குண்டு.
- தினமும் தொடரும் தடிமன், சிலவகை ஒவ்வாமை, தும்மல் போன்றவற்றிற்கு மஞ்சள் மருந்தாகிறது.
- சிலருக்கு அதிகப்படியான அஜீரணக்கோளாறு இருக்கும். அவர்களுக்குத் தனியாகப் பால் குடித்தால் உடலுக்கு ஒத்துக்கொள்ளாது. அவர்கள் பாலில் சிறிதளவு மஞ்சள்தூள் சேர்த்துப் பருகவேண்டும்.
- மஞ்சளை அரைத்து முகத்திலும் உடலிலும் தேய்த்துக் குளித்தால் உடலில் ஏற்படும் கெட்டவாடை, அதிக வியர்வை, சொறி, சிரங்கு போன்றவை மறையும். சருமத்திற்கு அழகும் மிருதுத்தன்மையும் கிடைக்கும்.
- தோல் நோய்களுக்கு மஞ்சள் சிறந்த மருந்தாகும். தேங்காய்ப்பாலில் மஞ்சளை அரைத்து உடலில் தேய்த்தால் தேமல் மறையும்.
- மஞ்சளை நெய்யில் புரட்டி, தீயில் சுட்டு மூக்கின் அருகில் வைத்துப் பலமாகச் சுவாசித்தால் மூக்கடைப்பு போன்றவை குறையும்.
- இலேசான விஷக்கடிகளுக்கு துளசிச் சாற்றில் மஞ்சளை அரைத்து கடிவாயில் பூசினால் போதும்.
- மழைக்காலத்தில் கால்களில் நீர்ச்சிரங்கு ஏற்படும். இதற்கு வேப்பிலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து இரவில் படுக்கப்போகும்போது காலில் போட்டுக் கொண்டால் போய்விடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** EZ

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-01-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 68

**புவனா**

டயானாவின் உடலமைப்பு கவர்ச்சிகரமானது-நளினமான பெண்மணி அவர்.

அவரது உடலமைப்பும் அவரின் ஆளுமைக்கு ஒரு காரணம் என்று கூறலாம்.

"டயானாவிடம் உள்ள கவர்ச்சியும். அந்த நளினமும் அவரது கணவரான சாள்ஸ்சைத் தவிர உலகில் உள்ள ஆண்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கிறது." என்று அமெரிக்க ஓவியரான நெல்சன் ஷாங்ஸ் கூறியிருந்தார்.

கூறியதோடு நிறுத்தவில்லை. டயானாவின் தோற்றத்தை ஓவியமாகத் தீட்டவும் முன்வந்தார்.

தன் முன்னால் அமர்ந்திருப்பவர்களின் தோற்றத்தை, அவர்களது அப்போதைய முகபாவம் மாறாமல் வரைவதில் நெல்சன் ஷாங்ஸ் கில்லாடி.

டயானாவையும் அவ்வாறு வரைவதற்கு விரும்பிய, நெல்சன் அதற்கு டயானாவின் சம்மதம் பெற அணுகினார்.

தன்னைப் பற்றி நெல்சன் ஷாங்ஸ் கூறிய கருத்தை டயானாவும் அறிந்திருந்தார்.

நெல்சன் கூறிய கருத்தை டயானா உள்ளூர இரசித்திருக்க வேண்டும்.

ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் தமது ஆளுமை பற்றிய புகழாரங்களை உள்ளூர இரசிப்பது இயற்கை.

டயானாவும் அதற்கு விதிவிலக்கல்ல; பல சந்தர்ப்பங்களில் அத்தகைய புகழ்ச்சிகளே அவருக்கு உற்சாகமளித்துள்ளன.

ஓவியர் நெல்சன் ஷாங்ஸ் தன்னை ஓவியமாக வரைவதற்கு ஒத்துழைக்க முன்வந்தார் டயானா.




போஸ்கொடுக்கிறார்

### அகமும் முகமும்

குறிப்பிட்ட தினத்தன்று டயானா வருவாரா? வந்து ஓவியத்திற்காக-பொறுமையாக அமர்ந்து 'போஸ்' கொடுப்பாரா? என்று நெல்சனுக்கு சந்தேகமாக இருந்தது.

விவாகரத்து சர்ச்சைகள், பத்திரிகைகளில் அது தொடர்பாக வெளியான செய்திகள் என்பவற்றால் டயானா மனமுடைந்திருப்பார் என்றே நெல்சன் நினைத்தார்.

சங்கடமான மனநிலையில் உள்ள ஒருவரால், ஓவியம் வரைவதற்கு போஸ் கொடுப்பது எப்படி முடியும்? அதனால் டயானா தனக்கு ஃபோன் செய்வார்; வேறு ஒரு நாளைக் குறிப்பிட்டுச் சொல்வார் என்று நினைத்தார் நெல்சன்.

டயானாவிடம் இருந்து ஃபோன் வந்தது. ஆனால் அவர் நினைத்ததுக்கு மாறாக, "நான் தயாராக இருக்கிறேன்!" என்ற வார்த்தைகளே டயானாவிடம் இருந்து அவர் செவிக்குள் பாய்ந்தன.

டயானாவின் நண்பர் ஒருவரது கலையகத்திலேயே ஓவியம் வரைவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

தன் முன்னால் அமர்ந்திருப்பவர் டயானா தானோ என்று ஓவியருக்கு சந்தேகம்.

அந்தளவுக்கு மிக உற்சாகமாக, இயல்பாக அமர்ந்திருந்தார் டயானா.

கவலைகள், சங்கடங்கள் அனைத்தையும் தன் மனதில் இருந்து சுத்தமாகக் கழுவி விட்டு, புதிய மனதோடு வந்து அமர்ந்திருந்தார்.

ஓவியம் வரைந்து முடிக்கும்வரை எவ்விதமான சலிப்போ, அலுப்போ இல்லாமல் அமர்ந்திருந்தார்.

பின்னர் அவரை நிற்க வைத்தும் இன்னொரு ஓவியம் தீட்டப்பட்டது.

ஓவியங்களை வரைந்து முடித்த நெல்சனுக்கு பூரிப்பு. டயானாவின் நெஞ்சுரத்தை வியந்து பாராட்டினார்.

"இளவரசி டயானா பல பக்கங்களிலிருந்து, பலதரப்பட்ட தாக்குதல்களுக்கு இலக்காகியிருந்தார். அப்படியிருந்தும் எத்தகைய தாக்கத்துக்கும் உள்ளாகவில்லை. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற நெஞ்சுரம் அவரிடம் இருந்தது. ஆழ்ந்து சிந்திக்கும் தன்மை கொண்டவராகவும் அவர் காணப்பட்டார்," என்று கூறினார் நெல்சன் ஷாங்ஸ்.

"டயானாவின் அகம், முகம் இரண்டும் பளிச்சென்று இருந்தன. அதனால் அவரது ஓவியமும் பளிச்சென்று வந்திருக்கிறது!" என்று கூறினார் நெல்சன்.



ஓவிய டயானா

### நடை, உடை, பாவனை

அரச குடும்பத்தினரைப் பொறுத்தவரை பெண்கள் அவர்களுடைய நடை, உடை பாவனைகளைக் கொண்டே கணக்கெடுக்கப்படுவார்கள். ஆண்கள் என்றால் அவர்கள் வெளியிடும் கருத்துக்களை வைத்துக் கணிப்பிடப்படுவார்கள்.

அரச குடும்ப மருமகளானது முதற்கொண்டு டயானாவின் நடை, உடை, பாவனைகள் மக்களைக் கவர்ந்தன.

முதலில் அரச குடும்பம் கூட அவரை ஒரு அழகான, அலங்காரக் குதிரையாகவே கருதியது.

திருமணமான புதிதில் டயானாவுக்கு தனியான மரியாதை எதுவும் இருந்ததில்லை.

இளவரசர் சாள்ஸின் மனைவி என்ற ரீதியிலேயே மரியாதை கிடைத்தது.

ஆனால் காலப்போக்கில் டயானா அரச குடும்பப் பெண்களில் இருந்து மாறுபட்டவர் என்று மக்கள் கருதுமளவுக்கு, அவரது நடவடிக்கைகள் அமைந்தன.

அதனால் 'இளவரசி டயானா' தனித்துவமான மனுஷியானார். சில சந்தர்ப்பங்களில் சாள்ஸுக்கும் டயானாவின் கணவர் என்ற ரீதியிலேயே மரியாதை கிடைத்தது.

டயானா விவாகரத்துப் பெற்ற பின்னரும் அவர்மீது மக்களுக்குள்ள அபிமானம் குறையாமல் இருந்ததற்கு அதுவும் ஒரு காரணம்.

அரச குடும்ப மருமகளாகப் பார்க்காமல், தங்களில் ஒருத்தராக அவரைக் கருதியதால், அரச குடும்ப மருமகள் என்ற அந்தஸ்துப் போன பின்னரும் அவரை மதித்தனர்.

### தொட்டுப் பழகலாமா?

'எய்ட்ஸ்' மற்றும் தொழு நோயாளர்களுடன் டயானா நெருக்கமாகப் பழகுவது பற்றி பல்வேறு விமர்சனங்கள் எழுந்தன.

'பாலியல் ரீதியில் ஒழுக்கக் கேடானவர்கள்மீது டயானாவுக்கு என்ன அத்தனை அக்கறை?'

## விஷமமான விமர்சனங்கள்

'எய்ட்ஸ்' நோய் ஏற்படுவதற்கு தன்னினச் சேர்க்கையும் ஒரு காரணம். தன்னினச் சேர்க்கையாளர்கள்மீது டயானா அனுதாபம் கொள்வதற்கு என்ன காரணம்? என்றெல்லாம் உள்ளர்த்தம் கொண்ட விஷமமான விமர்சனங்கள் கூறப்பட்டன.

"விளம்பரங்களுக்காகவே டயானா அவ்வாறு செய்கிறார். அவர் ஒரு விளம்பரப் பிரியை. பாகிஸ்தானில் அவர் நடந்து கொண்ட முறையும் விளம்பர மோகத்தாலேயே....!" என்றும் சில பத்திரிகைகள் கூறின.

ஆனால், அவற்றை யாரும் நம்பவில்லை. "எட்ட நின்று பார்ப்பதற்கே அச்சத்தைத் தரும் வியாதியுள்ளவர்களைத் தொட்டுப் பேசித்தான் டயானா விளம்பரம் தேட வேண்டும் என்று அவசியமில்லை.

தமக்கும் வியாதிகள் தொற்றிவிடும் என்று பயந்து ஒதுங்கிப்போவோர் மத்தியில், அந்த நோயாளர்களைத் தொட்டுப்பேசி, நம்பிக்கையூட்டும் டயானாவின் செயலில் போலித்தனம் கிடையவே கிடையாது!" என்று மக்கள் அபிப்பிராயப்பட்டனர்.

நோயாளர்களுடன் டயானா நெருக்கமாக உள்ள படங்களைப் பார்த்த பலதரப்பட்ட நோயாளர்களிடம் இருந்து, டயானாவுக்கு கடிதங்கள் குவிந்தன.

'துரதிஷ்டமாக எங்களுக்கு ஏற்பட்டுவிட்ட நோய்களை எதிர்த்துப் போராடும் புத்தூக்கத்தைப் பெற்றுள்ளோம். உங்களுக்கு நன்றி!" என்று பலரும் எழுதியிருந்தனர்.

தனது சமூக சேவைகளுக்கு அன்றைய பிரதமர் ஜோன் மேஜருடனும், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் பிளேயருடனும் கலந்து பேசி ஆலோசனைகள் பெற்றார்.

"நான் வீதிகளில் வாழும் மனிதருக்கு உதவுவதையே விரும்புகிறேன். உயர்ந்த மாளிகைகளில் வாழ்வோரைவிட அடிமட்டத்தில் வாழும் மனிதரை அணுகவே நான் விரும்புகிறேன்!" என்று டயானா கூறினார்.

தனது மனிதாபிமான சேவைகளுக்கு அங்கீகாரம் தருமாறு அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரிடமும், வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேர்ட்டிடமும் கோரினார் டயானா.

அவர்களும் மகிழ்ச்சியோடு அந்தக் கோரிக்கை பற்றி அரச குடும்பத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர்.

அங்கிருந்து கிடைத்த பதில் சகிக்க முடியாததாக இருந்தது. அரச குடும்பத்தின் சுயரூபத்தையும் படம் பிடித்துக் காட்டியது.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | டி. சந்திரகலா, 65/1, திருவள்ளுவர் வீதி, உக்குளாங்குளம், வவுனியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





தேவியர் மானம் என்றும்
தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினால் சொல்வ தல்லால்!
-கிளியே!
நம்புத லற்றா ரடீ!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# கல்லாதவன் செல்லாதவன்

ஒரு காட்டில் கரடி ஒன்று இருந்தது. அது தீய குணங்கள் கொண்டது. அது எப்போதும் ஏனைய மிருகங்களைக் கோபமூட்டிக் கொண்டே இருக்கும்.

அந்தக் காட்டின் ஒரு மூலையில் பல மாமரங்கள் நின்றன. அந்த மரங்களின் கீழ் காட்டிலுள்ள மிருகங்கள் எல்லாம் ஒய்வெடுத்துக்கொள்ளும். அந்த மாமரங்களுடன் மிருகங்கள் எல்லாம் நட்புடன் இருந்தன.

ஆனால் அந்த மாமரங்களில் ஒன்றைத் தவிர ஏனைய மாமரங்கள் கரடியுடன் பேசுவதில்லை. ஒரேயொரு மாமரம் மட்டும் கரடியுடன் நட்பாக இருந்தது.

ஏனைய மாமரங்கள் எல்லாம், கரடியுடன் நட்பாக இருக்கும் மாமரத்திற்கு, கரடியுடன் சேர வேண்டாம் என்று எடுத்துக்கூறின. ஆனால் அந்த மாமரம் அதைச் சட்டை செய்யவில்லை.

ஒருநாள் தனது நண்பனான கரடியுடன் மாமரம் உரையாடிக் கொண்டிருந்தது. அந்நேரத்தில் பெரிய யானை ஒன்று அந்த மாமரத்தின் அடியில் வந்து நின்றது. சிறிது நேரத்தில் மரத்தின் கீழ் படுத்து உறங்கிவிட்டது.

இதை மரத்திலிருந்து பார்த்த கரடி யானையைச் சீண்டிக் கோபப்படுத்த நினைத்தது.

உடனே அந்த மரத்திலிருந்த மாங்காய் ஒன்றைப் பறித்து, தூங்கிக் கொண்டிருந்த யானையின் உச்சந்தலையில் போட்டது.



யானையின் தூக்கம் கலைந்தது. மாமரத்தில் இருந்து, காற்றுக்குத்தான் மாங்காய் விழுந்திருக்கிறது என எண்ணிய யானை மறுபடி தூங்க ஆரம்பித்தது.

ஆனால் கரடி விடவில்லை, மீண்டும் மாங்காய்களைப் பறித்து யானையின் தலைக்குக் குறிவைத்து வீசியது.

தூக்கம் கலைந்து எழுந்த யானை அந்த மரத்தை நிமிர்ந்து பார்த்தது. மேலே கரடி மாங்காய்களைப் பறித்துக் கொண்டிருந்ததைக் கண்டது.

யானைக்குக் கோபம் வந்துவிட்டது. தனது தும்பிக்கையால் அந்த மாமரத்தை ஒரு உலுக்கு உலுக்கியது. மரத்தில் இருந்த காய்கள் எல்லாம் நிலத்தில் விழுந்தன.

பின் அந்த மரத்தைத் தனது தும்பிக்கையால் வேரோடு பிடுங்கி எறிந்தது யானை. மரத்தில் இருந்த கரடி எப்படியோ தப்பியோடி விட்டது. விழுந்து கிடந்த அந்த மாமரமோ அழுதது.

ஏனைய மரங்கள் அதைப் பார்த்து, "சகோதரனே! எல்லோரும் ஒதுக்கிய கரடியுடன் நீ ஒட்டி உறவாடினாயே, நாங்கள் உனக்கு எத்தனை தரம் அந்தக் கரடியோடு சேரவேண்டாம் என்று கூறினோம். நீ கேட்கவில்லை. நாங்கள் ஒதுங்கியதைப் பார்த்து நீ கற்றிருக்க வேண்டும். இந்த அனுபவக் கல்வியைக் கல்லாததால் நீ செல்லாக்காசாக போலாகி விட்டாய்!" என்று கூறின.

## அதிசயம் - ஆனால் உண்மை!





← அசெரோ ஜூரா என்னும் பூக்காளான்கள் அம்மல் பூத்திருப்பது போன்று காணப்படும்

↑ மைக்கோனோஸ் என்ற கிரேக்கத் தீவின் மக்கள் தொகை 5000 பேர். ஆனால் இங்கு 360 தேவாலயங்கள் உள்ளன.



↑ ஆபிரிக்காவில் உள்ள நுரையீரல் மீன் என்ற மீனுக்கு துடுப்பு போன்ற செதில்கள் உள்ளன. இந்தச் செதில்கள், கடற்கரையில் இம்மீன்கள் நடக்கப் பயன்படுகின்றன.



← காங்கோவில் உள்ள ஃபெராஜோ பழங்குடி மக்கள் தமது தலைவரை நேருக்கு நேர் ஏறிட்டுப் பார்க்கக்கூடாது. கத்திகளில் துளையிட்டு அதன் வழியாகத்தான் பார்க்க வேண்டும்.

## வாரம் ஒரு நாடு

## கம்போடியா



தலைநகர் - நொம்பென்
பரப்பு - 1,81,000 சதுரகிலோ மீட்டர்
மக்கள் தொகை - 1 கோடி
மொழி - கெமர், ஃபிரெஞ்சு
சமயம் - தெரவாட பௌத்தம்
எழுத்தறிவு - 35%
நாணயம் - ரியல் (Riel)
தனிநபர் வருமானம் - 280 டொலர்.

**அமைவிடம்:**

தென்கிழக்கு ஆசிய நாடு. சியாம் வளைகுடாவில் கடற்கரைப் பகுதியைப் பெற்றுள்ளது. மேற்கிலும், வடக்கிலும் தாய்லாந்து, வடக்கில் லாவோஸ்; கிழக்கிலும் தெற்கிலும் வியட்நாம் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

ஃபிரான்ஸிடமிருந்து 1953ல் சுதந்திரமடைந்தது. 1970ல் அரசுத் தலைவராக இருந்த இளவரசர் நோரதம் சிகானுக் பதவியிலிருந்து அகற்றப்பட்டு அமெரிக்க பலத்துடன் 'கெமர் குடியரசு' என்னும் புதிய ஆட்சி உருவானது. சிகானுக் சீனாவைத் தலைமையிடமாகக் கொண்டு 'கெமர் ரூஜ்' என்ற பெயரில் புதிய அரசைத் துவக்கினார். இவ்விரு கட்சிகளும் நீண்ட காலம் மோதிக்கொண்டிருந்தன. பின் 1975ல் கெமர் ரூஜ் ஆட்சியைப் பிடித்தது. வியட்நாமுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக 1977-78ல் போர் ஏற்பட்டது. 1979ல் வியட்நாம் கம்போடியாவைக் கைப்பற்றியது. உள்நாட்டுக் கலவரங்களுக்குப்பின் வியட்நாம் படைகள் பின்வாங்கின. 1993ல் சிகானுக் நாட்டின் மன்னனானார்.

**பொருளாதாரம்:**

விவசாயமே முக்கிய தொழில். இறப்பர் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இரும்பு, செம்பு போன்ற கனிப்பொருட்கள் அதிகம் காணப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.01.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 278
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 276

**பரிசுக்குரியவர்:**
எஸ். செந்தூரன்,
புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி.சாமினி சந்திரசேகரம், மட்/மகிழவெட்டவான்.ம.வி., ஆமித்தியமலை. | தேவேந்திரராசா தேஜீதா, மட்/களுதாவளை/ம.வி, களுதாவளை. |
| ஆர். சுரேஸ்குமார், புனித சில்வெஸ்டர் கல்லூரி, கண்டி. | சர்வவிக்னோபன் சந்திரசேகரம். வெஸ்லி கல்லூரி, கொழும்பு. |
| எம். எல். பாத்திமா றிம்ஸா, க/அல்மனார் தேசிய பாடசாலை, உடுநுவர, ஹந்தெஸ்ஸ. | அருண் பிரதீப், அவுப்ப தமிழ் வித்தியாலயம், காவத்த. |
| சீ. துருபதன், பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயம், திருப்பழுகாமம். | அஜந்தன் ஜெகநாதன், பிறைற் இன்டர்நாஷனல் கல்லூரி, கண்டி. |
| எ. எம். ஸவ்பீக், பு/எருக்கலம்பிட்டி.மு.ம.வி,பாலாவி, பாலாவி. | ச. துஷன், றோயல் கல்லூரி, கொழும்பு. |

## விடுகதைகளும் விடைகளும்

1. சொன்னதைச் சொல்வான், ஆனால் உடனே சொல்ல மாட்டான். அவன் யார்?
2. வெள்ளை மாளிகை, உள்ளே செல்ல வாசல் இல்லை. அது என்ன?
3. கறுப்பு நிலத்தில் விதைத்த வெள்ளை விதைகளை எடுக்க முடியாது, அழிக்க முடியும். அது என்ன?
4. கண்ணால் பார்க்க உருவம் உண்டு, கட்டிப்பிடிக்க உடல் இல்லை. அது என்ன?
5. கல்லைச் சுமந்தவன் கறிக்குச் சுவையானவன். அவன் யார்?
6. அம்மா படுத்திருக்க மகன் ஓடிக் கொண்டிருப்பான். அவராகன் யார்?
7. வீசியெறிந்தாலும் வீணாய்ப் போகாது. அது என்ன?
8. எட்டாத உயரத்தில் எழிலான பெண்ணொருத்தி இரவில் விழித்திருப்பாள், பகலில் ஒவ்வெடுப்பாள். அவள் யார்?

**விடைகள்**

1. எதிரொலி 2. முட்டை
3. கரும்பலகை-எழுத்து 4. புகை
5. புடலங்காய் 6. அம்மி-குழவி
7. வயலில் விதைகள். 8. நிலவு.

தொகுப்பு: ஏ. அகல்யா.

திருக்குறளில் 1330 குறள்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அதில் 14,000 சொற்களும் 42,194 எழுத்துக்களும் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா?

## துணுக்குத் தகவல்கள்

* நமது உடலில் மொத்தம் 30 இலட்சம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.
* நமது வாயில் ஒரு நாளில் 2-3 பைண்ட் வரை உமிழ்நீர் சுரக்கிறது.
* எம்மால் 10 ஆயிரம் விதமான வாசனைகளை உணர முடியும்.
* மனித உடலில் சராசரியாக 43 லீட்டர் நீர் உள்ளது.
* மனிதன் 6 விநாடிகளுக்கு ஒருமுறை கண் சிமிட்டுகிறான்.

தொகுப்பு: எம். றிஸ்வானா.

## மக்கள் தொகை

* உலகில் இன்றைய மக்கள் தொகை எவ்வளவு?
சுமார் 5.8 பில்லியன். அதாவது 580 கோடி.
* ஒவ்வொரு வருடமும் எவ்வளவு மக்கள் தொகை அதிகமாகிறது?



ஒவ்வொரு வருடமும் 8 கோடி மக்கள் தொகை உலகில் அதிகரித்து வருகிறது.

உலகிலேயே மக்கள் தொகை அதிகமான நாடு சீனா.

* மக்கள் தொகை அதிகரிப்பு நல்லதா?
இல்லை. இதே அளவில் மக்கள் தொகை அதிகரித்தால் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான அடிப்படை வசதிகள் கூடக் கிடைக்காமல் போய்விடும்.
* உலகில் மக்கள் தொகை அதிகரிப்பதற்கான காரணங்கள் என்ன?
ஆசியா, ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்காக் கண்டங்களில் பிறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அத்துடன் நல்ல மருத்துவ வசதிகள் காரணமாக மக்களின் இறப்பு விகிதம் குறைந்து வருகிறது.
* பூமி எவ்வளவு மக்கள் தொகையைத் தாங்க கூடியது?
இதைச் சரியாகக் கூற முடியாது. இப்படி மக்கள் தொகை பெருகினால் மனிதனுக்கு உணவு கிடைப்பது பெரும்பாடாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## மீன் வேட்டை



காட்டில் உள்ள சிறு மிருகங்களை வேட்டையாட நாய்களைப் பழக்கி வைத்திருப்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதே போல மீன்களைப் பிடிப்பதற்காக சீனாவில் உள்ள மீனவர்கள் 'கார்மோரன்ட்' என்ற பறவையைப் பழக்கி வைத்திருக்கின்றனர்.

சீனாவில் லி லிவர் என்னும் நதிப்பகுதியில் கார்மோரன்ட் என்னும் பறவைகள் அதிகமாக உள்ளன. இவை நீரில் மூழ்கி மீன் பிடிப்பதில் கில்லாடிகள். இப்பகுதியில் உள்ள மக்கள் இந்தப் புத்திசாலிப் பறவைகளை வீட்டுப் பிராணிகள் போல வளர்க்கிறார்கள்.

பின் அதன் கழுத்தில் ஒரு வளையத்தை சுற்றி இறுக்கமாக மாட்டி விடுகின்றனர். இப்பறவை இரைக்காகத் தண்ணீரில் மூழ்கி மீனைப் பிடிக்கும். ஆனால் கழுத்தில் வளையம் மாட்டப்பட்டிருப்பதால் மீனை இதனால் தின்ன முடியாது. மீன் தொண்டையைத் தாண்டிப்போகாது.

கடைசியாக இப்பறவை எஜமானிடமே வந்து சேரும். எஜமானர் அந்தப் பறவை கவ்விக் கொண்டிருக்கும் மீனை வெளியே எடுப்பார். இப்படி ஒரு மணித்தியாலத்திற்குள் சுமார் 15-20 மீன்வரை கார்மோரன்ட் பறவையைக் கொண்டு பிடிப்பார்கள்.

## தீயணைப்புத் துறை





• பண்டைக்காலத்தில் ஓரிடத்தில் தீப்பிடித்துக்கொண்டால் அந்த இடத்தில் இருந்து அருகே உள்ள ஆறு அல்லது குளம் வரை மக்கள் சங்கிலியாக நின்று தண்ணீர்ப் பாத்திரத்தை ஒவ்வொருவரிடமாகக் கொடுத்துத் தீயை அணைப்பார்களாம்.

• 1666ம் ஆண்டு இலண்டனில் நடந்த தீ விபத்து ஒன்றில் 13 ஆயிரம் கட்டடங்கள் நாசமாகியதாம். அவற்றில் சென்ட் போல் தேவாலயமும் ஒன்று. அதன் பின் ஆங்கிலேயர்கள் கைகளால் இயக்கக்கூடிய தீயணைப்பு பம்புகளை உருவாக்கினார்கள்.

• பிறகு பொதுமக்கள் தாமாகவே முன் வந்து தீயணைப்பு நிறுவனங்களை ஆரம்பித்தனர். தீ விபத்து ஏற்படும்போது எப்படிப்பட்ட வேலையையும் நிறுத்திவிட்டு, தீ விபத்து நடக்கும் இடத்திற்கு விரைந்து செல்ல உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

• 1835ம் ஆண்டுதான் முதன் முதலில் தீயணைப்புப்படை உருவானது. இந்தப் படையை நியூயோர்க் நகரம் நிறுவியது. 4 பேரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு அடுத்த வருடத்தில் 40 பேராகியது. 1855ல் நியூயோர்க்கில் முதல் தீயணைப்பு இல்லம் தொடங்கப்பட்டது.

www.padippakam.com



**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

# டிசம்பர் பௌர்ணமி

## (10)

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

சாந்தாவின் கண்களில் ஒரு பயம் உறைந்து போயிருக்க நித்தியனை கலவரமாய் பார்த்தாள்.

"என் பேச்சைக் கொஞ்சம் கேக்கறீங்களா?"

"என்ன?"

"விசாலிகிட்ட உண்மையைச் சொல்லிடுங்க."

"என்ன உண்மையை?"

"நீங்களும் நானும் காதலிக்கிற விஷயத்தைத்தான்."

"சொல்லிட்டா அவள் உடனே நல்ல நாள் பார்த்து உனக்கும் எனக்கும் கல்யாணத்தை பண்ணி வெச்சிடுவாளா என்ன?"

"அவளை கன்வின்ஸ் பண்ணிப் பாருங்களேன்."

"சாந்தா! விசாலியோட கேரக்டரைப் பத்தி புரிஞ்சுக்காமே நீ பேசிட்டிருக்கே. விசாலி எம்மேல ரொம்ப கிரேஸியா இருக்கா. நான் உன்னை விரும்பறேன்னு தெரிஞ்சா அவ மனசு ஒரு போர்க்களம் மாதிரி ஆயிடும். நாம கல்யாணம் பண்ணிக்கிட்ட பின்னாடி யாரையும் ஃபேஸ் பண்ணலாம். பட் கல்யாணத்துக்கு முன்னாடி இந்த விஷயம் விசாலிக்கு தெரியக்கூடாது."

முகுந்தன் இப்போது குறுக்கிட்டான்.

"நித்தியன் சொல்றது கரெக்ட் சாந்தா. உங்க கழுத்துல தாலி ஏறிட்டா அதுக்கப்புறம் யாருமே உங்களை அப்போஸ் பண்ணி பேச முடியாது."



"நீங்களும் நித்தியனும் எவ்வளவு தான் எனக்கு தைரியம் கொடுத்து பேசினாலும் என் நெஞ்சுள்ளே பயம் உதைச்சிக்கிட்டே இருக்கு."

"சாந்தா! நான் முடிவு பண்ணிட்டேன். வர்ற பௌர்ணமியன்னிக்குக் காலையில ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள்ளே ரத்தின விநாயகர் கோயில்ல உனக்கும் எனக்கும் கல்யாணம். இனிமே இதுல எந்த மாற்றமும் கிடையாது." சொல்லிக்கொண்டே நித்தியன் எழுந்தான்.

"கிளம்பு"

"எங்கே?"

"பட்டுப்புடவை எடுக்க நல்லிக்கும் நகை எடுக்க உம்மியடியார்க்கும் போறோம்."

"நாளைக்கு போகலாமா?"

"எதையும் தள்ளிப் போட அவகாசம் இல்லை சாந்தா... இனிமே வரப்போற ஒவ்வொரு நிமிஷத்தையும் யூஸ் பண்ணியாகணும். யோசனை பண்ணிட்டிருக்காமே கிளம்பு."

சாந்தா தயக்கமாய் எழுந்தாள்.

○ ☃ ✦

ருத்ரமூர்த்தி தனக்கு முன்னால் வந்து நின்ற ட்ரைவரை ஒரு எக்ஸ்ரே பார்வை பார்த்துவிட்டு கேட்டார்:

"என்ன நித்தியனை ஃபாலோ பண்ணிப் போனியா?"

"போனேன்ங்கய்யா"

"யார் யாரை மீட் பண்ணினான்."

"அய்யா... அது... வந்து...வந்து..."

"என்ன?"

"சின்னய்யா தன்னோட காரை ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வாசல்ல நிறுத்திட்டு உள்ளே போனார். எதையோ வாங்கப் போயிருக்கிற அவர் வந்து பதினைஞ்சு நிமிஷத்துல வெளியே வந்துடுவார்ன்னு நினைச்சு வெயிட் பண்ணிட்டிருந்தேன்ங்கய்யா... ஆனா உள்ளே போன சின்னய்யா ஒரு மணி நேரமாகியும் வெளியே வரலை. சந்தேகப்பட்டு உள்ளே போய் பார்த்தேன். சின்னய்யா உள்ளே இருக்கலை."

"பின்னே...?"

"எங்கே போனார்னு தெரியலைங்கய்யா."

"கார்?"

"இன்னமும் அந்த டிபார்ட்மெண்ட்டல் வாசல்லதான் நின்னுட்டிருக்கய்யா."

சில வினாடிகளை யோசிக்க எடுத்துக் கொண்ட ருத்ரமூர்த்தி பின் மெல்ல தலையை ஆட்டினார்.

"சரி... நீ...போ..."

ட்ரைவர் அந்த இடத்தை விட்டு அகன்று போனதும் ருத்ரமூர்த்தி தன் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோனை எடுத்துக் கொண்டு டயலில் எண்களைத் தட்டினார்.

லைன் உயிர்பெற்று மறுமுனையில் விஜயராகவனின் குரல் கேட்டது.

"ஹலோ"

"வணக்கம் சம்பந்தி."

"வணக்கம். நானே உங்களுக்கு ஃபோன் பண்ணனும்னு நினைச்சுட்டிருந்தேன். அதுக்குள்ள நீங்களே ரிங் பண்ணிட்டீங்க. கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் எப்படி போயிட்டிருக்கு?"

"மண்டபம் இன்னும் சரியானபடி அமையலை. பார்த்துட்டிருக்கேன்...."

"கல்யாணத் தேதியை இன்னும் கொஞ்சம் முன்னாடி வெச்சுக்கிட்டா மண்டபம் ஏதாவது கிடைக்கலாம்."

"பார்க்கலாம். மண்டபம் கிடைக்கலைன்னா ஏதாவது ஒரு கோயில்ல சிம்பிளா கல்யாணத்தை பண்ணிமுடிச்சிக்கிட்டு ஒரு ஃபைவ் ஸ்டார் ஹொட்டல்ல ரிசப்ஷனை வெச்சுக்கலாம்."

"ம்... பார்க்கலாம்! நானும் மண்டபத்துக்காக ட்ரை பண்ணிட்டிருக்கேன். மண்டபம் கிடைக்கலைன்னா நீங்க சொல்ற யோசனைதான் சரி... உங்க சன் நித்தியன் இந்த கல்யாண விஷயத்தில் அவ்வளவு ஆர்வமா இல்லாதது நல்லாவே தெரியுது. கொஞ்சம் சந்தோஷமாயிருக்கும்படி சொல்லுங்க. எம் பொண்ணு விசாலிக்கு இப்ப இருக்கக் கூடிய ஒரே சந்தோஷம் உங்க சன் நித்தியன் தான் அவ தூங்கற நேரம் தவிர மத்த எல்லா நேரமும் நித்தியனைப் பத்தித் தான் பேசிட்டிருக்கா. நித்தியன் மேல அவளுக்கு எப்படி இவ்வளவு ஈடுபாடு ஏற்பட்டதுன்னே தெரியலை. விசாலி காட்ற இந்த அபெக்ஷனில் பாதியையாவது நித்தியன் காட்டணும், இல்லேன்னா விசாலிக்கு அது ஒரு பெரிய ஏமாற்றமாயிடும்."

"கல்யாணத்துக்குப் பின்னாடி நித்தியன் நார்மலாயிடுவான். அவனுக்கு மனசுக்குள்ளே ஜெயிலுக்கு போய்ட்டு வந்த ஒரு கில்ட்டி கான்ஷியல். அதான் சிரிச்சு பேச தயக்கப்படறான். வாரம் பத்து நாள் போனா சரியா போயிடும்."

விஜயராகவன் சிரித்தார். "விசாலிக்கு பக்கத்துல ரெண்டுநாள் இருந்தாபோதும் உங்க சன் நித்தியனை தலைகீழா மாத்தி காட்டிடுவா...கல்யாணம் முடிஞ்சதும் ஹனிமூன் டிரிப்பை எங்கே ஃபிக்ஸ் பண்ணியிருக்கா தெரியுமோ?"

"எங்கே?"

"காஷ்மீர்ல பத்துநாள். சிம்லாவில பத்து நாள். இது முதல் கட்ட ஹனிமூன். ரெண்டாவது கட்ட ஹனிமூன் ஊட்டி கொடைக்கானலாம்... தலா ஏழுநாள் ஷெட்யூல்."

ருத்ரமூர்த்திக்கு இருதயம் லேசாய் வலித்தது. கொள்ளை கொள்ளையாய் இவ்வளவு ஆசை வைத்திருக்கும் இந்தப் பெண் விசாலியை நித்தியன் கல்யாணம் செய்துக்கொள்ளாமல் போனால் அந்த அதிர்ச்சியை அவள் எப்படித் தாங்கிக் கொள்ளப்போகிறாள்?

"என்ன சம்பந்தி! பேச்சையே காணோம்."

"ஒண்ணுமில்லை. என் மருமகள் இவ்வளவு வேகமாக இருக்காளேன்னு பிரமிப்போடு யோசனை பண்ணிட்டிருக்கேன்."

"சாயந்தரம் ஃப்ரீயா இருந்தா வீட்டுப் பக்கம் வாங்களேன். கல்யாண ஏற்பாடுகளைப் பத்தி கொஞ்சம் பேசுவோம்."

"வர்றேன்."

"ஒரு அஞ்சு மணிக்கு எதிர் பார்க்கட்டுமா?"

"எப்படியும் ஆறு மணிக்குள்ளே வந்துடறேன்."

"வாங்க... ப்ளீஸ்..."

ருத்ரமூர்த்தி செல்ஃபோனை அணைத்துவிட்டு ஹாலில் மெல்ல எழுந்து நடை போட்டார்.

'நித்தியன் விசாலியைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.'

'அந்த சாந்தாவை விட்டு விலக வேண்டும்.'

'வழி என்ன?'

மூளையில் உள்ள இலட்சக்கணக்கான நியூரான்கள் வலிக்கும் அளவுக்கு யோசனை செய்தபடியே ஹாலை மெதுவான நடையால் அளக்க ஆரம்பித்தார்.

பதினைந்து நிமிட யோசனைக்குப்பின் அந்த முடிவுக்கு வந்து போர்டிகோவில் இருந்த காரை நோக்கிப்போனார்.

காத்திருந்த ட்ரைவர் பின்சீட்டுக் கதவைத் திறந்து வைக்க அவனை கையமர்த்திவிட்டு ட்ரைவிங் சீட்டுக்குள் போய் திணித்து ஸ்டீயரிங்கைப் பிடித்து இக்னீஷியனை உசுப்பினார்.

கார் நகர்ந்து போர்டிகோவைக் கடந்து காம்பௌண்ட் கேட்டைத் தாண்டியது.

★★★

பட்டுப் புடவைகள் நிறம் நிறமாய் கண்ணைப் பறிக்க அவைகளுக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தாள் சாந்தா.

பின்னால் நித்தியன். முகுந்தன்.

"சீக்கிரமா செலக்ட் பண்ணு சாந்தா. நாம கடைக்குள்ளே வந்து நாற்பத்தைந்து நிமிஷமாச்சு."

"எனக்கு எதை செலக்ட் பண்றதுன்னே தெரியலை... ஒரே குழப்பமா இருக்கு."

"சரி... நான் செலக்ட் பண்ணட்டுமா?"

"ம்"

"அந்த மயில் கழுத்து கலர் சேலை எனக்குப் பிடிச்சிருக்கு. எடுத்துடலாமா?"

"எனக்கு பிடிக்கலை."

"சேலை நல்லாயில்லையா?"

"சேலை நல்லாயிருக்கு"

"பின்னே?"

"விலை பிடிக்கலை. பதினெட்டாயிரம் ரூபாய் போட்டு சேலை எடுக்கணுமா?"

"விலை ஒரு பிரச்சனையே கிடையாது." சொன்ன நித்தியன் கடை சேல்ஸ் மேனைப் பார்த்து "இந்த சேலையை பேக் பண்ணி பில் போட்டுடுங்க" என்றான்.

சேலை ஒரு அட்டைப் பெட்டிக்குள் அடக்கமாகி பில்லோடு வர கவுண்டரில் பே பண்ணிவிட்டு காருக்கு வந்தார்கள்.

"அடுத்தது உம்மிடியார் போயிடலாமா?"

"என்னங்க... எனக்கு நகையெல்லாம் வேண்டாம். இப்ப நான் போட்டுக்கிட்டு இருக்கிற நகையே போதுமானதா இருக்கு."

"பேசக் கூடாது. கார்ல ஏறு... கல்யாணத்துக்காக கொஞ்சம் புது நகைகள் வாங்கியே ஆகணும்."

சாந்தா மறுத்து பேச முடியாமல் காரின் பின் சீட்டுக்கு போக... நித்தியனும் முகுந்தனும் முன் சீட்டுக்குப் போக முயன்ற விநாடி...

நித்தியனின் தோள் மெல்ல தட்டப் பட்டது.

திரும்பினான்.

ட்ராபிக் கான்ஸ்டபிள்.

ரோட்டின் எதிர்பக்கத்தில் கையைக் காட்டிச் சொன்னார். "ஸார்... உங்களை அந்தக்கார்ல இருக்கிற பெண் கூப்பிடற மாதிரி தெரியுது. உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணான்னு பாருங்க..."

நித்தியன் தன் பார்வையை அந்தக் காருக்குக் கொண்டு போனான்.

விசாலி ட்ரைவிங் சீட்டினின்றும் தலையை நீட்டி கையை அசைத்துக் கொண்டிருந்தாள்.

(பௌர்ணமி தொடரும்)

---

# அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

## 22

**ராஜையா**

பர்ஸானி முதலில் தயங்கினார். பிறகு, "எங்களுக்கு போராட கைகள் இருக்கு. ஆனா, போதுமான அளவு ஆயுதம்தான் இல்லை" என்று உணர்ச்சிவசப்பட்டார்.

"கவலையை விடுங்க! ஆயுதம் நாங்க சப்ளை செய்யிறோம்" என்றார்கள் ஏஜெண்டுகள்.

அவ்வளவுதான்! சி.ஐ.ஏ. விரித்த வலையில் விழுந்தார் பர்ஸானி. நியாயமான போராட்டத்துக்காக அநியாயமான இடத்திலிருந்து உதவி பெற அவர் சம்மதித்தார்.

சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் சொன்னார்கள்:

"ஈரான் மன்னர் ஷா எங்க ஆளு. அவர்மூலம் உங்களுக்கு ரகசியமா நவீன ஆயுதங்கள் குடுக்கறோம். ஈராக் ராணுவத்தை எதிர்த்து துணிச்சலா சண்டை போடுங்க. உங்க எல்லைக்கு உட்பட்ட எல்லா பகுதிகளையும் பிடிச்சு வச்சுக்கிட்டு போட்டி அரசாங்கம் நடத்துங்க. உங்க கிளர்ச்சியை ஒடுக்க முடியாம பக்கரும், சதாம் உசேனும் ஆட்சியை விட்டு ஒடிருவாங்க. அதுக்கப்புறம் பார்தாத்தில் நாங்க உட்கார வைக்கிற பொம்மை அரசு உங்களுக்கு முறைப்படி தனி நாடு குடுக்கும். சரியா...? விஷ் யூ ஆல் த பெஸ்ட்!"

1973ம் ஆண்டு பிற்பகுதியில் 'குர்திஸ்தான்' போராட்டம் திடீரென தீவிரம் அடைந்தது. குர்து போராளிகள் ஈரான் மூலம் கிடைத்த அமெரிக்க ஆயுதங்களைக் கொண்டு பல நகரங்களைப் பிடித்துக் கொண்டார்கள்.

"இது அமெரிக்கா-ஈரான் கூட்டுச் சதி" என்ற நோக்கில் மட்டும் குர்து பிரச்சனையைப் பார்த்த சதாம் உசேன், அமெரிக்காவின் சதி வெற்றி பெற்றுவிடக் கூடாது என்ற உறுதியுடன் களத்தில் இறங்கினார்.

குர்து போராளிகளுக்கு எதிராக விமானத் தாக்குதலையும், டாங்கித் தாக்குதலையும் முழுமுச்சுடன் நடத்தினார்.

பலத்த உயிர்-உடைமைச் சேதங்களுக்குப் பின் சதாம் வெற்றி பெற்றார்.

பர்ஸானி நாட்டை விட்டே தப்பி ஓடினார்.

சி.ஐ.ஏ. வின் இந்த முயற்சியும் தோற்றுப்போனது. பக்கர்-சதாம் ஆட்சியைக் கவிழ்க்க இப்போதைக்கு வேறு வழியில்லை என்ற முடிவுடன் அது பின்வாங்கியது.

ஈராக்கில் அமைதி திரும்பியது.

அமெரிக்க பெட்ரோல் கம்பெனியை



நாட்டுடைமை ஆக்கியதாலும், பெட்ரோல் விலை உயர்ந்ததாலும் ஈராக்கில் செல்வம் குவிந்தது. சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னெப்போதையும் விட கணிசமாக உயர்ந்தது.

குர்து இனத்தினர் நீங்கலாக பெரும்பாலான ஈராக்கியர்கள், மறுமலர்ச்சிக் கட்சியின் ஆட்சியை தங்களுக்குக் கிடைத்த பெரும்பேறாக கொண்டாடினார்கள்.

இந்தச் சமயத்தில் ஈராக் அரசியலில் பெரிய திருப்பம் ஏற்பட்டது.

பரஸ்பரம் ஒன்றுபட்டு, ஒத்த கருத்துடன் இது நாள் வரை செயல்பட்டு வந்த ஜனாதிபதி பக்கருக்கும், துணை ஜனாதிபதி சதாம் உசேனுக்கும் மோதல் வெடித்தது....

சதாமின் மாமா கயருல்லா வீட்டு ஆலோசனை அறை...

நடுநாயகமாக கயருல்லா அமர்ந்திருந்தார். அவருக்கு வலதும் இடதுமாய் ஜனாதிபதி பக்கரும், துணை ஜனாதிபதி சதாம் உசேனும் உட்கார்ந்திருந்தார்கள்.

அவர்களைச் சுற்றி குடும்ப உறவினர்களும், கட்சி வி.ஐ.பி.க்களுமாய் அறை நிரம்பி வழிந்தது. பலருக்கு உட்கார இடம் போதாததால், நின்று கொண்டிருந்தார்கள். அறையின் வாசல் மனிதக்கதவுகளால் அடைபட்டிருந்தது.

இத்தனை பேர் நெருக்கமாய் கூடியிருந்தபோதிலும் அங்கு அசாதாரணமான அமைதியும், இறுக்கமும் கனத்துத் தொங்கிக் கொண்டிருந்தது...

சதாம் நிமிர்ந்து பக்கரை பார்த்தார். அதேசமயம் பக்கரும் சதாமைப் பார்த்தார். இருவர் கண்களும் சந்தித்துக்கொண்டன. பக்கர் உடனே பார்வையை விலக்கித் தரையில் பதித்தார்.

இருவர் மனங்களும் ஒருவரை ஒருவர் விலக்கி தூரமாய் நிறுத்திக் கொண்டிருந்தன.

எல்லாம் கொமேனியால் வந்த வினை!

கொமேனி ஈரான் மதத்தலைவர். ஷியா வகுப்பைச் சேர்ந்த முஸ்லிம். மத தீவிரவாதி.

இவர் 1979 தொடக்கத்தில் ஈரானில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

கொமேனி சார்ந்த ஷியா வகுப்பு முஸ்லிம்களே அரபு உலகில் எண்ணிக்கையில் அதிகம். எனினும் அவர்கள் ஒரு நாட்டில்கூட அப்போது தலைவராக இல்லை. இதனால், "அரபு உலகிலுள்ள ஷியா முஸ்லிம்கள் தங்கள் நாட்டு ஆட்சியைத் தூக்கி எறிய வேண்டும். ஷியாக்கள் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும், மதச்சார்புள்ள இஸ்லாமிய ஆட்சியை நிறுவ வேண்டும்." என்று கொமேனி அறைகூவல் விடுத்தார்.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com

# உதட்டில் ஒரு மச்சம்

மோகனன் அதிர்ந்தார். விறைத்தார். வெடிகுண்டுகள் இருப்பதால்தான் நாய்கள் குரைக்கின்றனவா?

உடனடியாக அங்கிருந்த மனிதர்கள் விலக்கப்பட்டார்கள். பொலிஸார் ஒரு பெரிய வட்டமாகக் கைகோர்த்து நிற்க, வெடிகுண்டு நிபுணர்கள் தம் கருவிகளுடன் சோதனையில் ஈடுபட்டனர். கிட்டத்தட்ட முப்பது பரபரப்பான நிமிடங்கள் கழித்து சீருடை அணிந்த நிபுணர் 'ச்சீ!' என்று சலிப்பான ஒரு குரல் கொடுத்தார்.

மணலிலிருந்து வெளியே எடுத்துப் போடப்பட்டதைப் பார்த்ததும், மோகனனும் சுற்றியிருந்த பொலிஸ்காரர்களும் இறுக்கம் தளர்ந்தனர்.

ஏதோ ஒரு ஹொட்டலிலிருந்து பார்சல் செய்யப்பட்ட மட்டன் அயிட்டம்!

சிரிப்பு அலை அலையாகப் பரவியது.

"சார்! மேடைக்கடியில் இதைத் தவிர வேறு எந்த வெடிகுண்டும் இல்லை."

"வெரிகுட் என் பர்மிஷன் இல்லாமல் மேடைக்கடியில் இனி யாரும் போகக் கூடாது. இங்கே நான்கு பொலிஸ்காரர்களை நிறுத்துங்கள்!"

காலை நான்கு மணி வரையில் இங்கும் அங்கும் நடந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை மறுபடி மறுபடி சரிபார்த்து விட்டு ஜீப்பிற்குத் திரும்பியபோது அவர் கண்கள் தூக்கமின்மையால் செக்கச் சிவந்திருந்தன.

கிளப் நிகழ்ச்சிகளை எதற்காக பீச்சில் ஏற்பாடு செய்ய வேண்டும்? அவர்களுடைய கிளப்பிற்குள்ளேயே வைத்திருக்கலாம். கிளப் செக்ரட்டரி அப்படித்தான் விரும்பினார். ஆனால் அமைச்சர் அதை அவர்கள் செலவில் கட்சி விழாவாகவும் மாற்றிக் கொள்ள விரும்பி கடற்கரையில் ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டார் என்பது மோகனனுக்குத் தெரியும். இளைஞர் அணி, இளைஞர் அணி என்று கட்சியில் இளைஞர்களைத் தன்பக்கம் இழுத்துக்கொண்டு தன்னுடன் மோதக்கூடிய மூத்த தலைவர்களை பலவீனப்படுத்த அவர் முனைந்திருப்பது அரசியலாக இருக்கலாம். ஆனால் அதற்காகத் தன் பிழைப்பை இப்படிக் கடினப்படுத்தி விட்டாரே என்று கோபம்தான் வந்தது.

ஹொட்டலை நோக்கி ஜீப் பயணப்பட்ட போதும், மோகனனின் அடிமனதில் ஒரு அதிருப்தி கசண்டாகத் தங்கிவிட்டது. செக்யூரிட்டியில் ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது என்று அவர் உள்மனது மீண்டும் மீண்டும் மணியடித்துக்கொண்டே இருந்தது.

படுக்கையில் தூக்கம் பிடிபடாமல் புரண்டு கொண்டிருந்தார். விடிகாலைச் சூரியன் ஆரஞ்சு சாந்தை அடிவானத்தில் தீற்றி எழுந்த நேரம், திடீரென்று அந்த மின்னல் நெஞ்சில் அடித்தது.

அமைச்சரை மேடையில் சந்திக்க இருந்தவர்களின் பட்டியலைச் சரிபார்க்க வேண்டும். கட்சிக்காரர்களாக இருந்தாலும் ஒவ்வொருவரையும் கவனித்து வைத்துக்கொள்வது அவசியம். கட்சிக்காரர்கள் மட்டுமில்லை, அமைச்சர் கையால் பரிசு வாங்கப் போகிறவர்கள் யார் யார் என்பதையும் விசாரிக்க வேண்டும்.

கிளப் செக்ரட்டரிக்கு உடனே ஃபோன் செய்தார்.

"பரிசு வாங்கவிருக்கும் அத்தனை இளைஞர்களையும் நான் பார்க்க விரும்புகிறேன். காலை பத்துமணிக்கெல்லாம் கிளப்பிற்கு வரவழைத்து விடுங்கள்!" என்றார். அப்புறம் ஒரு மணி நேரம் நிம்மதியாகத் தூங்கினார்.

☆ ✪ ☆

புது டில்லி.

அரவிந்த் காலையில் கண்திறந்தபோது, ஜ்யோதி கண்ணாடிக்கு எதிரில் உட்கார்ந்து லிப்ஸ்டிக் நுனியை உதடுகளில் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன ஹனி, எங்கேயாவது வெளியில் போகிறாயா என்ன? ஆறு மணிக்கெல்லாம் குளித்து ட்ரெஸ் பண்ணிக்கொண்டு!"

அரவிந்த் கட்டிலிலிருந்து இறங்கி அவளைப் பின்புறமாக அணைத்து, "டோண்ட் டிஸ்டர்ப் மீ ஜில்ஜிட்டா," என்றான்.

ஜ்யோதி துள்ளியதில் லிப்ஸ்டிக் கன்னத்தில் திக்காக-சிகப்பாக கோடிழுத்தது. கோபத்துடன் திரும்பி லிப்ஸ்டிக்கால் அவன் கன்னத்தில் கோடிழுத்தாள். கால்களைத் தரையில் உதைத்து, "அரைமணி நேரமாக ரெடி பண்ணிக் கொண்டிருந்தேன். எல்லாவற்றையும் கெடுத்து விட்டாய்."

அரவிந்த் கண்ணாடியில் தன் கன்னத்து லிப்ஸ்டிக்கைப் பார்த்து, "கத்தியால் கீறியது போல் இல்லை? விக்ரம் பார்த்தால் சந்தோஷப்படுவான். வெண்ணெய் முகம். வெண்ணெய் முகம் என்று புலம்பிக் கொண்டிருப்பவன், அரவிந்தின் முகம் கிழிந்துவிட்டது என்று சொன்னால் துள்ளிக் குதிப்பான்..." என்றான் சிரித்துக் கொண்டே.

ஜ்யோதி பதறி எழுந்து அவன் வாயைப் பொத்தினாள். "அப்படியெல்லாம் பேசாதே அரவிந்த்!" என்று சொன்னபோதே கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அவன் முகத்தில் அவள் பச்சக் பச்சக் என்று முத்தம் பதித்து முகமெங்கும் லிப்ஸ்டிக் கறையாக்கிய போது, முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான். "ஏய் முட்டாள்! நான் இன்னும் பல்கூடத் தேய்க்கவில்லை."

"வா, சேர்ந்து குளிப்போம்."

"என்ன இன்றைக்கு மேடத்திற்கு செம மூடு?"

"இன்றைக்குப் பூராவும் நான் உன்னுடன் சேர்ந்துதான் இருக்கப் போகிறேன்."

"இது என்ன புதுப் பேத்தல்?"

"நான்கூட இருப்பது பேத்தலா?"

"இன்றைக்கு நான் லீவு போட முடியாது செல்லம்."

"யார் உன்னை லீவு போடச் சொன்னது?"

"பின்னே? பிளேன் ஓட்டும்போது நீயும் என் மடியில் ஏறி உட்கார்ந்து கொள்வாயா?"

"ஆமாம்..."

"என்ன ஆமாம்? இன்றைக்கு சென்னை போகிறோம் என்று உனக்குத் தெரியாதா?"

"தெரியும். அதற்காகத்தான் நான் ட்ரெஸ் பண்ணிக் கொண்டிருந்தேன்."

"என்னுடன் வருவதற்கா?"

"ஆமாம்..."

"ஜ்யோதி... உனக்கு என் வேலையின் நேச்சர் தெரியும். இப்படி தடால் தடால் என்று குறுக்கில் கால் நீட்டினால்..."

"அமைச்சரோடு அவர் பொண்டாட்டி வரவில்லையா?"

"அவர் சென்ட்ரல் மினிஸ்டர். நான் வெறும் ட்ரைவர்... ஜ்யோதி உன்னைப் பார்த்தால் எனக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை."

ஜ்யோதி அவன் இடுப்பை வளைத்துப் பிடித்து, "வா முதலில் குளிக்கப் போகலாம்" என்றாள்.

"இன்னும் ஒரு மணிநேரத்தில் நான் ரெடியாக வேண்டும்."

"நாம்..." என்றாள் ஜ்யோதி.

"ஏய் கலாட்டாவிற்கும் ஒரு லிமிட் இருக்கிறது. உன்னை எப் படி நான் அழைத்துப் போக முடியும்?"



"அப்படியானால் என்னைத் தனியாக விட்டுப் போகாதே!"

"ஸ்வரூபா வீட்டிற்குப் போய் இரு. இல்லை யென்றால் அபர்ணா ஆண்ட்டி ரொம்ப நாளாகக் கூப்பிடுகிறாளே, அவர்கள் வீட்டுக்குப் போ... மீட்டிங் முடிந்து நைட் நான் திரும்ப லேட்டாகலாம்... அமைச்சர் ரொம்ப டயர்ட்டாக ஃபீல் பண்ணினால் மெட்ராஸிலேயே நைட் தங்கிவிட்டு, காலையில் புறப்படலாம் என்று சொன்னாலும் சொல்லி விடுவார்."

"அந்த இளிச்சவாயனுக்கு வந்த வாழ்வைப் பாருடா!"

"டயமாகி விட்டது கண்ணா..."

"சரி நீ சொன்னதற்காக நான் இன்றைக்கு ஸ்வரூபா வீட்டிற்குப் போகிறேன்.... ஆனால் நீ திரும்பி வந்ததும், இரண்டு நாள் என்னை எங்கேயாவது அழைத்துப்போக வேண்டும்.."

"ஜில்ஜிட்டா..."

"ஏய்!"

"ஜில்ஜிட்டா..."

"ஐயோ!"

ஜ்யோதி கட்டிலில் துள்ளி விழ, அரவிந்த் பாத்ரூமிற்குள் புகுந்தான்.

★★★

ஜன்னல்களுக்கு திரைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

அறைக்குள் டியூப்லைட் வெளிச்சம் மட்டும்.

தேவேந்திரன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். கைலாஷ் கையில் ஒரு மிகக் கூர்மையான கத்தி வைத்திருந்தான்.

"நான் ரெடி...!" என்றான்.

தேவேந்திரன் அங்கிருந்த பூசணியை எடுத்தான். நீலநிற மார்க்கர் பேனாவால் பூசணியில் ஒரு கோடு போட்டான். அதை அர்த்தநாரியிடம் கொடுத்தான். அர்த்தநாரி அதை தன் முகத்திற்கு நேரே உயர்த்திப் பிடித்துக் கொண்டான்.

"ஒன்...டூ...த்ரீ..." என்றான் தேவேந்திரன்.

கைலாஷின் கை மின்னல் போல் உயர்ந்தது. கையிலிருந்த கத்தி சர்ரக் என்று கிழித்தது. விலகியது. பூசணியை இறக்கச் சொல்லி தேவேந்திரன் பார்த்தான்.

"நான் போட்ட கோட்டிலிருந்து அரை சென்டிமீட்டர் விலகி இருக்கிறது கைலாஷ். நீ நன்றாக பிராக்டிஸ் செய்யவேண்டும். போட்டியில் பரிசு வாங்கும் அளவிற்கு நம் முயற்சி கை கொடுத்து விட்டது. இன்று ஈவினிங் உனக்குக் கிடைக்கப் போவது ஒரே ஒரு வாய்ப்புத் தான். அதைத் தவறவிட்டால் நம்மைவிட முட்டாள்களில்லை."

**சுபா 11**

"தவறவிடமாட்டேன், தேவ்...திருப்தி வரும் வரையில் மீண்டும் மீண்டும் பயிற்சி செய்கிறேன்... ஆனால் ஒரு கேள்வி...!"

"என்ன?"

"இந்தக் கத்தியை மேடைக்கு எடுத்துப்போக முடியுமா?"

தேவேந்திரன் சிரித்தான். "அது பற்றி உனக்கு இன்னும் நான் சொல்லவேயில்லை. பரிசாகக் கொடுக்கப்போகிற வெள்ளிக் கோப்பையில் இருக்கிறது சூட்சுமம். அதை வாங்கியதும் அடிப்புறத்தைப் பிடித்து இழு. கப்பின் தண்டுப் பகுதியில் ஒரு கத்தியின் கூர்முனையைப் பதித்து அதைக் கோப்பையின் கீழ்ப்பகுதியில் செருகியிருக்கிறோம்... நீ இழுத்ததும், அந்தக் கூர்ப்பகுதி வெளியில் தெரியும். ஒரே சீவு. குறி தப்பாமல் அமைச்சரின் கழுத்து இரத்தக் குழாயையும், நரம்பையும் நீ கிழித்துவிட வேண்டும். அடுத்த கணம் உன்மீது மெஷின் கன்கள் தபதபவென்று தோட்டாக்களைப் பாய்ச்சி விடும்."

"நான் சந்தோஷமாக சாவேன் தேவ்."

"குறி தப்பக்கூடாது என்பதற்காகத்தான் உன்னை சின்சியராக பயிற்சி செய்யச் சொல்கிறேன். அப்படி ஒருவேளை உன்னை அவர்கள் உயிருடன் பிடித்து விட்டால் கூட..."

"அதே கத்தியால் என் கழுத்தை வெட்டிக்கொள்வேன் தேவ்..." என்றான் கைலாஷ், முகமெங்கும் பிரகாசமாக.

(○—வரும்—○)

## இதுவரை

அரவிந்த்
ஒரு பைலட்.
அவனது மனைவி ஜ்யோதி.
அவர்களது நண்பன் விக்ரம்.
அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை.
இதற்கிடையே அரவிந்த்,
அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன்
பைலட்டாக ஓடக்கரை
கிராமத்திற்குச் செல்கிறான்.
அக்கிராமத்தை வளைத்துப்போட
அமைச்சர் திட்டமிட
அதை எதிர்க்கிறார்கள்
கிராம இளைஞர்கள்.
பொலிஸ் சுடுகிறது.
சீனு காயமடைகிறான்.
அவன் மருத்துவமனையில்
அனுமதிக்கப்படுகிறான்.
கிராம இளைஞர்கள்
கொதிக்கின்றனர்.
அமைதி வழி சரிப்படாது
என்று ஆயுதம் ஏந்த
முடிவு செய்கின்றனர்.
நிலத்தை அபகரிப்பதில்
அமைச்சர் தீவிரம் காட்டுகிறார்.
அமைச்சரைக் கொல்ல
இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.
சீனு மருத்துவமனையில்
இறக்கிறான்.

இனி....

---

# கவியரசுவின் சுயசரிதை 30

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

"நான் என் மனைவிக்கு நகை வாங்கக்கூட கடைக்குச் சென்றதில்லை. எனக்கென்றுகூட நான் நகைக் கடை ஏறியதில்லை. இன்று மதியம் வேகாத வெய்யிலில் ஊரெங்கும் அலைந்து கடையெங்கும் தேடி வாங்கி வந்தேன் ஒரு கணையாழி: அந்தக் கணையாழியை இந்த வெற்றியை ஈட்டித் தந்த என் தம்பி கருணாநிதிக்கு அணிவிக்கிறேன்." கூட்டத்தில் பெருத்த கையொலி, 'கருணாநிதி வாழ்க!' என்ற முழக்கம். அவன் கூனிக் குறுகினான். பயன் கருதாத உழைப்பு, அரசியலில் எப்படி அலட்சியமாக ஒதுக்கப்படும் என்பதை அப்போதுதான் அவன் கண்டான்.

பெரிய ஜாதிக்காரனையும் சிறிய ஜாதிக்காரனையும் ஒரே மாதிரியாக எப்படி ஜாதி வெறி ஆட்டி வைக்கிறது என்பதை அன்று அவன் நேருக்கு நேர் பார்த்தான்.

அண்ணாதுரை அவன் இதயத்திலிருந்து சரியத் தொடங்கினார். அவரை வரம்புமீறிப் புகழ்ந்துகொண்டிருந்த அவன் உள்ளத்தில் அன்றுதான் அவரைப்பற்றிய கசப்பான எண்ணம் உதயமாயிற்று. ஒரு களங்கமற்ற பக்தனை அன்று அவர் இழக்கத் தொடங்கினார். அவன் இதயம் நெருப்பாகவே எரிந்தது. கூட்டம் முடிந்து அவர் கடற்கரை மரக்கலத்தின் மீது போய் அமர்ந்தார்.

அவன் நேரே அவரிடம் போனான். "என்ன அண்ணா! இப்படிச் சதி செய்து விட்டீர்கள்?" என்று நேருக்கு நேரே கேட்டான்.

"அட நீயும் ஒரு மோதிரம் வாங்கிக் கொடு.



அடுத்த கூட்டத்தில் போட்டுவிடுகிறேன்!" என்றார்.

"அப்படித்தான் கருணாநிதியும் வாங்கிக் கொடுத்தாரா?" என்று அவன் கேட்டான்.

"அட சும்மா இரு. அடுத்த தேர்தல் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம்," என்றார்.

அவன் அவரிடம் சொல்லிக்கொள்ளாமலே நடக்கலானான்.

அவன் கண்களில் நீர் மல்கிற்று. பயன் கருதி அவன் உழைக்கவில்லை என்றாலும் உழைத்தவனுக்கு ஒரு நன்றிகூட இல்லையே என்று கலங்கினான்.

கட்சியிலும் அண்ணாதுரை மீதும் அவன் வைத்திருந்த பிடிப்பு நெல்லின் உமி சிறிது நீங்குவதுபோல நீங்கத் தொடங்கிற்று!

அண்ணாதுரை அவனுக்கு இழைத்த தீமைகளைவிட அவன் தனக்கே இழைத்துக் கொண்ட பெருந்தீமை- 'கவலை இல்லாத மனிதன்' என்ற தலைப்பில் மூன்றாவது படம் எடுத்ததாகும்.

அமைதியற்ற நெஞ்சம், உட்கார்ந்து சிந்திக்க முடியாத அளவு கவலை. இந்தச் சூழ்நிலையில்- எதையோ. நினைத்து எதையோ எழுதி அதையொரு கதையென்று படமெடுக்க ஆரம்பித்தான். அந்தப் படத்தில் அவன் செய்த எல்லாமே தவறு.

முன்பின் தொடர்பில்லாத குழப்பமான கதை- பொருத்தமில்லாத நடிகர்கள். கடன்வாங்கிப் படம்பிடிக்கும் சூழ்நிலை. அவனுடைய பங்காளியாக இருந்தவரோ இது என்ன காகிதம் என்று பாராமலேயே கையெழுத்துப் போடுபவர். வேலை பார்த்த ஊழியர்களில் சிலரோ-எடுத்தவரை இலாபமென்று கருதுகிறவர்கள். இதில் கம்பெனியைக் கவனிக்காமல் அவன் செங்கல்பட்டு மாவட்டத்தில் கட்சிப் புரட்சி நடத்தியது- இவ்வளவும் சேர்ந்து 1960 செப்டம்பர் மாதத்தில் படம் வெளியானபோது அவனைப் பெரும் கடன்காரனாக நிறுத்தின. அன்றையக் கணக்குப்படி ஐந்து இலட்சத்துத் தொண்ணூறு ஆயிரம் ரூபாய்க்கு அவன் கடன்காரனாய் ஆகியிருந்தான்.

பின்னாளில் அது வட்டியேறி ஏழு இலட்சமாகப் பரிணமித்தது. ஒரு கடன் பத்திரத்தில் கூட அவன் கையெழுத்துப் போட்டதில்லை! யார் யாரிடம் எவ்வளவு கடனென்று அவனுக்கே தெரியாது. பங்காளிபோட்ட கையெழுத்துக்கெல்லாம் அவனே ஆளானான்.

பங்காளிகொடுத்த கணக்கின்படி அவ்வளவு கடன்; ஆனால் அவர் கொடுக்காத கணக்கின்படி பலபேர் வந்தார்கள். அவர்களில் பலரின் முகத்தைக்கூட அவன் அப்பொழுதுதான் பார்த்தான். தூக்கம் பிடிக்கவில்லை. உணவு செல்லவில்லை. துடித்தான்; துவண்டான்.

கம்பெனியை இழுத்து மூடினான். கம்பெனிக்குச் சொந்தமாகப் பதினொரு கார்கள் இருந்தன. அவ்வளவு கார்களிலும் கழுத்தளவு கடன் இருந்தது.

அந்தக் கார்களை அதனதன் மீது பணம் கொடுத்தவர்களிடமே கொண்டு போய்விட்டு விட்டான். ஆரம்பமாயிற்று துயரம். தினசரி தபால்காரன் ரிஜிஸ்தர் தபால்களோடு வீட்டுக்கு வரத் தொடங்கினான். அந்தத் தபால்கள் ஒவ்வொன்றின் மீதும் ஒவ்வொரு வக்கீலின் பெயர் இருக்கும். விடிந்தால்- எழுந்தால் வக்கீல் நோட்டீஸ் வந்து கொண்டே இருந்தது.

பரிகாரம் ஒன்றும் தோன்றவில்லை. கடன் கொடுத்தவர்கள் எல்லோருக்கும் கடிதம்போட்டு, ஒரு குறிப்பிட்ட நாளில் திரு.ஏ. சுப்பையா செட்டியார் அவர்கள் வீட்டிற்கு வரும்படி கேட்டுக்கொண்டான்.

திரு.ஏ. சுப்பையா செட்டியார் இந்தியாவிலேயே மிக உயர்ந்த மனிதர்களிலே ஒருவர். பிள்ளைக்குட்டி இல்லாதவர்; அடுத்தவன் பணத்திற்கு ஆசைப்படாதவர். பெரும் வட்டி வாங்குகிறவர்களைக் கோபிப்பார். கடன் வாங்கவும் கூடாது. கடன் கொடுக்கவும் கூடாது என்று இருப்பவர்.

சென்னையில் எவ்வளவு பெரிய சிக்கலும் மத்தியஸ்தத்துக்காக அவரிடம்தான் வரும். மார்வாடிகளில் இருந்து சாதாரண லேவாதேவிக்காரர்கள் வரை பலரும் அவரைத்தான் தங்கள் நீதிபதியாகக் கருதியிருந்தார்கள். எவ்வளவு பெரிய வழக்கையும் கோர்ட்டுக்குப் போகாமலேயே தீர்த்து வைத்துவிடுவார். திட்ட மிட்ட வாழ்க்கை; தெளிவான நெஞ்சம்; சிக்கலுக்குப் பரிகாரம் காணும் நுண்மாண் நுழைபுலம். அவரை நாடிச்சென்று தங்கள் வழக்கைத் தீர்த்துக் கொள்ளாமல் திரும்பியவர்கள் அரிது.

(சரிதம் தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# சுவடுகள்...!

பாடசாலை விட்டு வெளி வர.... லேசான மழைத் தூறல். குடை விரித்து வெளிகேட் கடந்து, அந்த மணல் பாதைக்கு வர... மீண்டும் குடை மடக்கினாள் வித்யா...

'குடையா...?
குடை எதற்கு...?
அது மழைக்கெதிராய்
மனிதன் பிடிக்கும்
கறுப்புக்கொடி...!'

வைரமுத்துவின் வரிகளுக்குள் சிரிக்கும் அவன்.... மழையை நேசிக்கக் கற்றுத் தந்த அவன்.

"வித்யா... வானக் காதலன் பூமிக் காதலிக்குத் தரும் பறக்கும் முத்தம்தான் மழை...."

அவள் முகம் சிவக்க...

"மழை காதலருக்கு ஒரு பாடம் சொல்லுது.. தெரியுமா...?"



"என்னது..?" அவள் குறும்புடன் கேட்க...

"தொடாது காதலியுங்கள்... தொடுதல் வந்தால் அங்கு எதிர்பார்ப்பு வருகிறது... நான் இவ்வளவு தாறன், நீ எவ்வளவு தருவே? கேள்வி வரும்.... காதல் முதல் படிக்கட்டு... காமம் உச்சி... உச்சி தொடுவதற்கு முன்... உன்னையும், என்னையும் நாமே புரிந்து கொள்ளணும்... புரிதல்ல நாம ஒரே திசைன்னா... உச்சி தொடணும்... வெவ்வேறு திசைன்னா பிரிஞ்சிரணும்....!"

அறிவு பூர்வமாய் அலசும் அவன்...

"எங்கிருக்கிறீர்கள் நஸீம்...?" அவள் கண்களில் சட்டென்று கண்ணீர் துளிர்த்தது...

"நம்மள நம்ம சுற்றம் ஏத்துக்குமா.....?"

அவள் ஏக்கத்துடன் கேட்க,

"ஏத்துக்காது வித்யா... ஏத்துக்கிட்டாலும் மதம் மாறச் சொல்லும், அது முடியாதென் கிறப்போ.... பிரிஞ்சிடலாம்... நினைவுகளோட வாழலாம்.... அதுவும் முடியாதுன்னால், திருமணம் செய்துக்கலாம்... காலம்தான் வித்யா காயங்களுக்கான மருந்து... இதுதான் யதார்த்தம்.

"அழகா பேசிட முடியுது வித்யா. நேற்று ஒன்கிட்ட யதார்த்தம் பற்றிப் பேசிட்டு வீட்டுக்குப் போனா... ராத்திரியெல்லாம் தூக்கமே இல்ல... பிரிவப் பற்றி நெனைக்கும் போதே மனசு பாரமாயிடுது...!"

அறிவும், உணர்வுகளும் உள்ள அவன். எங்கோ.... அவனுடனான நினைவுகளும், இந்த ஒற்றைப் பனையில்-யுத்தம்... புயலாய் மாறி அவனை வடக்கிலிருந்து வாரிச் சென்ற நாளில் அவசரமாய் அவன் செதுக்கிச் சென்ற வாசகங்களுமே அவளை வாழச் செய்து கொண்டிருந்தன.

'விது... இதயமில்லாதவன் ஒருவன்....
இங்கிருந்து செல்கின்றான்...
உன் இதயம் சுமந்து...!

## மஹீன் எம். சகீல்

மாணவியாய் இருந்தவள், அதே பாடசாலைக்கு ஆசிரியையாய் வர, மழலைகளின் சிரிப்பில் தன் சோகம் மறக்க முயற்சித்தாள்... உள்ளத்துள் மரத்துப் போயிருந்தாலும், அம்மா, அப்பாவுக்காய் புன்னகைக்கப் பழகிக் கொண்டாள்.... காதலையும், கவிதையையும் கற்றுத்தந்தவன், காதலைச் சுமந்து கவிதையை விட்டுச் சென்றிருந்தான்.

கடற்கரை மணலில்....
பதிந்துபோன-உன்
காலடித்தடம் காத்து...
நின்றேன்-என்
கண்ணீரே அதை
கலைத்துப்போட்டது...!

அவள் நாட்குறிப்பு கவிதைகளால் நிறைந்தது...

இந்த யந்திர வாழ்க்கையும், ஒரு ஷெல்லில் சிதறிப்போனது. அவள் அப்பா- அந்த அமைதியான தமிழ் வாத்தியார். உருத்தெரியாமல் சிதறிப்போனபோது, அவர்கள் வாழ்க்கையும் தடம் புரண்டது. அம்மாவும் இவளும் தனிமைப்பட- கழுகாய் சதை கேட்கும் கண்களிலிருந்து, தன்னைக் காத்துக் கொள்ள முடியாமல் இரகசியமாய் கண்ணீர் விடுவதும் அம்மாவுக்காய் பொய்யாய் புன்னகைப்பதுமாய் இரட்டை வாழ்க்கையின் அவஸ்தையை அனுபவித்தாள்.

●●●

அந்த விடியல் அவளுக்கு வித்தியாசமாய்ப் பட்டது... இராத்திரி கேட்ட வேட்டுச் சப்தங்களிலிருந்து... சில சமாதிகள் புதிதாய் சமைக்கப்பட்டிருக்கும் என்பது புரிந்தது...

ஒற்றைப் பனையைப் பார்க்க வேண்டும் போலிருக்க... படலை, கடந்து, அந்த மணல் பாதையில் இறங்கினாள்...

தூரத்திலேயே ஏதோ ஒரு வித்தியாசம் புரிபட நெருங்கினாள்... அந்தப் பனை கருகிப்போயிருந்தது...

அன்றுதான் அவள் காணாமல் போனது..

இப்போது அந்தக் கருகிப்போன பனைமரத்தைக் கடக்கும் போதெல்லாம்... மங்கலாய் அந்த வாசகம் தெரியும்.

'காலமெல்லாம் காத்திருப்பேன்-விது'

ஆனால் அவளுக்காய் ஒருத்தன் இன்றும் காத்திருக்கிறான்... தொடுவானம் வெறித்தபடி...

ஓ.... என் தேசமே.. இவர்கள் வாழ்க்கைக்கு சாபமிட்டது யார்...?

# தடிமாடு



எதிர் வீட்டு ஜன்னலில் இருந்து அந்தப் பெண் 'படக்' கென்று கண்ணடித்ததும் கொஞ்சம் படபடப்பாகத்தான் இருந்தது, ஐம்பதைத் தொடும் கணபதிக்கு. கண்ணடித்தது மட்டுமல்லாமல் அவள் லேசாகச் சிரிப்பதுகூட மத்தியான வெளிச்சத்தில் தெளிவாய்த் தெரிந்தது.

ஒரு வாரம்கூட இல்லை அந்தப் பெண் எதிர் வீட்டுக்கு குடி வந்து.

"இங்க நின்னுட்டு என்ன பண்றீங்க? கடைக்குப்போயிட்டு வாங்க." அதிர்ந்து அதிர்ந்து நடந்து வந்த கனகத்தின் குரல் கேட்டதும் அவர் திடுக்கிட்டு, சமாளித்து, கடையை நோக்கி நடந்தார்.

வெயில், வியர்வை, சே! சாடையாய் எதிர்வீட்டைப் பார்க்க இன்னும் அந்தப் பெண் ஜன்னலில்...

வெயிலுக்கு இதமான பார்வை!

அன்று மாலையே கனகம் இல்லாத போது அந்தப் பெண் வீட்டிற்கு வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

ஏழ்மையான குடும்பம். அப்பா குடிகாரர். நிறையக் கடனை வைத்து விட்டு செத்துப்போய்விட்டார். ஏதோ ஜாதகம் சரியில்லாததால் இன்னும் திருமணம் நடக்கவில்லை.

வெகு வெகு சமீபத்தில் நின்று கொண்டு, இழைந்து இழைந்து தன்னைப் பற்றி சொன்ன தகவல்கள் இவை.

அவர் மனதில் 'ஜில்!' கொஞ்சம் தைரியமாக அவள் கரத்தைப் பிடித்து விட்டார். அவள் சிரித்துக்கொண்டே கையை விடுவித்துக்கொண்டு தென்றல் மாதிரிப் போய் விட்டாள்.

பதினைந்து நாட்கள் கழிந்திருக்கும். கனகம் அந்த 'சிறுகதை' புத்தகத்தை கணபதியிடம் கொடுத்து, "பாருங்க... நம் எதிர்த்த வீட்டு காயத்ரி ஒரு எழுத்தாளியாம். அவ எழுதின 'ஜில் கதை' புத்தகத்துல வந்திருக்கு." என்றாள்.

## செல்வபாரதி

"அப்படியா?" வியப்புடன் கேட்டார்.

"ஆமாம், 'பெண் கண்ஜாடை காட்டினா போதும்; ஆம்பளைங்க குடும்பம், வயசு, மனைவி, குழந்தைங்க எல்லாத்தையும் விட்டுடுவாங்க'ன்னு ஒரு வயசான தடிமாட்டைப் பத்தி எழுதியிருக்கா."

அவர் உறைந்து போய், 'கன்னி ஒருத்தி கண்ணடித்தால்' என்ற அந்தக் கதையைப் படித்தார். அப்பட்டமாய் அந்த 'தடிமாடு' அவர்தான்!

# ஜனநாயகம்...!

வவுனியா சந்தையில் காலை வியாபாரம் தமிழ்கள் கைதாகி காணாமல் போகும் வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தது.

"தம்பி முட்டை என்ன விலை."

கேட்ட ஐயாவிற்கு வயது இரண்டு ஐந்துகளை தாண்டிவிட்டது. ஆனால் ஆள் சரி அரைவாசி வயது குறைந்தவர் போன்றே தன் தொழிலில் ஈடுபட்டு வருபவர்.

இன்று தான் வவுனியாவில் இருந்து மன்னாருக்கு முட்டை கொண்டு சென்று விற்பதில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். அவருக்கு பல தொழில்கள் செய்து பழக்கமாயிருந்தாலும் இது முதல் தடவை.



"கனக்க எடுத்தியல் எண்டால் மூன்று ரூபா போடலாம் ஐயா!", முட்டைக்காரன் பதில் கூறி முறிவலித்தான்.

"எனக்கு முந்நூறு முட்டை வேணும் தம்பி. குறைச்சுப் போடுவியோ?"

"இதுக்கு மேலை கட்டாது ஐயா. நீங்கள் வேணும் எண்டால் அங்காலை விசாரித்து பார்க்கலாம்."

"சரி... சரீ.... எண்ணு பார்ப்பம்."

ஐயா முட்டையுடன் மன்னார் பயணமாகி இடையில் வழக்கமாகிப்போன தடங்கல்களுடன் மாலை வந்தடைந்தார்.

மன்னார் சந்தையில் முட்டை இப்பவெல்லாம் நல்ல விலை போகுது எண்டு ஐயா அறிஞ்சதாலை தானே இந்த தொழிலுக்கே வந்தவர். முட்டையை பஸ்ஸால் இறக்கி நடந்தவரை ஒருவன் வழிமறித்தான்.

## நேரில் கண்ட அனுபவத்தினூடு
## செல்வதிருமகன்

"ஐயா-முட்டையை தாங்கோவன்."

"சந்தை நிலவரத்தை ஒருக்கால் பார்த்துவிட்டு தாறனே!"

"முட்டை ஐந்து ரூபா போகுது. உங்களுக்கு நான் பொய் சொல்லேல்லை ஐயா."

ஐயா விலை பேசிக் கொண்டிருக்க, இருவர் வந்து தமது அடையாள அட்டையை ஐயாவிடம் காட்டிவிட்டு முன்னர் விலை கேட்டவரை பார்த்தபோது அவர் முன்னரே நடையைக் கட்டிக் கொண்டிருந்தார்.

"ஐயா.... அவடத்திற்கு முட்டையை தூக்கி வாங்கோ...?" என்றபடி அவர்கள் நடந்தனர்.

அங்கே முட்டையை எண்ணியபிறகு ஐயாவிடம் 1200 ரூபா கொடுக்கின்றனர்.

"தம்பி.... என்ன விலை போட்டனியள்..?"

"ஐயா... வவுனியாவிலை முட்டை போற விலை எங்களுக்கு தெரியும். இஞ்சை நாங்கள் தான் முட்டை எடுக்கிறது. மற்றவங்கள் எடுத்தால் சனத்தை ஏமாற்றி கன விலைக்கு விற்கிறாங்கள்." என்றனர் இருவருமே.

ஐயாவுக்கு முதல் நாள், முட்டை எடுத்தவங்கள் 'ஜனநாயகத்திற்கு திரும்பிய' பொடியள். ஐயா பேசாமல் நடந்து போய் பஸ்ஸில் ஏறினார்.

பஸ்ஸில் பக்கத்து சீற்காரர் கேட்டார்.

"ஐயா... இயக்க பொடியளுக்கோ முட்டை குடுத்தனியள்?"

"நானா விரும்பி குடுக்கேல்லை தம்பி."

"உங்களுக்கு முதல் தரம் போல இருக்குது. ம்... நான் எண்டைக்கோ முட்டை வியாபாரத்தை விட்டுட்டன் ஐயா..."

அவர் அனுபவசாலி என்பதை ஐயா இப்போது அறிந்து கொண்டார்.

'எங்கட மக்கள் தொழில் இன்றி வாழ்கிறார்கள். போதாக் குறைக்கு அவர்களிடம் அரசு வரியும் அறிவிடுகின்றது.'

அடுத்த முறை பாராளுமன்றத்திலை அதே கட்சிக்காரர் ஒருவர் பேசலாம்.

பஸ் வெளிக்கிட்டது. நல்ல பஸ், பாட்டுப் போட்டான் ரைவர். புதுப் பாட்டுப் போல! இசையை வைத்தே ஐயா முகம் சுழிக்க பாட்டு வரிகள் அவரை சிந்திக்க வைத்தது. 'ஜனநாயகமே ஜனநாயகமே பஜகோவிந்தா பஜகோவிந்தா பஜகோவிந்தா ஜனநாயகமே!'

'புதுமைப் பித்தன் படம் கட்டாயம் பார்க்க வேண்டும்' என்று ஐயா நினைத்துக் கொண்டார்.

# அம்மா மனசு

விநாயகம் முடிவாகச் சொல்லிவிட்டார். சதீஷ் விஜியை மணந்து கொள்வதற்கு அவன் அம்மா சம்மதம் தரவில்லையாம்!

துடித்துப் போனான் சதீஷ்.

அவனையே நம்பி இருக்கும் விஜியின் கதி என்ன ஆவது?

"நான் தற்கொலை செய்துகொள்வதைத் தவிர, வேறு வழியே இல்லை சதீஷ். உங்களைக் காதலிச்ச நான், இனி மனசாலும் யாரையும் நினைக்க முடியாது."- விஜி கதறி அழுதாள்.

"எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலை விஜி. அம்மாவின் சம்மதம் கிடைக்காம எந்தக் காரியத்தையும் அப்பா செய்யறதே இல்லை."

"சதீஷ், எனக்காக ஒண்ணு செய்வீங்களா? நீங்களே உங்க அம்மாவிடம் கடைசியா ஒரு தரம் கேட்டுடுங்க. உங்க அப்பாவையும் பக்கத்தில் வச்சுக்கிட்டுத்தான்!"



"நடக்குமா விஜி?"

"நடக்கும்னே நம்புவோம் சதீஷ்."

அவன் அப்பாவிடம் போய் மீண்டும் பரிதாபமாகக் கெஞ்சினான்.

"அப்பா, அம்மாவின் மனசு அந்த நாளிலிருந்தே நீங்கள் அறியாததில்லை. ஒரு சமயம் பிடிவாதமாக ஒன்றை மறுக்கும் அம்மா, இன்னொரு சமயம் அதையே ஏத்துக்கறதும் உண்டு! அதனாலே, எதுக்கும் கடைசியா ஒரு தடவை..."

விநாயகம் சற்றுத் தீவிரமாக யோசித்தார். பிறகு அவருக்கும் மனசில் என்ன பட்டதோ-

"சரி கேட்டுடலாம் வா!"

சதீஷ் மனசு படபடக்க உடம்பெல்லாம் ஒருதடவை வியர்க்க, கடைசி நம்பிக்கையுடன் தாய் மீனாட்சியின் படத்துக்கு எதிரே அப்பா குலுக்கிப் போட்ட இரண்டு சீட்டுக்களில் ஒன்றை எடுத்து அவரிடமே கொடுத்தான்.

"சம்மதம்!"

குப்பென்று உடம்பு பூராவும் மகிழ்ச்சி பரவ, அடுத்த விநாடி அவன் விஜியை தேடிப் பறந்து போனான்.

விநாயகம் மனசுக்குள் சொல்லிக்கொண்டார். "என்னை மன்னிச்சுடு மீனாட்சி. முதலில் 'சம்மதமில்லை'ன்னு நீ கொடுத்த உத்தரவுக்குமாறா இப்போ நான் நடந்துக்கக் காரணம், சதீஷ் சொன்னதுபோல அந்த நாளிலிருந்தே உன் மனசு எப்படிப்பட்டது என்பதை வச்சுத்தான். இப்போ நீயேகூட, அவர்களின் அன்பின் ஆழத்தைப் புரிந்து கொண்டு உன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டிருக்கலாம். இந்த நிலையில் என்னுடைய நம்பிக்கைக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து அவர்களை பிரிக்க நினைக்கிறது பாவம் இல்லையா? ஆகவேதான், இந்தத் தடவை இரண்டு சீட்டிலும் 'சம்மதம்னு' நானே எழுதிட்டேன்!"

## கமலா

# நினைவுகள்



அன்பில்லா உனக்கு-

வணக்கம்...

எப்படி இருக்கின்றாய்? மன்னிக்கவும். நீ எப்படி இருந்தால் எனக்கென்ன?

இந்தக் கடிதம் உனக்கு சங்கடத்தை தரலாம்.

'எதற்கு வழவழ என்று? மேல படி...

உனக்காக காத்திருந்தேன். நீ நிரந்தரமாக என்னருகில் இல்லாமல் போனாய். சரி விடு. போனது போனாய் உன் நிழலை அழைத்துச் சென்றதுபோல் உன் நினைவுகளையும் அழைத்துச் சென்று இருக்கலாமே!

நீ பேசிய பேச்சு ஒவ்வொரு நொடியும் 'சுருக்'கென்று குத்துகிறது. உனது நினைவுகள் மலரும் நினைவுகளாக இருந்திருந்தால் மலர்ந்திருப்பேன். அது மலராத நினைவுகள் ஆச்சே... எப்படி முடியும்?

ஊரை மாத்துனதுபோல் உன் மனசையும் மாத்திக் கொண்டு நீ சந்தோஷமாக இருக்கின்றாய்... ஆனால், என்னால் இருக்க முடியவில்லை. அதனால் தினமும் குடிக்கிறேன். குடித்து குடித்து ஏகப்பட்ட கடன். அதனால், நான் உனது பிறந்த நாளுக்கு பரிசளித்தேனே, மோதிரம் அது எனக்கு வேண்டும். குடிப்பதற்கும், கடனை அடைப்பதற்கும்.

நானே உனக்கு வேண்டாத பொழுது என்மோதிரம் மட்டும் எதற்கு? விரைவில் அனுப்பி வைக்கவும்.

வெறுப்புடன், செல்வா

## பி.சி.பி.ராஜா

அன்புள்ள உங்களுக்கு வணக்கம்... மடல் கிடைத்தது. எப்படி இருக்கின்றீர்கள்? உடல் நலத்தை பார்த்துக் கொள்ளவும்.

நீங்கள் பேசிய பேச்சுக்கள்தான் என்னை ஒவ்வொரு நொடியும் சிந்திக்க வைக்கிறது.

சொல்லிக் கொடுத்த சொல்லும், கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்கு பயன்படும் என்பார்கள்? அதே நிலைமை தான் எனக்கும். அப்பா, அம்மா பேச்சைக் கேட்டு நானும் உங்களிடம் வீராப்பாக பேசிவிட்டு, வந்தேன். இன்று மறக்க முடியாமல் தவிக்கிறேன்.

உங்கள் நினைவே எனக்கு துணையாக உள்ளது. உங்களை மறக்க முடியாமல், தூக்க மாத்திரையை சாப்பிட்டுவிட்டேன். என் உயிரைக்காப்பாற்ற என் அப்பா உங்கள் மோதிரத்தை அடகு வைத்து என்னை காப்பாற்றினார். மன்னிக்கவும். விரைவில் அடகு மீட்டு அனுப்பி வைக்கிறேன்.

அன்புடன், ஓவியா.

பின் குறிப்பு: தாங்கள் எழுதிய கடிதத்தை அப்பா படித்தார். ஒன்றும் சொல்லவில்லை. எங்க அப்பாவுக்கும் மோதிரம் ரொம்பப் பிடித்துவிட்டது.


படிப்பகம்

# அருகில் வந்தால்



"எந்த நாடும்
என் வீரம் முன்னால்
வெந்து போகும்!

எந்தப் படையும்
எம் படை கண்டால்
பொந்துக்குள் ஒளியும்!

நாற்படையும்
புயற்படை!

எத் திசையும்
எம் கொடி!

பக்கத்து நாடு
வெட்கத்தை விட்டு
பணிந்து வாழ்ந்தால்
படையெடுக்கோம்!

மானம் பார்த்து
எம் முன்பாக
மண்டியிட மறுத்தால்
படையெடுப்போம்!"

ஆரிய மன்னன்
அரச சபையில்
ஆர்ப்பரித்தான்!

தலையாட்டியே
பழக்கப்பட்ட
அமைச்சரவையும்
வழக்கம்போல
ஆமோதித்தது!

சம்பிரதாயத்துக்காக
தூது அனுப்பினான்
சோழ மன்னனிடம்!

"எங்கள் மன்னர்
பேசுவதற்கு தயார்!
கப்பம் கொடுக்கவும்
கைகட்டி நிற்கவும்
நீர் சம்மதிப்பதாக
ஊர் அறியக்
கூறவேண்டும்!"

சோழனின்
இரத்தம் கொதித்தது!

உருக்கான கைகள்
உடைவாள் பற்ற
துரு துருத்தன!

உள்ளே கோபம்
அடக்கி,
குரலில் சாந்தம்
பூசிக்கொண்டு,
சோழன் பேசினான்;

"தூதா!
யுத்தம் வேண்டாம்!

என் சித்தத்தில்
பகை இல்லை!

சமமான நாடுகளாக
சமாதானமாக
இருந்து கொள்வோம்!"

"இதுதான் முடிவா
எம் மன்னரின் முடிக்கு
சம முடி உமதா?
சமர்தான் வெடிக்கும்
அமரராவீர் நீரும்!"

தூதன் துடுக்காக
பேசியும்,
சோழன் அடக்கமாக
இருக்கிறானே,
சபை சலசலத்தது!

கையுயர்த்தி
சபை அடக்கினான்!
தூதனை விளித்தான்,
"தூதா!
உன் மன்னன்
வீரன்தான்!- ஆனால்
நாங்களும்
கோழைகளல்ல"

நாகரிகமாக கூறினான்
நாவடக்கம் தெரிந்தவன்.

தூதன் துள்ளினான்;
"யார் வீரர்கள்
எவர் கோழைகள்
என்பதை அறிய
போர்முகம் காணலாம்!
தயாராக இரும்
தலை குனிவுக்கு!"

தூதன் துடுக்குடன்
தாவிப் போய்விட்டான்!

"ஏன் மன்னா
தயக்கம்?
நம்மவர் எழுந்தால்
பகை பறக்கும்!"
என்றார் தளபதி!

சோழன் யோசித்தான்,
அவன் சந்திர வதனத்தில்
சிந்தனை ரேகைகள்.

"நாம் தூதுவிட்டு
ஆரிய மன்னனை
அமைதிப்படுத்தலாமா?"
என்று கேட்டான்.

தூதன் பறந்தான்
சோழனின் செய்தியோடு.

போருக்கு முன்னர்
மதுவில் குளித்து
மங்கையில் மிதந்து
தன் தேகத்திற்கு
தீனி போட்டுக்கொண்டிருந்தான்
ஆரிய மன்னன்:

"வெட்கத்தில்
விழிகள் சிவக்கும்,
அவை பக்கத்திலுள்ள
இதழ்களின் சிவப்பை
ஜெயிக்கத் துடிக்கும்!

பக்கத்தில் வாடி
மயிலே,
சொர்க்கத்தை தாடி
ஒயிலே!

சிந்திடும் தேனை
பருகி- இரத்தம்
சிந்திடும் போரில்
வெல்ல,
சுந்தரி தேனை
ஊட்டு!

அந்தப் புரத்தில்
தன் நாற்பதாவது
ராணியின்
சுந்தர அழகில்
சொக்கிக் கிடந்தான்!

கதவைத் தட்டிய
பணியாளன்,
சோழனின் தூதன்
வந்ததைச் சொன்னான்!

"தூதனை திருப்பி
அனுப்பு!
மரண தூதனாக
நானே வருகிறேனாம்
என்று கூறு!"

மதர்ப்புடன் கூறிய
ஆரிய மன்னன்
கதவடைத்துவிட்டு
நாற்பதாவது ராணியுடன்,
மஞ்சத்தில்
தோற்பதா? வெல்வதா
என்று தீர்மானிக்க முடியாத
போரில் குதித்தான்.

மறுநாள்
படையெடுப்பு!

"ஒரே நாளில்
கோட்டையின்
உள்ளே புகுவோம்!"
என்று இறுமார்ந்தான்!

ஒரு மாதமாகியும்
ஓயாத போர்!

சோழனின் பணிவை
தோல்வியின் அறிகுறி
என்று நினைத்தது
தவறு என்பதை
களம் போதித்தது!

ஆரியப் படைகள்
வீரியம் இழந்தன!

திரும்பலாம் என்று
நினைத்தபோதுதான்
திடுக்கிட்டனர்.

சோழப் படைகளின்
முற்றுகைக்குள்
எப்போதோ விழுந்துவிட்டது

அப்போதுதான் புரிந்தது!

இறுதிச் சமர்
உறுதியாக நடந்தது!
குருதிச் சமர்
என்றும் கூறலாம்!

ஆரியப் படைகளுக்கு
பாரிய அழிவு!

ஆள வந்தவர்கள்
தோல்விப் பள்ளத்தாக்கில்
தாள் பணிந்தனர்!

ஆரிய மன்னன்
சிறிய குருதியுடன்
சாவில் ஊறினான்!

சோழர் படை
வெற்றிக் களிப்பில்
தோள்கள் பொங்கிட
களத்தில் ஆடியது!

அரச சபையை
கூட்டிய மன்னன்,
வெற்றிச் செய்தியை
வெளிப்படுத்தினான்!

"நீதி வென்றது
நியாயம் வென்றது!"

அறிவித்த மன்னனை
இடை மறித்தார்
பெரும் புலவர்;

"வெல்வாய் என்பது
தெரியும் மன்னா,
பின்னர் ஏன்
உன்வாய்
அமைதி காத்தது!
தூதனின் வெறும் வாய்
கொட்டிய திமிர்
பொறுத்தது?"

மன்னன் முறுவலித்தான்;
"ஆபத்து எட்டத்தில்
இருக்கையில் அதனை
கிட்டத்தில் அழைப்பானேன்
என்று நினைத்தேன்.
அதுவாக தேடி
அருகில் வந்தபின்னர்
தாமதியாமல் தடுத்து
நிறுத்தினேன்!
அனுமதியாமல் அடித்து
நொறுக்கினேன்!"

புலவர் வியப்புடன்
கூறினார்:
"கீதையிலும் இதுதானே
போதனையாக இருக்கிறது!"

"தூரத்தில் இருக்கும்போது
ஆபத்துக்கு அஞ்சுவதும்,
ஆபத்து அருகில் வந்துவிட்டால்
வீரத்துடன் போரில் குதிப்பதும்
பெரியோர் இயல்பு"

-கீதோபதேசம்.

தருவது ராஜிகன்

இலக்கிய நயம்

## சிந்தியா பதில்கள்

**★ ஏடாகூடமாகப் பேசுவது என்றால் என்ன?**
வி.மஞ்சுளா, மல்லிகைத்தீவு.

பிரமச்சாரி ஒருவர் தங்கியிருந்த வீட்டில் வீட்டு உதவியாளராக பெண் ஒருத்தி இருந்தார்.

"ஐயா! உங்கள் புத்தகம், மணிக்கூடு எல்லாவற்றையும் எடுங்கள். நான் சுத்தம் செய்ய வேண்டும்!" என்று கூறினாள்.

அதற்கு பிரமச்சாரி: "இங்கே பார் அம்மா, உன்னுடையது, என்னுடையது என்று பிரித்துப்பேசாதே. நம்முடையது என்று பொதுவாகக் கூறிப் பழகு!" என்றார்.

அன்று மாலையில் அந்தப் பிரமச்சாரி திருமணம் செய்யப்போகும் பெண் வந்திருந்தார். தேநீர் கொண்டுவருமாறு பெண் உதவியாளரிடம் கூறினாள்.

நீண்ட நேரத்தின் பின்னரே தேநீரோடு வந்தாள் உதவியாளர்.

"ஏன் இத்தனை நேரம்?" என்று கேட்டார் பிரமச்சாரி.

அதற்கு உதவிப்பெண் கூறினாள்:

"நம்முடைய படுக்கையறையை சுத்தம் செய்தேன்!"

○●

**★ டியர் சிந்தியா! ரஜினி, கமல், விஜய்... இந்தப் பட்டியலில் அடுத்திருப்பது யார்?**
எம்.தன்ராஜ், பதுளை.

சரத்குமார், முரளி.

○●

**★ எப்படித்தான் சொன்னாலும் சில தீய பழக்கவழக்கங்களை கைவிட மறுப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**
இ.கொலின்ஸ், நீர்கொழும்பு.

சும்மாவா சொன்னார்கள்–'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்று.

கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக ஒரு பாதிரியார் ஆபிரிக்கா சென்றார். வழி தவறிய மனிதர்களைத் தின்னும் காட்டுவாசிகளிடம் சிக்கிக் கொண்டார்.

அவரை இழுத்துப்போய் தலைவன் முன் நிறுத்தினார்கள்.

தலைவன் ஆங்கிலத்தில் பேசி பாதிரியாரை விசாரிக்க, "நீ எப்படி ஆங்கிலம் கற்றுக் கொண்டாய்?" என்று பாதிரியார் கேட்டார்.

அதற்கு தலைவன் "நாங்கள் இப்போது மிகவும் மாறிவிட்டோம். சிறுவயதில் ஈடன் பள்ளியில் படித்தேன். பின்னர் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் படித்தேன்!" என்று கூறினான்.

பாதிரியாருக்கு ஆச்சரியம். "அப்படியானால் உங்கள் நாகரிகம்– பழக்க வழக்கமெல்லாம் மாறியிருக்கும் அல்லவா?" என்று கேட்டார்.

அதற்கு தலைவன் சிரித்தபடி கூறினான்:

"ஆமாம், நான் இப்போது எல்லாம் ஸ்பூன், ஃபோர்க் முதலியவற்றைப் பயன்படுத்தித்தான் சாப்பிடுகிறேன். உங்களையும் அப்படித்தான் சாப்பிடுவோம்!"

○●

**★ பி.பி.சி தமிழோசையில் பெண்கள் தொடர்பான நிகழ்ச்சி கேட்டீரா? உமது அபிப்பிராயம் என்ன?**
செல்வி எஸ்.கல்யாணி, மட்டக்களப்பு.

தரமான நிகழ்ச்சி! ஆனந்தியை நிச்சயம் பாராட்டலாம்!

○●

**★ கஸ்தூரி கவர்ச்சிக்கு தாவியது ஏன்?**
பி.நிசாம், கல்முனை.

வரவுக்காக!

○●

**★ சிந்தியா! கடன் வாங்கிவிட்டு ஏமாற்ற நினைப்பவர்களை என்ன செய்யலாம்?**
ஆர்.இஸ்மாயில், புத்தளம்.

ஆளை அறியாமல் கடன் கொடுத்த குற்றத்திற்கு உங்களை நீங்களே நொந்து கொள்ள வேண்டியதுதான்! கடன் கொடுத்தவர் ஏமாளியாக இருந்தால், வாங்கியவருக்கு கொண்டாட்டம்தான்.

17ம் நூற்றாண்டில் ஸ்கொட்லாந்தில் ஜேம்ஸ் என்பவர் மன்னராக இருந்தார். ஜோர்ஜ் ஹெரியட் என்பவர் அரச பொற்கொல்லராக இருந்தார்.

அரசருக்கே கடன் கொடுக்குமளவுக்கு வசதி படைத்திருந்தார். ஒரு முறை அரண்மனையில் அரசருடன் ஜோர்ஜ் பேசிக் கொண்டிருந்தார். எதிரே குளிரைப் போக்க தீ மூட்டப்பட்டிருந்தது. தீயில் சந்தன மரத்துண்டுகள் போடப்பட்டிருந்தன

அந்த வாசனையை அனுபவித்த படி "ஆஹா அற்புதமான மணம்!" என்று ஜோர்ஜ் கூறினார்.

"மிக விலை உயர்ந்தவற்றைத்தான் நாம் தீமூட்டக்கூட பயன்படுத்துவோம்!" என்றார் அரசர் கம்பீரமாக,

அதற்கு ஜோர்ஜ், "என் வீட்டில் இதைவிட விலை உயர்ந்த பொருளை தீமூட்டுவேன். வந்து பாருங்கள்," என்று தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

உள்ளேபோன ஜோர்ஜ் ஒரு காகிதத்துடன் திரும்பி வந்தார். அதை அரசரிடம் காண்பித்து, "இது நீங்கள் என்னிடம் 2 கோடி ரூபாய் கடன் பெற்ற பத்திரம்," என்றபடி அதை தீயில் போட்டார்.

அரசர் அதிர்ச்சியுடன் நிற்க, ஜோர்ஜ் கூறினார்: "யாருடையது விலை உயர்ந்தது என்று இப்போது சொல்லுங்கள்!" என்றார் பெருமையாக.

ஜோர்ஜ் மாதிரியான கடன் கொடுப்போர் இருப்பதாகத் தெரிந்தால் எனக்கும் தகவல் தாருங்கள்!

**★ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்த பிரிட்டிஷ் எம்.பியை இலங்கை அரசு பகிஷ்கரித்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளதே?**
வி. ஆறுமுகம், கொழும்பு-06.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றாலே இலங்கை அரசுக்கு இப்படி ஏன் சுள்ளென்று கோபம் வருகிறது? அந்த எம்.பியை அமைச்சர்கள் சந்திக்கவே மாட்டார்கள் என்று கூறுமளவுக்கு வெறுப்புக் காட்டுவானேன்? ஜே.ஆர். அன்று பிரிட்டிஷ் எம்.பிகளிடம் "உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்!" என்றார். இன்று சந்திரிக்கா அரசும் அதனைக் கூறாமல் கூறிவிட்டது! காட்சி அதே! ஆட்சிதான் வேறு!

○●

**★ சிந்தியா! இந்தியா மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகிக்க முடியாது என்று கூறியுள்ளதாமே?**
ஜெ.கணேசரத்னம், கொழும்பு-10.

எப்போதோ கூறிய விடயம்தானே. அதனை ஜனாதிபதியின் விஜயத்தின் பயன் போலவும், புதிதாகக் கூறப்பட்டது போன்றும் செய்திகள் போட்டுள்ளனர்! பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மிகத் தெளிவாகக் கூறியது இதுதான்: "இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது. மத்தியஸ்தம் செய்ய முன்வரும் நாடுகளுக்கு துறுக்கேயும் நிற்காது."

காஷ்மீரில் மத்தியஸ்தத்தை மறுத்துள்ள இந்தியா, இங்கு தன் வாயால் மத்தியஸ்தத்தை ஆதரிப்பது சங்கடம். இந்திய அரசியல் சூழலும் அதற்கு இடமளியாது. இதுவெல்லாம் தெரிந்ததுதானே!

○●

**★ இந்திய கராத்தேவீரர் ஹுசைனியை புலிகளுக்கு உதவியதாக கைதுசெய்தனர் என்று செய்திகளில் படித்தோம். அவர் இலங்கைத் தமிழராமே! உண்மையா?**
எஸ்.கஜேந்திரன், மட்டக்களப்பு.

அவர் இலங்கைத் தமிழரும் அல்ல; அவர் போலி கடவுச் சீட்டில் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்ல முற்பட்டவர்கள் புலிகளுமல்ல. வெளிநாட்டு முகவராக செயற்பட்ட அவர் தற்செயலாக மாட்டிக்கொண்டார்! அவர்மீது விரோதம் உள்ளவர்கள் புலி முத்திரை குத்திவிட்டார்கள்!

○●

**★ சிந்தியா! ஆக்ஷன்கிங் அர்ஜுனின் 'மன்னவரு சின்னவரு' எப்போது வெளிவருகிறது?**
ஏ.வஜிதா, கொழும்பு-13.

சித்திரைப் புத்தாண்டுக்கு முன் என்கிறார்கள்.

○●



'காதல் கவிதை' படத்தில் பிரசாந்த்-கஸ்தூரி

**★ ரஷ்யா மறுபடியும் எழத் தொடங்கியுள்ளதே?**
கே.மகேந்திரன், அம்பாறை.

அது தவிர்க்க முடியாதது! அமெரிக்காவின் சண்டித்தனம் அதற்குரிய எதிர்முனைமை உருவாக்கியே தீரும். எந்தத் தாக்கத்துக்கும் மறுதாக்கம் இருந்தே தீரும். இது இயக்கவியல் விதி!

○●



'மன்னவரு சின்னவரு' படத்தில் அர்ஜுன்-மகேஸ்வரி

ஸ்போர்ட்ஸ்

## "மன்னிக்கவேண்டுகிறோம்!"



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான ஷேன் வோன், மார்க் வோவ் ஆகிய இருவரும் சூதாட்டக் காரர்களிடம் பணம் வாங்கியதை ஒப்புக் கொண்டு, அதற்காக மன்னிப்புக்கேட்டு அபராதம் கட்டியது தெரிந்ததே.

இந்த இலஞ்ச விவகாரம் பற்றி அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டது. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் போன்றவற்றில் இது கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இதன் காரணமாக ஷேன்வோன் ஏற்கனவே 'நைக் ஷூ' நிறுவனத்துடன் செய்து கொண்ட விளம்பர ஒப்பந்தம், நிறுத்தப் பட்டுவிடுமோ என்று பயந்திருக்கக்கூடும். ஆனால் ஷேன் வோனுக்கு பணத்தை வாரி வழங்கும் 'நைக் ஷூ' நிறுவனம் "அவரை எமது வர்த்தக வளர்ச்சிக்குத் தொடர்ந்து பயன்படுத்துவோம்!" என்று அறிவித்துள்ளது.

## இங்கும் இலஞ்சம்

## அவுஸ்திரேலிய வீரர் புகார்

"கடந்த 1992ம் ஆண்டு அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, சூதாட்ட முகவர்களுக்கு உதவி செய்த ஒரு கிரிக்கெட் வீரரை அடையாளம் காட்டுவேன்!" என்று அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் டீன் ஜோன்ஸ் கூறியுள்ளார்.

இதுபற்றி டீன் ஜோன்ஸ் மேலும் கூறும்போது,

"அவுஸ்திரேலியர்களுக்கு 50 ஆயிரம் டொலர்களை ஒரு சூதாட்ட முகவர் வழங்க முன்வந்தார். அதற்காக ஆடுகளத்தின் தன்மை, அணியில் செய்யப்படும் மாற்றங்கள் ஆகிய விபரங்களைக் கேட்டார். அப்போது அந்த முகவருக்கு ஒரு சர்வதேச கிரிக்கெட் வீரர் உதவி செய்தார்.

அவர் அவுஸ்திரேலியாவையோ அல்லது இலங்கையையோ சேர்ந்தவர் அல்ல. என்னிடம் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை விசாரணை நடத்தும்போது, அந்த வீரர் யார் என்பதை நான் தெரிவிப்பேன்.

இந்த இரகசியத்தை வெளியிட நான் தயங்கவும் மாட்டேன். என்னிடம் எந்த ஒளிவு மறைவும் இல்லை"

என்று அவர் தெரிவித்தார். ●

## ஒத்திவைப்பு

**இவர்தான் அவர்**



ஜெயலலிதா

டாக்காவில் 1999ம் ஆண்டு மார்ச் 20ம் திகதி தொடக்கம் ஏப்ரல் 3ம் திகதி வரை நடைபெறுவதாக இருந்த எட்டாவது ஆசியக் கோப்பை ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் 2000ம் ஆண்டிற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் டாக்காவில் 2000ம் ஆண்டு ஏப்ரல் 25ம் திகதி தொடக்கம் மே 20ம் திகதி வரை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் டெல்லியில் நடந்த ஆசிய கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எட்டாவது ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகள் கலந்து கொள்கின்றன. ●

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 42

## பிளவுபட்ட பேரரசு

ஆண்டவர் மன்னர் சாலமோனுக்கு இருதடவைகள் காட்சி தந்துள்ளார். தான் அளித்துள்ள கட்டளை களனைத்தையும் கடைப்பிடித்து இஸ்ரயேல் மக்களை தக்க வழியில் நடத்திச் செல்லுமாறு பணித்திருந்தார். ஆனால் அரசர் சில தகாத உறவுகளில் கவனம் செலுத்தினார். இஸ்ர யேல் மக்கள் தனியானதொரு ஒப்பற்ற சமு தாயமாக விளங்க வேண்டும் என்று கடவுள் கருதினார். அத்தகைய சமுதாயத்தை வழி நடத்திச் செல்வதற்காக ஆண்டவராலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசர் தன் கடமை களை மறந்து அந்நியப் பெண்களை மோகித் தார். அவ்வழகிகளே தஞ்சம் என்ற நிலைக் குள்ளானார்.

பிறபோலித் தெய்வங்களை வழிபட லாகாது என்பது ஆண்டவரின் கட்டளை களுள் ஒன்று. ஆனால் அழகிகள் மீது மோகங்கொண்ட மன்னர், அவ்வழகிகளின் வழிபாட்டு முறைகளை அனுசரிக்கலானார். இதனால் ஆண்டவரின் கோபத்துக்கு மன்னர் சாலமோன் ஆளானார்.

"எனது கட்டளைகளை நீர் கடைப்பிடிக் கத் தவறியமையினால், அதற்குத் தண்டனை யாக உம்முடைய வாரிசுகள் இஸ்ரயேல் சமுதாயத்தை முழுமையாக ஆட்சி செய்ய



அனுமதிக்க மாட்டேன். எனினும் தாவீதின் மகனான உமக்கு மிகக் குறுகிய ஒரு பிரி வினை மட்டும் ஆட்சி செலுத்த விட்டு வைப்பேன். ஏனைய பிரதேசங்களில் உம் முடைய மேலாதிக்கம் இனிமேல் நிலைத் திருக்கப்போவதில்லை!"

இவ்வாறு ஆண்டவர் சாலமோன் மன்ன ருக்குத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து சாலமோன் மன்னருக்கு எதிரிகளாகப் பலரை இறைவன் பல பகுதிகளிலிருந்தும் எழச் செய்தார். இவர்களுள் ஒருவன் எரோபவாம் என்பவன். சாலமோன் மன்னர் தனது தந்தை யாரான தாவீது கட்டிய தாவீது நகரின் இடிபாடுகளைத் திருத்தும் பணிகளுக்குப் பொறுப்பாக எரோபவாம் மன்னரால் நிய மிக்கப்பட்டான். இவன் செயலாற்றல் மிக்க ஓர் இளைஞன்.

### ஆண்டவரின் வாக்குறுதி

எரோபவாம் ஒருநாள் எருசலேமி லிருந்து புறப்பட்டு வெளியே சென்றபோது அகியா என்ற இறைவாக்கினரைச் சந்தித் தார். அவர் தன்னிடமிருந்த புதுச் சால் வையை பன்னிரண்டு துண்டுகளாகக் கிழித் தார். அத்துண்டுகளில் பத்துத் துண்டுகளை எரோபவாமிடம் கொடுத்தார். இஸ்ரயேலின் ஆண்டவரின் விருப்பம் எத்தகையது என் பதையும் அகியா கூறினார்.

"சாலமோனின் பரிபாலனத்தின் கீழுள்ள பத்துப் பகுதிகளை ஆட்சி செய்யும் உரி மையை எரோபவாமிடம் ஒப்படைக்கப் போகிறேன். எருசலேம் மட்டும் சால மோனின் வாரிசுக்காக விட்டு வைக்கப் போகிறேன். தாவீதின் குலத்தை இழிவு படுத்த நான் விரும்பவில்லை. சாலமோன் கட்டிய ஆலயம் அம்மன்னரின் வாரிசுகளால் பரிபாலிக்கப்படும்.

எம்மால் வழங்கப்பட்ட நீதிநெறிமுறை களைக் கடைப்பிடிக்காமல் தான்தோன்றித் தனமாக சாலமோன் நடந்து கொண்டமை யினால் நாம் வழங்கும் தண்டனை இது வாகும்!" என்றவாறு ஆண்டவரின் அருள் வாக்கு, அவருடைய இறைதூதரால் வெளி யிடப்பட்டது.

ஏரோபவாமுக்கு ஆண்டவரின் உறுதி மொழி பற்றி சாலமோன் மன்னருக்கு தகவல் எட்டியது. எப்படியாவது எரோபவாமை ஒழித் துக் கட்டிவிட வேண்டுமென்று மன்னர் திட்டமிட்டார். தன்னைத் தீர்த்துக்கட்டு வதற்கு மன்னர் திட்டமிடுகிறார் என்பதை அறிந்த எரோபவாம் எகிப்து நாட்டுக்குத் தப்பி ஓடினார். அப்போது எகிப்தின் அரச ராகவிருந்த கீசாக்கிடம் தஞ்சம் புகுந்தார். சாலமோன் காலமாகும்வரை எகிப்திலேயே இருந்தார்.

இஸ்ரயேல் மக்கள் குடியேறி வாழ்ந்த அனைத்துப் பிரதேசங்களையும் ஒரேகுடை

## இராஜகுமாரன்

யின் கீழ் பரிபாலனம் செய்த மன்னர் சாலமோன் முதியவராகி மரணமடைந்தார். மொத்தம் நாற்பதாண்டு காலம் இஸ்ரயேல் மீது சாலமோன் மன்னர் ஆட்சி செலுத்தி னார். அவருடைய சடலம் தாவீது நகரில் அடக்கம் செய்யப்பட்டது.

### சாலமோனைத் தொடர்ந்து....

தாவீது மன்னர், இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்துக்கும் யூதாமக்களுக்குமான ஒரே அரசராகினார். அவருடைய மகனான சால மோன் மன்னரும் இரு பெரும் சமுதாயங் களையும் ஒன்றாகவே ஆட்சி புரிந்தார். ஆனால் மன்னர் சாலமோன் ஆண்டவருக்கு அடுக்காத நடவடிக்கைகளிலீடுபட்டமை யினால், அவரைத் தொடர்ந்து அரியணை ஏறியவர்களால் இரு தரப்பினரையும் ஒன்றி ணைத்து ஒற்றுமையாக வாழ வைக்க முடிய வில்லை. யூதாவுக்கு ஓர் அரசனும், இஸ்ரயேல் மக்களுக்கு மற்றோர் அரசனுமாக ஆட்சி புரிந்தனர். இரு இனத்தாருக்கும் எப்போதும் போர் நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

சாலமோன் மன்னர் மரணமடைந்ததை அடுத்து செக்கேம் நகரில் ஒன்று கூடிய இஸ்ரயேல் சமுதாயப் பிரமுகர்கள், தங்கள் அரசராக, சாலமோன் மன்னரின் ஒரு மகனானரெகபயாம் என்பவரைத் தேர்ந் தெடுத்தனர். இதனை அறிந்த எரோபவாம் எகிப்திலிருந்து வந்து சேர்ந்தார். இஸ்ரயேல் மக்கள் தலைவர்களுடன் சேர்ந்து அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரெகபயாமிடம் சென் றார். மக்கள் தலைவர்கள் பலர், மன்னர் சாலமோன், தங்கள்மீது கடுமையான சுமையை ஏற்றி வைத்ததையிட்டு ரெகபயா மிடம் தெரிவித்து தங்கள் துன்பங்களைத் தீர்த்து வைக்குமாறு வேண்டிக் கொண்டனர்.

ரெகபயாம், மக்கள் கோரிக்கைக்கு உடனடியாக பதிலளிக்கவில்லை. மூன்று நாட்களின் பின்னர் வருமாறு அவர்களிடம் கூறினான். சாலமோன் மன்னரின் அரசியல் சமுதாய ஆலோசகர்கள் கூறிய அறிவுரை களைச் செவிமடுக்காமல் போதிய அனுப வமற்ற தனது தோழர்களுடைய அறிவுரை யைக் கேட்டான். மூன்று நாட்களின் பின்னர் தன்னிடம் வந்த இஸ்ரயேல் சமுதாயத்தலை வர்களிடம் இவ்வாறு கூறினான்.

"எனது தந்தை உங்கள் மீது பெரும் பளுவை ஏற்றியதாகக் குற்றஞ் சாட்டினீர்கள். நானோ உங்கள் மீது சுமைகளை பல மடங்கு அதிகரிக்க வைக்கப்போகிறேன். அதுமட்டு மல்ல, சாலமோன் மன்னர் வெறும் சாட்டை யால் உங்களை அடித்திருப்பார். நான் உங் களை முள் பதித்த சாட்டையால் அடிப்பேன்!"

துன்பங்களிலிருந்து மீட்சி பெற வந்த மக்களுக்கு ரெகபயாம் அளித்த பதில் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. இஸ்ரயேல் மன்னரும் மக்கள் சமுதாயமும் ஆண்டவரின் விருப் பத்துக்கு மாறாக நடக்கத் தலைப்பட்டமை யினால், மன்னவனாக அரியணையில் அமரும் அரச குமாரனின் மனத்தை மாசடையச் செய்வதன் மூலம் ஆண்டவர் தண்டனை வழங்கினார்.

வெறுப்புற்ற மக்கள் யூதாவை விட்டகன்ற னர். இஸ்ரயேல் சமுதாயத்தின் மன்னராக எரோபவாமைத் தேர்ந்தெடுத்தனர். இத னைத் தொடர்ந்து இரு இனத்தவர்களுக்கும் தனித்தனி ஆட்சி பீடங்கள் ஏற்படுத்தப்பட்டு காலத்துக்குக்காலம் வெவ்வேறு மன்னர்கள் ஆட்சி பீடமேறி வந்தனர். ஒரு நாட்டின் மீது மற்ற நாடு போர் தொடுத்தலும் தொடர்ந்தது. மக்கள் பெருவாரியாக மாண்டு மடிந்தனர்.

### யூதாவும் இஸ்ரயேலும்

ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகள் வரை இஸ்ரயேலரும் யூதாமக்களும் போட்டி அரசுகளை நடத்தி வந்தனர். மக்கள் சமுதாயம் ஒரு நிலையான நெறிமுறையைப் பின்பற்ற முடியாமல் சீரழிந்தனர்.

தாவீது மன்னர் கி.மு. 1,000மாம் ஆண்டு முதல் 962ம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தார். 962ல் ஆட்சி பீடமேறிய சாலமோன் மன்னர் 932ம் ஆண்டுவரை 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இதன் பின்னர் 687ம் ஆண்டு வரையிலான 245 ஆண்டுகளில் இஸ்ரயேல் மக்களை மொத்தம் பதினெட்டு அரசர்கள் ஆண்டு வந்தனர்.

இதே கால கட்டத்தில் யூதா மக்களை கி.பி. 597ம் ஆண்டுவரையிலான 325 ஆண்டு களில் இருபது அரசர்கள் ஆண்டு வந்தனர்.

இவ்வாறு ஆட்சி புரிந்த அரசர்கள் பற்றி விரிவாக எடுத்துரைப்பதில் பெரிதும் காலதாமதமாகலாம். தவிர அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் குறிப்பிடத்தக்க வரலாறு கள் இல்லை. ஆகவே, உலகனைத்தையும் இரட்சிக்க வந்த ராஜாதிராஜாவான தேவ குமாரன் இயேசு கிறிஸ்து பெருமானின் புனித வரலாற்றைத் தொடங்குவதற்கு முன்பாக- கிறிஸ்துவுக்கு முன் 869 ஆண்டில் இஸ்ரயேல் மீது ஆட்சி செலுத்திய ஆகாபு மன்னர் காலத்தில் தோன்றிய 'தீயின் தீர்க்கதரிசி' என வர்ணிக்கப்பட்ட எலியா பற்றியும், யூதா மன்னராக கி.மு. 640ல் முடிசூடிய யோசியா மன்னர் காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசி எரேமியா பற்றியும் உள்ள கதைகளைப் பகிர்ந்து கொள்ளுவோம்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 40 விடை** ☛ அதோனியா.

**பரிசு பெறுவோர்:**

1. **எஸ்.சதானந்தராஜா சாலினி,** பிட்ராத்மலை, கீழ்பிரிவு, அப்புத்தளை.
2. **ஐ.எஸ். பிரியா,** பதுளை வீதி, கித்துள், செங்கலடி.
3. **எஸ். சுபா,** 50/2 மத்தியவீதி, உவர்மலை, திருகோணமலை.
4. **ஏ.ஆர்.குல் ஸனோபர்,** 462, ஓடாவியார் வீதி, ஏறாவூர்-02.
5. **டொ. ஜீவகன்,** 12 சென் அன்ரனிஸ் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.

**திருமறை 42 வினா:-** எவருடைய ஆட்சியின் போது யூதாவும் இஸ்ரயேலும் பிரிந்தன?

ஜன. 09க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 42—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

**குறிப்பு:** 'கிறிஸ்துவுக்குமுன்' உள்ள ஆண்டுகள் கணக்கிடும்போது பின்னோக்கித்தான் கணக்கிடப்படும் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : மூன்றாம் தரப்பு அனுசரணையாளர். |
| தொழில் | : கைகுலுக்க உதவுதல். |
| உபதொழில் | : கடிதப் பரிமாற்றம் |
| பொழுதுபோக்கு | : பேச்சுக்கள் நடைபெறும்போது ஓரமாய் ஒதுங்கி நின்று கடலை கொறிப்பது! |
| ஒரே சாதனை | : ஐரிஸ் பிரச்சனையில் உதவியது. |
| வேதனை | : பல நாடுகளில் தோல்வி கண்டது! |
| எரிச்சல் | : சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இடையே ஓடி ஓடி ஓய்ந்து போவது! |
| பலவீனம் | : யாரையுமே அழுத்தி அமர்த்த முடியாமை! |
| ஒரே இலட்சியம் | : தொழிலையே கைவிடுவது! |

## புதிர் பொன்ராசா



அவரது பெயரை தமிழில் எழுதினால் எட்டெழுத்து வருகிறது. அவர் ஓங்கி அடிக்கும் பந்து எட்ட முடியா மல் எழுந்து சிக்ஸருக்கு பறக்கிறது. அவருக்கு சமீபத்தில் தான் மங்கள காரியம் நடந்தேறியது. விரைவில் விவாகரத்து நடக்கப்போகிறது. விமானத்தில் பணியாற்றிய காலத்தி லேயே இருந்த 'நட்பு' திருமணத்தின் பின்னரும் தொடர்ந்ததை கையும் மெய்யுமாக வீரர் கண்டதால்தான் பிரிவு நிச்சய மானது என்று சிங்களப் பத்திரிகை ஒன்றும் செப்பியுள்ளது. யார் அவர் என்று நான் பெயர் சொல்ல மாட்டேன். கண்டுபிடி, கண்டுபிடி.

## ஹலோ கிளின்ரன்

**சதாம்:** ஹலோ யார் அங்கே, கிளின்ரனா? நான்தான் சதாம் பேசுகிறேன்.

**கிளி:** நான் கேட்பதென்ன குரலா? இடியா? எங்கிருந்து பேசுகிறீர்?

**சதாம்:** இடத்தைச் சொன்னால் ஏவுகணை அனுப்பலாம் என்று திட்டமா? ஆயுத சோதனை என்ற பெயரில், தாக்குதலுக் குரிய இலக்குகளை மோப்பம் பிடித்த மோசக்காரர்கள் நீங்கள்.

**கிளி:** சதாம் நீர் புத்திசாலி. உமது வீட்டையும் சோதனையிட விட்டி ருந்தால், உமது படுக் கையறைக்கு மேலேயே துல்லியமாக குண்டு போட்டிருப்போம்.



**சதாம்:** ஐ.நா.சபை ஆய் வாளர் என்ற பெயரில் சி.ஐ.ஏ. உளவாளியை அனுப்பிவைத்திருக்கிறீர்.

**கிளி:** அது எமது சாமர்த் தியம்! முடிந்தால் நீரும் அந்தப் பட்லரை விலைக்கு வாங்கியிருக்க லாம்! என்ன வளம் உம்மிடம் இல்லாவிட் டாலும் எண்ணெய் வளம் உள்ள தல்லவா உமது நாட்டில்!

**சதாம்:** அந்த வளமும்,எமது பலமும் கண்டு தானே நீரும், உமது நாடும் அஞ்சு கின்றன!

**கிளி:** இந்த உலகில் எம்மைத்தவிர எவரும் எழவிடமாட்டோம். எம்மைத் தொழ சம்மதித்தால் மட்டும் உதவி செய்வோம்.

**சதாம்:** அப்பனே கிளின்ரன், உமது பாச்சா மோனிகாவிடமே பலிக்கவில்லை. எங் களிடமா பலிக்கும்?

**கிளி:** குண்டு பொழிந்துமா உமது ஆணவம் அழியவில்லல?

**சதாம்:** இது ஆணவமல்ல, தன்மானம்! உயிர் போகும்வரை ஒரு துளியும் குறை யாது!

**கிளி:** ஈராக்கையே அழித்துவிடுவோம். என்ன செய்வீர்கள்?

**சதாம்:** அதேகதி அமெரிக்காவுக்கும் ஏற்படும்! இங்கு நீர் போடும் குண்டுகள் ஒன்றுக்கு இரண்டாக உமது காலடியிலேயே வெடிக்கும்! உமக்கு உதவவரும் நாடு களிலும் குண்டுகள் வெடிக்கும்!

**கிளி:** வீண் பிடிவாதம் வேண்டாம்!

**சதாம்:** அடிமடியிலேயே கைவைக்கிறீர், தடுத்து நிறுத்தினால் பிடிவாதம் என்கிறீர்!

**கிளி:** அணு ஆயுதங்களை அழிக்க உடன் படும், உம்மை மன்னிக்கலாம்!

**சதாம்:** முட்டாள்! என்னை மன்னிக்க நீர் யார்? அந்த ஆண்டவனைத் தவிர வேறு யாரிடமும் நான் மண்டியிட்ட துமில்லை! மன்னிப்பு கேட்டதுமில்லை!

**கிளி:** உங்கள் நாட்டில் ஒளிவு மறைவுகள் நிறைய உண்டு! உண்மை பேசினால் உபத்திரவம் வராது!

**சதாம்:** நீதிமன்றத்தையே ஏமாற்ற முனைந்த கில்லாடி கிளின்ரனே! முதலில் நீர் உண்மை பேசக் கற்றுக் கொள்ளும். பின்னர் உலகைத் திருத்தலாம்.

**கிளி:** இதைச் சொல்லவா ஃபோன் செய்தீர்?

**சதாம்:** நன்றி சொல்லத்தான் ஃபோன் செய்தேன்?

**கிளி:** நன்றியா, எதற்கு?

**சதாம்:** உலக அனுதாபத்தை எமக்காக பெற்றுத் தந்ததுக்கு நன்றி! உமது சுய ரூபத்தை உலகுக்கு காட்டியதற்கு நன்றி! மறுபடி யும் உமது நாட்டுக்கு எதிராக உலக நாடுகளை உஷார்படுத் தியதற்கு நன்றி! புனித ரம்ழான் மாதத்தில் குண்டு பொழிந்து எங்கள் மதத்தின ரால் மன்னிக்க முடியாத குற்றவாளியாக உம்மை இனம் காட்டியதற்கு நன்றி!

**கிளி:** அரபு நாடுகள் சிலகூட எம்மோடு உறவு வைத்துள் ளன சதாம்.

**சதாம்:** எந்த இனத்திலும் இப்படியான துரதிஷ்டம் இருக் கத்தான் செய்யும்! ஆனால் மானமுள்ள எந்த அரபு நாட்டவனும் உன் பாவச செயலல மன்னிக்க மாட்டான்!

**கிளி:** இறுதியாக என்ன கூறுகிறாய்?

**சதாம்:** அமெரிக்க எதிர்ப்பில் உறுதியாக இருப்போம்! கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரை வீரர்களாகவே வாழ்வோம்! வீழ்ந்தாலும் வீரர்களாகவே வீழ்வோம்!

**கிளி:** எங்கள் விமானப்படை உம்நாட்டை சின்னாபின்னமாக்கிவிடும் ஜாக்கிரதை!

**சதாம்:** தரையால் வருவதற்கு வக்கில்லாத வல்லரசே! உன் வீரம் இவ்வளவுதானா? முடிந்தால் உன் நாட்டு படையை மட் டும் தரைவழியால் தனித்து அனுப்பி வைத்துப்பார், அப்போது தெரியும் எங்கள் பலம்! பாலைவனத்திலேயே மரணப் படுக்கை காத்திருக்கும்! வாலை சுருட் டிக் கொண்டு உன் படை ஓடவேண்டி யிருக்கும்!

**கிளி:** சதாம் என்னை கோபப்படுத்துகிறாய். சினம் கொண்ட கழுகு என்ன செய்யும் தெரியுமா?

**சதாம்:** சீற்றம் கொண்ட சிங்கத்தின் தீனி யாகிவிடும்! ஹாஹாஹா.

**கிளி:** நான் சூடாகிக் கொண்டிருக்கிறேன்.

**சதாம்:** பக்கத்தில் என்ன மோனிகாவா, நல்லது ஃபோனை அவளிடம் கொடும்.

**கிளி:** ஏன் கொடுக்க வேண்டும்?

**சதாம்:** உம்மை குளிர்விக்க சில யோசனைகள் கூறத்தான்!

(சிரித்தபடியே தொடர்பை நிறுத்துகிறார், கிளின்ரன் ஆங்கிலத்தில் சஸ்புஸ் என்று கத்தியபடி ஃபோனை தூக்கி தரையில் அடிக்கிறார்)

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)



அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331

## பிளவு

இயற்கை அழிவுகளில் மிகப் பயங்கரமானது நில நடுக்கம். பூமி அதிர்ச்சி என்றும் கூறுவார்கள். நிலத்தைப் பிளந்து, மலைகளைச் சரித்து, பெரும் கட்டங்களை இடித்துத் தகர்த்து மனித வாழ்வையே சிதைத்துச் சீரழித்துவிடுகிறது.

பூமி அதிர்ச்சி ஏன் ஏற்படுகிறது?

பூமியின் உள்பாகத்தில் பல படலங்கள் எப்போதும் நகர்ந்து கொண்டுள்ளன. இவை ஒரே சீரான படலங்களாக இருந்தால் ஒன்றன் மேல் மற்றொன்று ஏறி நகர்ந்து விடும். கரடு முரடான அமைப்புக் கொண்ட படலங்கள் ஒன்றுடன் ஒன்று மோதும்போது அப்பிரதேசத்தின் மேல் பகுதி அசைகிறது. இந்தக் கட்டத்தில் தான் பூமி அதிர்ச்சி ஏற்படுகிறது. நிலத்தின் மேல் பகுதியில் பேரழிவு ஏற்படும்.

கடலின் கீழ் உள்ள படலங்கள் மோதும்போது கடலில் மலை போன்ற உயர அலைகள் எழுந்து கரையை அண்டியுள்ள நிலப்பகுதியை பயங்கரமாகத் தாக்கி அழிக்கும்.

அமெரிக்கா சான் ஃபிரான்ஸிஸ்கோ மாநிலம் நிலநடுக்கப் பிரதேசமாகும். சில வருடங்களுக்கு முன்னர் அங்கு ஏற்பட்ட நில நடுக்கத்தின்போது பூமி இவ்வாறு பிளந்து காணப்பட்டது.

நம் நாட்டில் பூமி அதிர்ச்சி குறைவாக இருந்தாலும் போர் அதிர்ச்சியால்தான் பூமியே கலங்கி நிற்கிறது.



## புதுரகம்



தண்டவாளத்தில் தான் ரயில் ஓடும். இது பழங்கதை. இப்போது தண்டவாளத்தைத் தொட்டு உரசாமலே அதன்மீது பறந்து செல்லும் ரயில் வந்துவிட்டது. ஜப்பானிலும் ஜேர்மன் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் இதுவும் பழைய கதை. நமக்கு இது புதிய கதைதான்.

இவ்வாறு தண்டவாளத்தைத் தொடாமலே பறக்கும் ரயிலுக்கு மக்லெவ் (MAGLEV) ரயில் என்று பெயரிட்டுள்ளனர். 'மக்*' என்றால் மக்னெட் (அதாவதுகாந்த சக்தி) 'லெவ்*' என்றால் அந்தரம். காந்த சக்தியால் அந்தரத்தில் மிதப்பது என்பது பொருள்.

தண்டவாளத்தின் ஓரங்களில் காந்த சக்தி கொண்ட தூண்கள் இடைவெளி விட்டுப் பொருத்தப்பட்டிருக்கும். அதேபோல் ரயிலின் அடிப்பாகத்தில் (சக்கரங்களுக்குப் பதிலாக எதிர்முனை காந்த சக்தியுள்ள துண்டுகள் இணைக்கப்பட்டிருக்கும். இவை இரண்டு காந்தத் துண்டுகளும் எதிரும் புதிருமாக இருக்கும். இவற்றுக்கான காந்த சக்தி தரப்பட்டதும் இவை ஒன்றையொன்று கவர்ந்திழுக்கும்.

இத்தகைய ரயில்கள் துரித கதியில் ஓடுவதற்கு எதிரும் புதிருமான காந்த சக்திகளின் இயக்கம் தான் காரணம்.

படத்தில் காணப்படும் MLU 002 ரயில் வண்டி, 400 கிலோ மீட்டர் வேகத்தில் பறந்து செல்லும் சக்திபடைத்தவை.



ரயில்கள் பற்றி மேலதிக தகவல்கள் சில:

மக்லெவ் ரயில்தான் தற்பொழுது பயணிகளுடன் அதிவேகமாகப் பறந்து செல்லும் ரயில் என்று உலக சாதனை படைத்துள்ளது. ஆனால் இதன் (400 கிலோமீட்டர்) வேகத்தை விட மேலும் வேகமாக ஓடக்கூடிய ரயில்கள் பரீட்சார்த்தமாக ஓட்டப்படுகின்றன.

1990, மே 18ம் திகதி துகஜு அற்லான்ரிக் என்ற ரயில் ஃபிரான்ஸில் பரீட்சார்த்தமாக ஓட்டப்பட்ட போது, ஆகக் கூடுதலாக 515.3 கிலோமீட்டர் (320.2 மைல்) வேகத்தில் ஓடியது. ஆனால் இப்பொழுது பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் இவ்வண்டி ஆக 300 கிலோமீட்டர் (186 மைல்) வேகத்தில் தான் செலுத்தப்படுகிறது.

இவை எல்லாம் மின் சக்தியால் இயக்கப்படுபவை. ஆனால் பிரிட்டனில் அதிவேகமான டீசல் ரயில்கள் ஓடுகின்றன. அவற்றின் வேகம் மணிக்கு 23 கிலோமீட்டர் (148 மைல்)


ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657

## அரிது

பார்த்ததுமே அபூர்வமான பறவை என்பது தெரிந்துவிடுகிறதல்லவா.

தென்மேற்கு ஆபிரிக்காவில்-நமீபியப் பாலைவனத்தை ஒட்டியுள்ள சிறு பற்றைகளில் இப்பறவை வசிக்கிறது.

தன் கூட்டில் வசிக்கும் குஞ்சுகளின் தாகம் தீர்க்குமுன்னர் தானே தாகம் தீர்த்துக் கொள்ளுகிறது. தன் வாயினால் மட்டுமல்ல- நீரில் நன்றாகக் குளித்து, இறகுகளை ஈரமாக்கிக் கொள்ளுகிறது.

கூட்டை அடைந்ததும் குஞ்சுகளை அணைத்தபடி, இறகுகளில் ஒட்டியிருக்கும் நீரைக் குஞ்சுகள் பருக வைக்கிறது.

இவ்வாறு இக்குருவி ஒரே கல்லில் மூன்று காய்களை வீழ்த்துகிறது. தனது உடலைக் குளிர வைக்கிறது; குஞ்சுகளை அணைக்கும்போது அக்குஞ்சுகளின் உடல் வெப்பத்தைத் தணிக்கிறது. அத்துடன் குஞ்சுகளுக்கு வேண்டிய நீராகாரத்தையும் தந்து விடுகிறது. பறவைகள் பலவிதம். பல குணம்.



## தையத்தக்கா

இன்றைய உலகில் பொம்மைகள் மிக உன்னதமானதோர் இடத்தைப் பிடித்துள்ளன. ஆரம்பகாலத்தில் குழந்தைகள் கையில் விளையாட்டுப் பொருளாகப்பயன்பட்ட பொம்மை இன்று கலைப்படைப்புகளாக மாறி வருகின்றன. முக்கியமாக பொம்மைகள் உயிருள்ளனவோ என்று எண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

ஒரு சிறுமியும் இரு குழந்தைகளும் ஒன்றாக-விளையாடும் போது-கரடியாக நுழைந்த ஒரு கமரா அவர்களுடைய விளையாட்டை நிறுத்திவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. படத்திலுள்ள சிறுமியும் இரு குழந்தைகளும் பொம்மைகள்தான் என்று நாம் சத்தியம் செய்து கூறினாலும் நீங்கள் நம்ப மாட்டீர்கள். அவ்வளவு உயிரோட்டமாக இவை உருவாக்கப் பட்டுள்ளன.



சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பொம்மை வடிவமைப்பாளர் ஹெய்டி ஒட் இதனை உருவாக்கியுள்ளார்.

மனிதர்களும் பொம்மைகள்தான். இயற்கை, செயற்கை போன்ற சூழல்களாலும், கோபம், போட்டி, பொறாமை போன்றவற்றாலும் ஆட்டிப்படைக்கப்படும் பொம்மைகள்தான். மனிதப் பொம்மைகளுக்கு பொம்மைகளுடன் விளையாட ஆசை. அந்த ஆசைக்கு ஏற்ப விதம் விதமான பொம்மைகள் உருவாக்கப்பட்டுவருகின்றன.

## 1 வது பிறந்தநாள் வாழ்த்து



யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைச் சேர்ந்த பற்குணராஜா-மஞ்சுளா தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் **மிதுன்** தனது முதலாவது பிறந்தநாளை **24.12.1998** அன்று கனடாவிலுள்ள தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா,

### மிதுன் பற்குணராஜா

அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், இலங்கையிலுள்ள பாட்டா, பிரேமிச் சித்தி மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் மகா கணபதி அருள்பெற்று ஆயகலைகளும் கற்று பல்லாண்டுகாலம் சிறப்புற வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

*தகவல்: பிரேமிளா, சேனாதிராஜா (இலங்கை)*

தீக்கோழி பறவை இனங்களில் மிகப் பெரியது. இதற்கு சிறகுகள் இருந்தாலும் பறக்க முடிவதில்லை. காரணம் இதன் உடலின் எடையைத் தூக்கி மேலே எழுவதற்கு இதன் இறகு சக்தியற்றது. பெரும்பாலும் பாலவனத்திலேயே வாசம் செய்யும் தீக்கோழி மிக வேகமாக ஓடும்.

தீக்கோழிகளின் கால்கள் அதிக உறுதியும் பலமும் கொண்டவை. பலம் என்றால் சாதாரண பலமல்ல. தனது காலால் ஒரே அடியில் மனிதனைக் கொன்றுவிடும்.

தீக்கோழியின் இறைச்சிக்கு உலகில் அதிக கிராக்கி இருக்கிறது. இதனால் இவற்றை இறைச்சிக்காகவே வளர்க்க பல பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாலைவனங்களில் தீக்கோழியைப் பிடிப்பது மிகவும் கலபம். இவை மிக வேகமாக ஓடுவதனால் இவற்றைத் துரத்திப் பிடிக்க முன்னர் ஒட்டகங்களில் ஏறிச் சவாரி செய்வார்கள். இப்போது பாலைவன மணலில் ஓடுவதற்கேற்ற ஜீப் வண்டிகள் உள்ளன.

தீக்கோழி வேகமாக ஓடிச் சென்று களைத்தவுடன் தனது தலையை மணலில் புதைத்துக் கொள்ளும்.

தன்னைப் பிடிக்க வருபவர்களிடமிருந்து தான் தப்பிக் கொண்டுவிட்டதாக அது நினைத்துக் கொள்ளுமாம். தனது உடல் முழுமையாக வெளியில் இருப்பதைப் பற்றி அதற்குத் தெரியாது.

துரத்திவருபவர்கள் இப்பிராணியை 'லபக்' என்று பிடித்துவிடுவார்கள். தீக்கோழி மணலில் தலையைப் புதைக்கும் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த காட்சியை அநேகமாக கண்டிக்க மாட்டீர்கள். இங்கு படத்தில் உள்ளது அந்த அரிய காட்சிதான்.

சரி, தீக்கோழியை யாருக்கு ஒப்பிடலாம். தப்புக்களை செய்துவிட்டு இனிப்பான பேச்சுக்களுக்குள் தம்மை மறைத்துக் கொண்டால், உலகம் தம்மை இனம்காணாது என்று நினைப்பவர்களையும் ஒப்பிடலாமல்லவா.

## தலைமறைவு

